22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



Join Our Brokerage - Real Estate Needs

416.315.9397

www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca



நதி 22 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2012


# மனித உரிமை சபையில் அமெரிக்க அரசின் பிரேரணை!

தற்போது நடைபெறும் 19ஆவது மனித உரிமை சபையின் மாநாட்டில் அமெரிக்க அரசு சமர்ப்பித்துள்ள பிரேரணை மூன்று அம்சங்களை கொண்டுள்ளன. அவையாவன, இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் (LLRC) கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை அமல்படுத்தி இலங்கை மக்களுக்கு நீதி நியாயம் மற்றும் சம உரிமைகள் கிடைப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசை கேட்டுக்கொள்ளுதல். நல்லிணக்க அறிக்கையில் கூறியவற்றை



விரைவாக நடைமுறைப்படுத்துவதற்குரிய திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதுடன் அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்குமாறு இலங்கை அரசை கேட்டுக்கொள்ளுதல். ஐ.நா மனித உரிமை சபைக்கான ஆணையாளரை இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டிய உதவியும் ஊக்கமும் அளித்து அவை எவ்வாறு அமல்படுத்தப்படுகின்றன என்று ஒரு அறிக்கையை மனித உரிமை சபையின் 22ஆவது மாநாட்டில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்.

மனித உரிமை சபை பெரும்பாலும் வருடத்திற்கு மூன்றுமுறை மாநாடுகளை நடத்துகின்றது. அவை மார்ச், யூன் மற்றும் செப்ரெம்பரில் நடைபெறும். இலங்கை அரசு எவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியது என அறிக்கையை மனித உரிமை சபையின் 22 ஆவது மாநாடு மார்ச் 2013 இல் நடைபெறும் போது சமர்ப்பிக்கவேண்டும்.

இப்பிரேரணையை நிறைவேற்றுவதற்கு மனித உரிமை சபையிலுள்ள 47 நாடுகளில் 24 நாடுகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும். தற்போது நடைபெறும் 19ஆவது மனித உரிமை சபையின் மாநாடு மார்ச் 23, 2012 ஆம் திகதி நிறைவு பெறும்.

மனித உரிமை சபையில் 13 ஆபிரிக்க நாடுகளும் 13 ஆசிய நாடுகளும் 6 கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் 8 லத்தீன் அமெரிக்க மற்றும் கரிபியன் நாடுகளும் 7 மேற்கு ஐரோப்பிய மற்றைய நாடுகளுமாக 47 நாடுகள் உள்ளன. ஒரு நாடு மனித உரிமை சபையில் மூன்று வருடங்களுக்கு அங்கத்தவராக இருக்கலாம். ஐக்கியநாடுகள் சபையில் தற்போது 193 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. இவ் 193 நாடுகளிலும் மனித உரிமை சம்பந்தமான நிகழ்வுகளை அவதானித்து அந்நாடுகள் மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டிய உதவியும் ஊக்கமும் அளிப்பதுவே இந்த ஐ.நா மனித உரிமை சபையின் முக்கிய குறிக்கோளாகும்.

## சனல் 4 இன் புதிய ஆவணப்படம்!

“சிரியாவில் போர்க்குற்றம் நடந்தால் உடனே குரல் கொடுக்கிறோம். ஆனால், 3 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் நடந்த இனப்படு கொலைகளை பற்றி வாய்திறக்க மறுக்கிறோம். இந்த அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்காக, ஒரு பத்திரிகையாளனாய் இந்த அநியாயங்களுக்கு நியாயம் தேடி தருவேன்,” என்று “இலங்கையின் கொலைக்களங்கள்” ஆவணப்படத்தை தயாரித்த ஜோன் ஸ்னோ கூறுகிறார். இலங்கை அரசின் போர்க்குற்றங்களை உலகுக்கு உணர்த்த கிடைத்த வலுவான ஆயுதம், “சனல் -4” வெளியிட்ட “இலங்கையின் கொலைக்களங்கள்” என்ற ஆவணப் படங்கள்.

முதலாவது ஆவணப் படம், இங்கிலாந்து, அமெரிக்கா, நோர்வே போன்ற பல நாடுகளின் நாடாளுமன்றங்களில் திரையிடப்பட்டு, இலங்கைக்கு எதிரான பல விவாதங்களும் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து, இப்போது மீண்டும் சனல்-4 “இலங்கையின் கொலைக்களங்கள் - தண்டிக்கப்படாத குற்றங்கள்” என்ற ஆவணப்படத்தை இரண்டாவது பாகமாக மார்ச் 14, 2012இல் வெளியிட்டது. இந்த வெளியீட்டுக்கு முன்னர் கடந்த மார்ச் 11, 2012 ஆம் திகதி, ஜெனீவா மனித உரிமை திரைப்பட விழாவில் இப்படம் திரையிடப்பட்டப்போது, “இதைப் பார்ப்பதற்கே கல்லாக்கி கொண்ட மனம் வேண்டும்” என்று மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து கூறியுள்ளனர்.

சனல் 4 வெளியிட்ட ஆவணப்படத்தின்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated



RBC Royal Bank®

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்

Gteat Options for all your Mortgage needs

- Lowest interest rates and best prepayment options.
- 1st time Home buyers.
- Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paski.kanagasabapathy@rbc.com



வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated



Sales & LEASING

MARKVILLE TOYOTA

KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585



துரித பணமாற்றுச் சேவை

- 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

MONEY TRANSFER

3228 Eglinton Ave. E. #3
416.267.8221

3351 Markham Rd. #109
416.321.8221



இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# அப்பிள் நிறுவனத்தின் புதிய ஐ பாட்

## The New IPad

அப்பிள் தனது அடுத்த "புதிய ஐ பாட்" ரப்லட்டினை சென் பிரான்சிஸ்கோவில் மார்ச் 08 இல் நடைபெற்ற நிகழ்வில் அறிமுகப்படுத்தியது. ஆரம்பத்தில் இதன் பெயர் "ஐ பாட் 3" அல்லது "ஐ பாட் எச்.டி" ஆக இருக்குமெனக் கூறப்பட்டது. எனினும் இது "ஐ பாட்" என பெயரிடப்பட்டுள்ளமையானது பலருக்கும் வியப்பாக இருந்தது. காரணம் அப்பிளின் முதல் ரப்லட்டின் பெயரும் "ஐ பாட்" ஆகும் சில சாதனங்கள் வெளியாகிய பின்னரே மாதிரிகளின் தோற்றத்துடன் ஒப்பிடும் போது பெரிய அளவில் மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. எனினும் இதில் அனைவரது கவனத்தினையும் ஈர்த்தது "ஐ பாட்"டின் திரையாகும்.

அப்பிளின் ஐ போன் கொண்டுள்ள "ரெட்டினா" வகை திரையையே இதுவும் கொண்டுள்ளது. இதன் ரெசலூசன் (Resolution) 2048 x 1536 என்பதுடன் இத்திரையின் படவணு அடர்த்தி (Pixel density) 264 ஆகும். இது தற்போது சந்தையில் உள்ள பல எச்.டி. தொலைக்காட்சி களை விடத் துல்லியமானதாகும்.




ஆர்வத்தை ஏற்படுத்தும். ஆனால் சில தயாரிப்புகள் வெளியாவதற்கு முன்னரே ஆர்வத்தை ஏற்படுத்தும். அப்பிளின் தயாரிப்புகள் இரண்டாவது வகையே. அப்பிள் தயாரிப்புகள் வெளியாவதற்கு முன்னரே அது தொடர்பில் பல்வேறு வதந்திகள் வெளியாவது இயல்பே. கடைசியாக வெளியாகிய "ஐ பாட்" உம் இதற்கு விதிவிலக்கல்ல. தற்போது வெளியாகியுள்ள ஐ பாட்டுடன், அவ்வதந்திகளை ஒப்பிடும்போது சில உண்மையாகி உள்ளன.

அப்பிளின் முன்னைய வெளியீடுகளான ஐ பாட், மற்றும் ஐ பாட் 2 வரிசையிலேயே இதுவும் வெளியாகியுள்ளது. முன்னைய

இவ்வருட ஜனவரி மாதம் வரை சுமார் 55 மில்லியன் ஐ பாட்களை அப்பிள் விற்பனை செய்துள்ளது. அதன் முன்னைய ரப்லட்களுக்கும் சந்தையில் நல்ல கேள்வி நிலவுகின்றது. இந்நிலையில் தற்போது புதிய "ஐ பாட்" டையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது விற்பனைக்கு வர இன்னும் சில வாரங்கள் ஆகலாம். இது சந்தையில் நல்ல வரவேற்பைப் பெறுகின்றதா என, எனவே பொறுத்திருந்து பார்ப்போம்.

# மனித உரிமை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டாவது பாகத்தின் மூலம் அம்பலமாகும் இலங்கை அரசின் போர்க்குற்றங்கள்.

### சிறுவன் பாலச்சந்திரன் திட்டமிட்டு படுகொலை!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இரண்டாவது மகன் "பாலச்சந்திரன் பிரபாகரன்", பிரபாகரன் மகன் என்பதாலே கொடுமைப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவரருகே ஐந்து பேரின் சடலமும் கைகள் கட்டப்பட்டு நிர்வாண நிலையில் இருக்கின்றன. அவர்கள் பாலச்சந்திரனின் மெய்க்காவலர்களாக இருக்கக்கூடும் என்று சேனல் 4 குறிப்பிட்டுள்ளது.

பாலச்சந்திரனின் உடம்பில் 5 குண்டுகள் பாய்ந்துள்ளன. பாய்ந்த குண்டுகள் அனைத்தும் 2 முதல் 3 அடி தொலைவில் இருந்தே பாய்ந்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இதில் உடல் அளவிலான சித்திரவதைகளுக்கு சாட்சியங்கள் இல்லை என்றாலும் "பிரபாகரன் மகன்" என்பதாலே மனதளவில் மிகவும் துன்புறுத்தப்பட்டிருக்கிறார் என்று அறியப்படுகின்றது. இக்கொலை மே 17, 2009 அன்று நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது.

### திட்டமிட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்!

"எந்தவித எச்சரிக்கையும் விடப்படாமலே "திட்டுமிட்டு பொதுமக்கள் மீது குண்டுகள் வீசி தாக்குதல் நடைபெற்றுள்ளது. அதுவும் மருத்துவமனை என்று அறிந்தும், அதன் மீதே குண்டுகள் வீசப்பட்டுள்ளன. ஏப்ரல் 22, 2009 ஆம் திகதி இலங்கை அரசு "வலிமை வாய்ந்த குண்டுகள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை, பொதுமக்கள் யாரும் கொல்லப்படவில்லை" என்று சொல்லியதே, அப்படியென்றால் குண்டுவீச்சுத் தாக்குதல் யாரால் நடத்தப்பட்டது? இந்த தாக்குதலுக்கு யார் உத்தரவு கொடுத்தது? என்று வினவியுள்ளது சனல் 4.

பாதுக்காப்பு வலயங்கள் (No Fire Zone) பகுதியில் அடைக்கப்பட்ட தமிழர்கள் உணவின்றி, குண்டுவீச்சுத் தாக்குதலில் சிதறுண்ட உடல் பாகங்களுக்கு மருந்து இல்லாமல் பலர் வலியாலும், பசியாலும் இறந்துள்ளனர். இலங்கை அரசின் கணக்கின்படி 60,000 தமிழர்கள் பாதுக்காப்பு வலயங்களில் இருந்துள்ளனர். ஐ.நா.வின் கணக்குப்படி 120,000 தமிழர்கள் இருந்துள்ளனர். இப்பொழுது எங்கே அந்த மக்கள் என்ற கேள்வியை முன்வைத்துள்ளது இந்த ஆவணப்படம்.

பாதுகாப்பு வலயங்களில் இருந்த பதுங்கு குழிகள், மக்களை காக்க ஐ.நா அமைத்த பதுங்கு குழிகள் என எல்லா பதுங்கு குழிகளின் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடைபெற்றுள்ளன. சரத் பொன்சேகா போரில் எவ்வித வலிமையான ஆயுதங்களும் பயன்படுத்தவில்லை என்று சொல்லிவிட்ட பிறகே ஐ.நா. பதுங்கு குழிகள் மீது தொடர் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இத்தாக்குதல் நடக்கும்போது பீட்டர் மக்கே என்ற ஐ.நா.வின் அவுஸ்திரேலிய பணியாளரால் இதை நிறுத்தக்கோரி பல அழைப்புகள் கொழும்புக்கு விடப்பட்ட பிறகும், அங்கிருந்து சற்று தள்ளி அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

### இப்படத்தை இயக்கிய கல்லம் மெக்ரே என்ன சொல்கிறார்?

இலங்கையில் பொதுமக்களின் படுகொலைகளுக்கு ஐ.நா.வும் மேற்குலகின் நடவடிக்கை இன்மையுமே முக்கிய காரணம் என்று "இலங்கையின் கொலைக்களங்கள்" ஆவணப் படத்தின் இயக்குனர் கல்லம் மெக்ரே குற்றம்சாட்டுகிறார்.

தனது ஆவணப் படங்கள் குறித்தும், இலங்கையின் போர்க்குற்றங்கள் பற்றியும் அவர் விரிவாக அளித்துள்ள பேட்டியில், "இது திட்டமிட்டு செய்யப்பட்ட படுகொலைகள். "இலங்கை ராணுவம் ஒழுக்கமானது, ஒருங்கிணைக்கப்பட்டது, போரை நானே வழிநடத்தினேன்," என்று கூறும் மகிந்த ராஜபக்ஷே தொடங்கி, கோத்தபாய ராஜ பக்ஷே, சரத் பொன்சேகா உத்தரவுகளின் படியே இந்தக் கொலைகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மக்களுக்கு சர்வதேச சமூகம் தவறு செய்தது உண்மை, ஆதாரங்கள் இருக்கின்றன. ஐ.நா. பதுங்கு குழிகள் என அனைத்து பாதுக்காப்பு வலயங்களிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் திட்டுமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதேபோல் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள், போராளிகள் கொல்லப்படவேண்டும் என்றே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
இந்த வீடியோக்கள் எதுவுமே பொய்யானது அல்ல. இது இலங்கை ராணுவத்தை சேர்ந்த

விளம்பரம்
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

### வாசகர்கள் எண்ணங்கள்!

விளம்பரம் ஆசிரியர் அவர்களுக்கு,

வெகுளாமை (Calm ) - 9
எடுத்ததுக்கெல்லாம் கோபம் கொள்ளும் கணவருடன் முப்பதிரெண்டு வருடங்கள் நரகவேதனை அனுபவித்து, வாழ்ந்து, பின் பிரிந்து வாழும் மனைவியின் சோகக் கதையை அகணி அவர்கள் 01 - 03 - 2012 இல் வெளிவந்த 'விளம்பரம்' பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார். இப்படியான மூர்க்க குணமுள்ள குடும்பத்தின் குழந்தை செல்வங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக அமைந்து, வேதனையில் வாடுவதை நாம் கண் கூடாகக்காண்கிறோம். இப்படியான தொடர் கட்டுகரைகளை வெளியிட்டு பலரும் பலனடையவும், சிந்திக்க வைக்கும் அகணி அவர்களுக்கும், விளம்பரத்திற்கும் நன்றி.

- பத்மநாதன் தம்பையா

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# வாகனங்களின் *PLUG IN* எதிர்காலம்!




சந்திரனைக் கையில் பிடித்துக்காட்டி சாதம் ஊட்டியது ஒரு காலம். சந்திரனைக் கையால் பிடிக்கலாமா? அது ஒரு காலம். நம்புவதற்கு இயலாத காலம். 1968 இல் முதலடி வைத்து அமெரிக்கர் நீல் ஆம்ரோங், தாயின் சொல்லை உண்மை ஆக்கியது. எதனை மனிதமனம் கற்பனை செய்யுமோ. அதனை வேறு ஒரு காலத்தில் உண்மையாக்குவது தான் இந்த விஞ்ஞான வளர்ச்சி.

அதன் ஒரு படிதான் PLUG IN இன் எதிர்காலம். Hybrid மகிழுந்து. அடுத்தது PLUG IN மகிழுந்து.

எரிபொருளின் விலை அதிகரிப்பு, எலெக்றிக்கல் மகிழுந்துவின் பெருமையை யும், தேவையையும் அதிகரிப்பது இயல்பானதே.

அண்மை வெளியீடான Toyota's Prius உம் விரைவில் வெளிவர இருக்கும் Chevrolet Volt உம் வாங்குனர்களின் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. இந்தவகை மகிழுந்துகள் பகுதியாக மின்சாரத்தில் இயங்குவதனைக் காணலாம்.

PLUG IN தொழில்நுட்பம் எல்லா மகிழுந்துகளிற்கும் இன்றைய நிலைமையில் போதுமானதா? அத்துடன் இவை போதியளவு வசதியுள்ளதாக காணப்படு கின்றதா? எதிர்காலத்தில் வெளிவர இருக்கும் 100% மின்சார சக்தியில் இயங்கும் மகிழுந்துகளை மின்னேற்று வதற்கு (Charge) போதியளவு PLUG IN கள் காணப்படுகின்றனவா?

எனவே எதிர்காலத்தில் நிர்மாணம் செய்யப்பட இருக்கும் அடுக்கு மாடிக் கட்டிடங்கள், உள்ளரங்க கட்டிடங்கள், சினிமாக் கொட்டகைகள் போன்றவை வெகுவிரைவில் வெளிவர இருக்கும் PLUG IN மின்சார சக்தியில் இயங்கும் மகிழுந்துகளை மின்னேற்றுவதற்கு அதிகமான மின்செருகி (Electrical Outlet) களை நிர்மாணம் செய்யும் கட்டிங்களில் இணைக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான கட்டிடங்களிற்கு போதியளவு அனுகூலங்கள் உண்டு.

இன்றைய கணக்கின்படி Ontario Power Grid இன் வலுவைக் கொண்டு கணக்கிடும்போது 10 மில்லியன் வரையான மகிழுந்துகளை PLUG IN செய்து மின்னேற்றலாம். அத்துடன் After Hours, Off Peak Hours இல் மகிழுந்துகளை மின்னேற்றுவதால் மின்சாரத்தின் பாவனையை அதிகரிக்கலாம். 120V அல்லது 240V ஐக் கொண்டு மின்னேற்றக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். கனடாவில் தொழில் நுட்பத்திலும், விஞ்ஞானம் சம்பந்தமான விடயங்களை முதன்முதலில் நடைமுறைப்படுத்துவதிலும் வன்கூவர் நகரம் முன்னோடி என்றே கூறவேண்டும்.

இதன்முதற்படியாக வன்கூவரில் நிர்மாணம் செய்யப்படும் ஒவ்வொரு வீடுகளும் PLUG IN வசதிகள் கொண்டே அமைக்க வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வந்துள்ளது. அடுத்து அடுக்குமாடி மனைகளில் உள்ள வாகன தரிப்புகளில் (Parking) 20% ஆனவை PLUG IN வசதிகள் கொண்டு இருத்தல் வேண்டும்.

ஒன்ராறியோ அரசு $10,000 வரை Rebate உம் வழங்கி வருகின்றது. இதனால் Building Code இல் மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பழைய அடுக்கு மாடிக்கட்டிடங்களிற்கும் வீடுகளிற்கும் புதிய இணைப்புகள் செய்து PLUG IN இல் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே புதிய Electric Car எதிர்காலத்தில் வேகம் எடுக்கும். அத்துடன் வீடு நிர்மாணம் செய்பவர்களும் மேலதிக விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பு - 1. 2018 இல் கிட்டத்தட்ட 500,000 High Plug கள் தேவைப்படலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

2. 240V ஐ வழங்கும் Ovtlet ஐ வீட்டிற்கு இணைக்க கிட்டத்தட்ட $750 தேவைப்படலாம்.

3. மக்கள் நடமாடும் இடத்தில் இணைக்கப்படும் Public Charging Unit ஐ இணைக்க $3500 வரை தேவைப்படலாம்.

## மனித உரிமை...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒருவரால் எடுக்கப்பட்டது. பயங்கர வாதத்துக்கு எதிராக மேற்குலகம் நடத்திய உலகளாவிய போரை காரணமாக வைத்துக் கொண்டு ராஜபக்ஷே அரசு, அப்பாவி மக்களையும், விடுதலைப் புலிகளையும் படுகொலை செய்துள்ளது. இது திட்டமிட்ட இனப்படுகொலை," என்று அவர் தனது பதித்துள்ளார். இந்த ஆவணப் படங்களில் உள்ள காட்சிகள் உண்மை தான் என்பதை, மூத்த தடயவியல் நிபுணர் பேராசிரியர் டெரிக் பௌன்டர் ஆராய்ந்து உறுதி செய்துள்ளார்.

ஆவணப்படத்தின் இராண்டாவது பாகத்தை கண்ட ஐ.நா மனித உரிமைச் சபையின் முன்னாள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அதிர்ச்சியுற்று கூறுகையில், "யுத்தம் முடிவுக்கு வந்து 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து, இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற தயாராகவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித முக்கிய செயற்பாடுகளை இலங்கை அரசு செய்யாத நிலையில், குற்றச்சாட்டுக்கள் குறித்தான ஒரு சுதந்திரமானதும் நம்பக மானதுமான விசாரணையை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் பொறுப்பும் சர்வதேச சமூகத்துக்கு இருக்கிறது.

இலங்கைப் போரின் இறுதியில் இடம்பெற்ற கொடுமையான மனித உரிமை மீறல்கள் சம்பவங்களுக்கான நீதியே கிடைக்காத வரை, இலங்கை அரசு கூறுகின்ற இன நல்லிணக்கம், சமாதானம் என்பது எல்லாம் தமிழர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று," என்கிறார் அவர்

உறுப்புத் தானம் வழங்கும் ஒருவர் எட்டு உயிர்கள் வரையில் காப்பாற்ற முடியும்.

பிரதான மதங்களில் பெரும்பாலானவை உறுப்பு மற்றும் இழையத் தானம் செய்வதை ஆதரிப்பது ஏனெனில் அதனால் இன்னொரு உயிரைக் காப்பாற்ற முடியும்.

இம்மதங்களில் அடங்குவன:

கத்தோலிக்க மதம்
இந்து மதம்
இஸ்லாமிய மதம்
சீக்கிய மதம்
புத்த மதம்

இதுபற்றி மேலும் அறிவதற்கு அல்லது தானம் வழங்குவதற்கான உங்கள் ஒப்புதலைப் பதிவு செய்வதற்கு இங்கு சென்று பாருங்கள்:

GiftofLife.on.ca

ஒன்ராறியோ அரசினால் நிதி வழங்கப்பட்டது

Ontario
Trillium Gift of Life Network

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# குழந்தைகள் வளரட்டும் குதூகலாமாக!

இலட்சிய மனிதர்களாக உங்கள் குழந்தைகளை உருவாக்குவது எப்படி என்கிற கேள்வி உங்களுக்குள் எழலாம். முதலில் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிறந்த குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல, உங்கள் மூலமாக வந்திருக்கிறார்கள். அது உங்களுக்குத் தரப்பட்ட பெருமையே தவிர அதனை ஒரு உரிமையாக நீங்கள் கருதக்கூடாது. அவர்கள் உங்கள் உடைமைகளும் அல்ல.

குழந்தைகள் வளருகிறபோது பெரும்பாலான பெற்றோர்கள் அவர்களுக்கு எதையாவது கற்றுத்தர வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் உங்கள் குழந்தைகளோடு உங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். யார் அதிக ஆனந்தமாக இருக்கிறீர்கள், நீங்களா உங்கள் குழந்தைகளா? உங்களைவிட உங்கள் குழந்தை ஆனந்தமாக இருக்கிறது என்றால், வாழ்க்கைக்கு ஆலோசகராக இருக்கிற தகுதி குழந்தைக்குத்தான் இருக்கிறது.

ஒரு குழந்தை பிறக்கிறது என்றால் அது கற்றுக் கொடுப்பதற்கான நேரம் அல்ல, நீங்கள் கற்றுக் கொள்வதற்கான நேரம். நீங்கள் எப்படி சிரிப்பது என்பதையே மறந்து விட்டீர்கள், எப்படி விளையாடுவது என்பதையும் மறந்து விட்டீர்கள். ஒரு குழந்தை வருகிறபோது இவற்றை நீங்கள் மறுபடியும் கற்றுக் கொண்டு அற்புதமான மனிதராக மலரலாம். மாறாக மனிதர்கள் குழந்தைகளை பெரியவர்கள் போல நடந்து கொள்ள வைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். வாழ்க்கையை நீங்கள் புரிந்து கொண்ட விதங்களில் உங்கள் குழந்தைகளை வளர்க்க முற்படாதீர்கள். அவர்கள் என்னவாக வேண்டுமோ அப்படி ஆகட்டும்.

வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஒரு குழந்தைக்கு நீங்கள் எதைக் கற்றுக் கொடுத்துவிட முடியும்? பிழைப்புக்கு என்று சில தந்திரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உலகோடு உங்களுக்கிருக்கும் தொடர்பு காரணமாக அந்த தந்திரங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் அவை உங்களை எந்த விதத்திலும் வாழ்க்கைக்கு நெருக்கமாக கொண்டு சேர்க்கவில்லை. உங்களை விட உங்கள் குழந்தை வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. அதற்கு கற்றுக் கொடுப்பதற்கு பதில் நீங்கள் கற்றுக் கொள்ளத் தொடங்கினால், அன்பும் ஆதரவும் கனிந்த ஒரு வலிமையான உறவை அந்தக் குழந்தையுடன் வளர்த்துக் கொண்டால், அதுவே உங்கள் குழந்தைக்கு நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த விஷயம்.

நீங்கள் வளர்ந்து வந்த பருவத்தில் உங்களுக்குள் ஏதாவது சிக்கல் இருந்தால் நீங்கள் உங்கள் பெற்றோரை அணுகினீர்களா அல்லது நண்பர்களை அணுகினீர்களா? உங்களில் பெரும்பாலானவர்கள் உங்கள் நண்பர்களைத்தான் அணுகியிருப்பீர்கள். ஏனென்றால் உங்கள் பெற்றோருக்கு எதுவும் புரியவேயில்லை. அவர்களும் அதே அபத்தங்களை 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு கடந்து வந்திருப்பார்கள். ஆனால் அவற்றை மறந்துவிட்டு ஏதோ வேறொரு கிரகத்தில் இருந்து வந்தது போல் விசித்திரமாக நடந்து கொள்வார்கள்.

பெற்றோர்கள் இப்படி நடந்து கொண்டால் பிள்ளைகள் வெளியில்தான் உதவி தேடிப் போவார்கள். தங்கள் நண்பர்களிடம் ஆலோசனை கேட்பார்கள். அந்த நண்பர்களும் உங்கள் குழந்தை போலவே குழப்பத்தில் இருப்பதால் வழிகாட்டுதல் எந்த விதத்தில் இருக்கும் என்று உங்களால் கணிக்க முடியாது. தனக்குத் தெரிந்ததை அது சொல்லும். எனவே மிகச் சிறந்த வழி என்னவென்றால், உங்களை எளிதாக அணுகும் விதத்தில் இணக்கமான நல்லுறவை குழந்தைகளோடு வளர்த்துக் கொள்வதுதான். குழந்தைகளிடமிருந்து மரியாதையை எதிர்பார்க்காதீர்கள். அன்பை எதிர்பாருங்கள்.

குழந்தைகள் தங்களை மதித்து நடக்க வேண்டும் என்று பெரும்பாலான பெற்றோர்கள் கருதுகிறார்கள். குழந்தைகளுக்கு சில ஆண்டுகள் முன்னதாக பூமிக்கு வந்தீர்கள். உடலளவில் குழந்தையைவிட பெரிதாக இருக்கிறீர்கள். பிழைப்புக்கு சில தந்திரங்களை தெரிந்து வைத்திருக்கிறீர்கள். இவற்றைவிட எந்த விதத்தில் நீங்கள் உங்கள் குழந்தையைக் காட்டிலும் மேம்பட்டிருக்கிறீர்கள்?
உங்கள் இயல்புகளை குழந்தைகளின் மீது திணிக்காமல் நட்புரீதியான உறவை உருவாக்கிக் கொண்டால், அவர்கள் தவறான பாதைக்கு போக வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. அதே நேரம் 100% உத்திரவாதம் கிடையாது. எப்போது ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டீர்களோ அப்போதே சில அபாயங்களுக்கும் நீங்கள் தயாராக வேண்டும். ஏனென்றால் உங்கள் குழந்தையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தப் போவது நீங்கள் மட்டுமல்ல, உங்கள் வீதி தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது, தொலைக்காட்சி தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது, அக்கம்பக்கத்தில் இருப்பவர்களும் பள்ளியில் இருப்பவர்களும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறார்கள். இப்படி லட்சக்கணக்கான தாக்கங்கள்



**சத்குரு வாசுதேவ்**

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

**தொடர்ச்சி 18ஆம் பக்கம்**

# ஈஷா அறக்கட்டளையின் பத்திரிகை குறிப்பு
# சத்குருவுடன் ஈஷா யோகா

"தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஆன்மீக புரட்சி ஏற்பட்டு அதன் மூலம் அன்பு, அமைதி, ஆனந்தம் உணரப்பட வேண்டும். தமிழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியா மற்றும் உலக மக்கள் அனைவரிடமும் இந்த ஆனந்தம் மலர வேண்டும்" என்பது சத்குரு அவர்களின் விருப்பமாகும். மனித வாழ்க்கை முழு வீச்சில் நடைபெற வேண்டும் என்றால் பொருளாதாரத்தில் முன்னேறினால் மட்டும் போதாது. அதை தக்க வைத்துக் கொள்ள உற்சாகம், மன உறுதி போன்றவையும் வேண்டும். அனைத்திற்கும் மேலாக சிறந்த ஆன்மீக பலமும் தேவை. இதை போதனைகளோ கட்டுப்பாடுகளோ கொண்டு வந்துவிடாது. சரியான ஆன்மீக தொழில்நுட்பத்தின் வாயிலாகத்தான் செய்ய முடியும். ஆன்மீகம் என்றால் அது மலைமேல் இருப்பவர்களுக்கு, குகைகளில் வசிப்பவர்களுக்கு என்று இருந்த நிலைமை மாறி ஈஷாவின் முயற்சியினால் ஊருக்குள், வீதிக்குள், வீட்டுக்குள், வந்துவிட்டது. ஆன்மீகமாக வாழ்பவர் இயற்கையாகவே ஆனந்தமாகத்தான் வாழ்வார். எனவே தமிழகத்தில் ஒவ்வொருவருமே சிறிதளவு ஆன்மீகத்தையாவது சுவைத்திட வேண்டும் என்னும் முயற்சியில் சத்குரு அவர்களே, தமிழகத்தின் பல நகரங்களில், பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஈஷா யோகா வகுப்புகளை தமிழில் எடுத்து வருகிறார். இந்த ஈஷா யோகா வகுப்பில் தொன்மை வாய்ந்த ஷாம்பவி மகாமுத்ரா பயிற்சி கற்றுத்தரப்படவுள்ளது. சத்குரு அவர்களே நேரடியாக கலந்துகொண்டு, வகுப்பினை நடத்துவதோடு, தியான தீட்சையும் வழங்கவிருப்பது தனிச்சிறப்பாகும்.

ஏற்கனவே இந்த வகுப்பு மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் சத்குரு அவர்களால் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. மதுரை மற்றும் திருச்சி நகரங்களில் தலா 10,000க்கு மேற்பட்டோரும், சென்னை நகரில் 14,000க்கு மேற்பட்டோரும், கலந்து கொண்டனர். ஈஷா யோகா வகுப்பின் சில பயன்கள் மிகவும் தொன்மையான ஷாம்பவி மகாமுத்ரா பயிற்சி வாழ்க்கையை மாற்றியமைக்கக் கூடிய அளவில் சக்தி வாய்ந்ததாகும். நாட்பட்ட நோய்களான ஆஸ்துமா, உயர் இரத்த அழுத்தம், நீரழிவு, மூட்டு வலிகள், தலைவலி, சைனஸ், முதுகுவலி, இருதயக்கோளாறு, உடற்பருமன் மற்றும் தீராத நோய்களும் குணமடையவும், வராமல் தடுக்கவும் முடியும். நினைவாற்றல், மனம் குவிப்புத்திறன், முடிவெடுக்கும் திறன் ஆகியவை சிலவாரப் பயிற்சிகளிலேயே 100 வீதம் வரை அதிகரிக்க முடியும்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்களில் எவ்வித மாற்றமும் தேவையில்லை. எந்த மதமானாலும், எந்த இனமானாலும், எந்த பிரிவானாலும் இந்த யோகப் பயிற்சிக்கு தடை இல்லை. இப்பயிற்சி அனைவரும் முற்றிலும் பரிசோதித்து அனுபவபூர்வமாக அறியக்கூடிய விஞ்ஞானமாகும்.

இந்நிகழ்ச்சியில் பங்கு பெற விரும்புவோர் கவனிக்க வேண்டியவை:

- முன் பதிவு அவசியம்.
- தடையின்றி 15 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் பங்கேற்கலாம்.
- மே 11, 12, 13 - 2012 சத்குருவுடன் ஈஷா யோகா வகுப்பு நடைபெற உள்ளது.

தமிழ் வகுப்பு விபரங்கள்: தேதி: மே 11, 12, 13 - 2012
இடம்: Scarborough Convention Centre
20 Torham Place (Neilson & Finch),
Scarborough, ON M1X 0B3
தொடர்புக்கு: 416-300-3010 / 647-857-ISHA(4742)/ www.ishafoundation.



சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை

உந்த கடன் தொல்லையால ஒரே தலையிடி, உழச்சு உழைச்சு பாங்குக்கும் கிரடிட் காட்டுக்கும்தான் வட்டி கட்டுறன். ! !

இண்டைக்கு போவம் நாளைக்கு போவம் எண்டு இழுத்தடிக்காமல் லீவு எடுத்தாலும் பரவயில்லை உந்த மோட்கேஜ் கிளினிக்கிக்கு போனால்தான் உந்த தலையிடி மாறும். ....

வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

# மோட்கேஜ் கிளினிக்

கொன்சுயுமர் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை வீட்டுக்குள்ளிருந்து எடுத்து கட்டலாமா ?

அவசரமாக ஒரு பத்தாயிரம் வரையில தேவைப்படுகுது , மோட்கேஜை பிரேக் பண்ணாமல் எடுக்கலாமா ??

வந்துபேசிப்பாருங்கோ ! பிடிச்சிருந்தா ........... மேல பேசுவம் ! ! !

அழையுங்கள்

**416-644-3555**

22 ⇦ Ext ⇨ 28





**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc.® ⟹ "Rapid Response; Rapid Results"

# இந்துக்களின் சண்ட மாருதம்!

## Hindus Battles!

## விளையாட்டுத்தகவல் 324

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையான மாபெரும் கிரிக்கட் துடுப்பாட்ட போட்டி இம்முறை பங்குனி 2ம், 3ம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



முதலாவது இன்னிங்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. கொக்குவில் இந்து சார்ப்பாக அணித்தலைவர் பங்குஜன் சிறப்பாக விளையாடி 98 ஓட்டங்களையும், ஜனுதாஸ் அதிரடியாக விளையாடி 6 ஆறு




ஓட்டங்கள் உள்ளடங்கலாக 38 பந்துகளில் 61 ஓட்டங்களையும், ராகுலன் 37 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். இந்து சார்பாக வாமணன், ருக்ஸ்மன் தலா 3 விக்கெட்டுகளையும், நிலாஜனன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். அதனைத்தொடர்ந்து களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மிக சிறப்பாக விளையாடி 8 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களுடன் தனது முதலாவது இன்னிங்சை இடைநிறுத்திக்கொண்டது. யாழ். இந்து




சார்பில் ஜஸ்மினன் சிறப்பாக விளையாடி 127 ஓட்டங்களையும், கிருசோபன் 65 ஓட்டங்களையும் மதுஷன் 64 ஓட்டங்களையும் பெற்றனர். கொக்குவில் இந்து சார்பில் பார்த்தீபன் 3 விக்கெட்டுகளையும், ராகுலன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி 8 விக்கெட் இழப்புக்கு 265 ஓட்டங்களை பெற்றது. இதில் கொக்குவில் இந்து சார்பாக ராகுலன் 82 ஓட்டங்களையும், ஆதித்தன் 47 ஓட்டங்களையும், திவாகர் 25 ஓட்டங்களையும், பங்குஜன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ் இந்து சார்பாக சிந்துஜன் 4 விக்கெட்டுகளையும், ருக்ஸ்மன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் நிறைவுற்றது. வெற்றிக்கேடயத்தை பிரதம விருந்தினராக கலந்துசிறப்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் திரு. கிருபாகரன் அவர்கள் இரு அணிதலைவர்களுக்கும் வழங்கினார்.

சிறந்த துடுப்பாட்டக்காரருக்கான விருது கொக்குவில் இந்துக் கல்லூரி அணித்தலைவர் பங்குஜனுக்கும், சிறந்த பந்துவீச்சாளருக்கான விருது யாழ். இந்துக் கல்லூரியின் பந்துவீச்சாளரான சிந்துஜனுக்கும், போட்டியின் ஆட்டநாயகனுக்கான விருது யாழ். இந்துக் கல்லூரியின் ஜஸ்மினுக்கும் வழங்கப்பட்டது. உதயன் பத்திரிகையால் வழங்கப்படும் சதம் பெறும் வீரனுக்கான ரூபா 25,000 பணப்பரிசில் யாழ். இந்து வீரன் ஜஸ்மினனுக்கு வழங்கப்பட்டது.

## ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொக்குவில் இந்து வெற்றி

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி இடையேயான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஏழு இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.




நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்ததன்படி துடுப்பெடுத்தாடி 46 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 229 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 42 பந்துப்பரிமாற்றத்தில் மூன்று இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.




இதனால் கொக்குவில் இந்து மூன்று இலக்குகளால் யாழ். இந்தக் கல்லூரியை வெற்றி கொண்டது. கொக்குவில் இந்துவின் சார்பில் அணித்தலைவர் பங்குஜன் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களைப் பெற்றார். யாழ். இந்துவின் சார்பில் ஜஸ்மினன் அதி கூடிய ஓட்டங்களாக 84 ஓட்டங்களைப் பெற்றார்.



**எஸ். கணேஷ்**

# 10 வருட அடமானக்கடன் - 3.99%

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 362**

மீண்டும் அதே நிலை. எதுவித மாற்றமும் இல்லை. இதுவே மார்ச் 2012 இல் கூடிய மத்திய வங்கி ஆளுனர் திரு. மார்க் கார்ணியினதும் அவரின் பொருளாதார குழு உறுப்பினர்களினதும் முடிவாக இருந்தது. ஒவ்வொரு வருடமும் எட்டு (8) தடவை கனடிய பொருளாதார நிலைமைக்கேற்ப மத்திய வங்கியின் வட்டிவீதத்தை சரிசெய்வதே வழமை. செப்ரெம்பர் 2010 இற்கு பிற்பாடு கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதத்தில் எதுவித மாற்றங்களும் ஏற்படுத்தவில்லை. இதுவே வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படுத்தாத நீண்ட காலமாகக் காணப்படுகின்றது. மத்திய வங்கியின் வட்டிவீதம் 1% ஆகவே கடந்த 18 மாதங்களாகக் காணப்படுகின்றது. இன்றைய முதன்மை வட்டிவீதம் 1% + 2% = 3% ஆகும். இந்த வருடத்தின் (2012) ஆரம்பத்தில் மொன்றியல் வங்கி (Bank of Montreal) 5 வருடத்திற்குரிய மாறாத அடமானக் கடனை (5 Yer Cloed Mortgage) 2.99% ஆகக் குறைத்தது. இதனைத் தொடர்ந்து கனடிய முக்கிய வங்கிகள் தமது வட்டிவீதத்தையும் குறைத்தன. இதனால் மொன்றியல் வங்கியின் அடமானக் கடன் அதிகரித்தது. ஜனவரி 2012 உடன் இந்த குறைந்த வட்டிவீதத்தை வங்கிகள் நிறுத்திக் கொண்டன. மார்ச் 06, 2012 இல் மத்திய வங்கியின் ஆளுனரின் வட்டிவீதம் பற்றிய அறிக்கை வெளியிட்டபிற்பாடு மீண்டும், அடமானக் கடனின் போர் (Mortgage Fight) தொடங்கியுள்ளது. இது நுகர்வோரிற்கு உகந்தது. அத்துடன் ஆதன வியாபாரமும் சூடுபிடிக்கத் தொடங்கும். பொதுவாக இளவேனிற்காலத்தில் வியாபாரம் மிகவும் ஆரோக்கியமாகவே காணப்படுவது. அத்துடன் வட்டிவீதக்குறைப்பும் சேரும்போது, ஏற்கெனவே விற்பவர்களிற்கே சார்பாக இருக்கும். ஆதன வியாபாரம், மேலும் அவர்களிற்கே சாதகமாக அமையும். கடந்த மாதம் (பெப்பரவரி 2012) இல் ஆதனத்தில் Bidding War நடந்து வருகின்றது.

ஸ்காபரோ, நோர்த்யோர்க் போன்ற பகுதிகளில் சிறந்தமுறையில் பராமரித்து, சிறந்த இடத்தில் அமைந்துள்ள வீடுகள் 10 இற்கு மேற்பட்ட Offerகளை காணுகின்றது. ஒரு சந்தர்ப்பத்தில் 31 Offer வந்த நிலையும் காணப்பட்டது. நோர்த்யோர்க்கில் $759,900 சந்தைக்கு கொண்டு வந்த வீடு, $1.18 மில்லியனிற்கு விற்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல உதாரணங்களை கடந்த இரு மாதங்களில் சொல்லக்கூடியதாக உள்ளது.

எனினும் புதிய அடுக்குமாடிக் கட்டிடங்கள் வாங்கும் போது, கட்டப்படும் நிதி நிறுவனத்தின் பொருளாதார நிலைமை, ஏற்கெனவே நிர்மாணம் செய்து, விற்று இருந்தால் அவர்களினால், Closing Date காலத்தில் கொண்டுவரப்பட்ட மேலதிக செலவுகளை (சுமைகளை) கவனமாகக் கவனத்தில் கொள்ளவும். புதிதாக வாங்கும் வீடு, மனைகளில் குறிப்பாக முதலீடு செய்பவர்கள் மேலதிக GST இரண்டாவது Land Transfer Tax என்பனவற்றை மிக மிக கவனத்தில் கொள்ளவும்.

அனுபவமிக்க உங்கள் ஆதனப்பிரதிநிதியுடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கவும். தொடர்ச்சியான வியாபார விளம்பரத்தந்திரங்களில் கவனமாக இருக்கவும்.

இம்முறையும் Bank of Montreal அடமானக்கடனை முதல் தடவையாக 2.99% இற்கு குறைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து முன்னணி வங்கிகளும் குறைத்துள்ளன. இதுவே வியாபாரப் போட்டி. நுகர்வோர்களுக்கு நன்மையான விடயம். அத்துடன் முன்னணி வங்கிகள் 10 வருடத்திற்குரிய அடமானக் கடனை 3.99% ஆகக்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

HomeLife/GTA Realty Inc. Brokerage* *Independently Owned & Operated



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

CONDO. FOR SALE
MIDDLEFIELD & FINCH
2 Bedroom + Den condo. for rent.
2 Washrooms.
Asking Price $229,900.

SPACE FOR LEASE
HWY 401 & DUFFERIN.
From 10,000 Sq.ft space for lease. Storage, temple, church. Reasonable rent.

FOR LEASE
GTA SQUARE MALL
5215 Finch. Ave. East.
Renovated Unit And unfinished.
* 2nd floor. 2 Rooms. Telephone connected. Rent Starting From $850

CONDO. FOR SALE
MCCOWAN & ELLESMERE



1 Bedroom
1 Washroom condo. for sale.
Asking price $259,900

SPACE FOR LEASE
Embassy Store Building
5200 Finch. Ave. East.
1. 749 sq.ft. Rent Only $983.
2. 2000 sq.ft. Available on the mainfloor. Many uses.
3. Reasonable Rent.

CONDO. FOR SALE
LAKE SHORE & PARK LAWN



2 Bedroom
1 Washroom condo. for sale.
2 Balconies.
Asking price $348,900.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# யாழ் சுமந்த பையனைத் தேடி

## இலங்கை திரும்பிய பி.பி.சி. சிங்கள சேவை ‘சந்தேசய’ பொறுப்பாளர் - பிரியத் லியனகே



2009 வைகாசி மாதம் இலங்கை உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, அது தொடர்பான ஒலியொளிப் பதிவுகளை ஓடவிட்டுப் பார்த்த (பி. பி. சி. சிங்கள சேவை ‘சந்தேசய’ பொறுப்பாளர்) பிரியத் லியனகேயை ஒரு காட்சி ஆட்கொண்டது. யாழ் சுமந்த சிறுவன் ஒருவன் போர்க்களத்தை ஊடறுத்து நடந்துசெல்லும் காட்சியே அவரை ஆட்கொண்டது. ஈராண்டு கழித்து அந்தச் சிறுவனை இனங்காண முடியுமா? ஒரேயொரு இசைக் கருவியுடன் அத்துணை ஆபத்தான பயணத்தை அவன் மேற்கொண்டது எதற்காக?



பிரியத் லியனகே

இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்களில் பின்னடைந்த புலிகளுடன், தமது வீடுகளிலிருந்து விரட்டபட்ட 300,000 வரையான தமிழ் மக்கள், நாட்டின் வடபுலத்தில், ஒரு சிறு கடற்கரைப் பகுதியில் அகப்பட்டுக் கொண்டார்கள்.

சிலர் விடுதலை செய்யப்பட்டார்கள். பிறர் தப்பியோடினார்கள். எஞ்சியோருக்கு, பொறிபறக்கும் சமரிடையே முன்னகரும் அரச படையினரை நோக்கி அடியெடுத்து வைப்பதை விட வேறு வழி கிடைக்கவில்லை. குண்டுத் தாக்குதல்களிலும், அவற்றுக்கு இடையிலும் அகப்பட்டவர்களுள் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்பது இன்னும் தெளிவுபடத் தெரியவில்லை.

இலங்கை உள்நாட்டுப் போர் நீடித்து நிகழ்ந்த ஒன்று. இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த சமர் புறச் சாட்சிகளின்றிப் புரியப்பட்ட ஒன்று. அறிக்கைகளின்படி, புலிகளுக்கு மனித கேடயமாக விளங்கிய பொதுமக்களின் கதை பெரிதும் சொல்லப்படவில்லை.

சுதந்திரமான, வெளியுலக ஊடகங்களும், அநேகமான சர்வதேச உதவி அமைப்புகளும் சமர்க்களத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அத்தகைய சூழ்நிலையில், மக்கள் அல்லற்பட்ட செய்திகள் எல்லாம் படையினருடன் ஊடாடிய அரச ஊடக நிருபர்கள் அனுப்பிய அறிக்கைகள் ஊடாகவே வெளிவந்தன.

ஓரிரவு ஒளியொலி நாடாக்களை நான் ஓடவிட்டுப் பார்த்தபொழுது, ஒரு சின்னஞ்சிறு பையன் யாழ்ப்பெட்டி ஒன்றைத் தோளில் சுமந்தபடி சமர்க்களத்தை ஊடறுத்து அடியெடுத்து வைப்பது என் கண்ணில் பட்டது.

அனைத்தையும் துறந்து அந்த யாழ்ப்பெட்டியை அவன் தேர்ந்தெடுத்த சங்கதி என்னை ஆட்கொண்டது: உயிராபத்தை எதிர்கொண்ட மக்கள் தங்களால் எடுத்துச்செல்லக்கூடிய ஒரேயொரு பொருளைக் கையில் எடுக்கையில், அவனோ அந்த இசைக்கருவியைத் தூக்கிச்சென்றான். அத்துணை அருமந்த பொருளா அது? அவன் கதையை நான் அறிய விரும்பினேன்.

அந்தச் சிறுவனைக் கண்டறிய உறுதிபூண்டு, அவனுடைய மங்கிய நிழற்படம் ஒன்றுடன், நான் இலங்கை திரும்பினேன். இந்த இசைக்குழல் போன்ற கருவிகள் போரை ஊடறுத்து மீந்தவை

தலைநகர் கொழும்பிலிருந்து வடக்குநோக்கி 160 மைல் (258 கிலோமீட்டர்) தூரத்தில் அமைந்துள்ள எல்லைப்புற நகராகிய வவுனியாவில் என் தேடுதலை நான் ஆரம்பித்தேன். ஒரு காலத்தில் அங்கே அமைந்திருந்த பெரிய சோதனைச் சாவடி ஒன்று, முன்னர் புலிகள் வசமிருந்த புலத்தை, நாட்டின் எஞ்சிய புலத்திலிருந்து பிரித்து நின்றது. போர் முடிந்து ஈராண்டுகளுக்கு மேல் கழிந்த பின்னரும் அந்த சோதனைச் சாவடி செயற்பட்டு வருகிறது. இங்கு வந்து செல்லும் ஒவ்வொருவரின் அடையாளமும் கருத்தூன்றிப் பரிசோதிக்கப்படுகிறது. அங்கிருந்து இலங்கை யின் வடக்கெல்லையில் அமைந்துள்ள யாழ்ப்பாண மா நகரத்துக்கு, தமிழ் மக்களின் நடுநிலையத்துக்கு நான் புறப்பட்டேன்.

போரின்பொழுது தனது கருவிகள் அனைத்தையும் இழந்த முன்னாள் இசை நெறியாளுநர் ஒருவர் தற்பொழுது ஒரு பள்ளிக்கூடத்தில் பணியாற்றி வருகிறார். அவர் தெரி வித்த துப்பே எனக்குக் கிடைத்த துப்புகளுள் சிறந்தது. நிழற்படத்தில் உள்ள சிறுவனை அவர் அடையாளம் காட்டவில்லை. அதேவேளை நன்கு உடுத்துப்படுத்து அவனுடன் அடியெடுத்து வைப்பவர் சிறீ குகன் எனப்படும் இசைஞர் என்று அவர் அடையாளம் காட்டினார்.

எனினும் சிறீ குகனுடன் தொடர்புகொள்ள எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. என்னுடன் அவர் தொடர்புகொள்ள விரும்பவில்லை. தனது செல்பேசியை அவர் வேறு நிறுத்தி வைத்துவிட்டார்.

படையினர் நிரம்பிவழியும் யாழ்ப்பாணத்தை ‘திறந்தவெளிச் சிறை’ என்று சிலர் விபரிப்பதுண்டு. கருத்துமாறுபாடு எதையும் புலிகள் சகித்ததில்லை.

வலுச்சமநிலை மாறியும் கூட, அசண்டைப் பேச்சின் விளைவுகளை எண்ணி மக்கள் இன்னமும் அச்சம் அடைகிறார்கள்.

‘இம்மியும் தண்டனைப்பயமின்றி இங்கு குற்றங்கள் இழைக்கப்படுகின்றன’ என்கிறார் பெயர்போன திரைப்பட நெறியாளுநர் இ. கேசவராசன். மிரட்டலுக்கு உள்ளாகியிருக்கும் வடபுலம் பற்றி அவர் வெளிப்படையாகவே பேசுகிறார்.

‘நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டதாக அரசியல்வாதிகள் மாத்திரமே கூறிக் கொள்கிறார்கள். வடுப்பட்ட எங்கள் இதயங்களோ இன்னமும் ஆறவில்லை’ என்கிறார் அவர். ‘போரில் ஒரு காலை இழந்தவன் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு தடவையும் போரையே நினைப்பான்’ என்று தொடர்கிறது அவர் பேச்சு. கலைத்துறையில் ஈடுபட்ட பலருடன் தொடர்புடையவர் கேசவராசன். நிழற்படத்தில் சிறுவனுடன் நடப்பவர் புலிகளின் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் வீரா என்பவராக இருக்கலாம் என்கிறார் அவர்.

வீராவைக் கண்டறியும் முயற்சியும் எமக்கு ஏமாற்றத்தில் முடிந்தது. அவரும் எங்களுடன் பேசத் தயங்கினார். அவருடன் தொடர்புகொள்ள நாங்கள் பல தடவைகள் முயன்றோம். அவர் பிறகு வடபுலத்தை விட்டே அகன்றுவிட்டார் என்று கேள்விப்பட்டோம். கேசவராசன் அதை அறிந்து வியப்படையவில்லை. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் பலகலைக்கழக மாணவர் ஒருவர் தாக்கப்பட்டது பற்றி அவர் என்னிடம் தெரிவித்தார். பட்டப்பகலில் முகமூடி அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் படையினருடைய சோதனைச் சாவடி ஒன்றின் முன்னிலையில் வைத்து அந்த இளைஞன் தாக்கப்பட்டான். ‘மக்கள் அஞ்சுகிறார்கள். இம்மியும் தண்டனைப்பயமின்றி இங்கு குற்றங்கள் இழைக்கப்படுகின்றன’ என்கிறார் கேசவராசன். பார்வதி சிவபாதம் என்னும் வேறொரு கலைஞருடன் நான் பேசிப் பார்த்தேன். அவர் எண்ணிறந்த நேயர்கள் மிகுந்த ஓர்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

### கடைசிச் செய்தி!

இது ஒரு மகிழ்ச்சியான செய்தி. யாழ் சுமந்த பையன் மேகவர்ணனுடனும், அவரின் தாயார் ஜெயராணியுடனும் பி.பி.சி இன் தமிழ், சிங்கள சேவைகள் தொடர்புகொண்டு உரையாடியுள்ளனர். இது தொடர்பாக பிரியத் லியனகே இலங்கை செல்லத்திட்டமிட்டுள்ளார்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# யாழ் சுமந்த...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

இசைப்பாடகி. ஒரு காலத்தில் அவர் புலிகளின் பிரசாரப் பாடல்களைப் பாடிவந்தவர். அத்துணை மேன்மைவாய்ந்த இசைஞராகிய பார்வதி சிவபாதம் ஒரு மாளிகையில் வாழ்பவர் என்றே நான் கற்பனை செய்திருந்தேன். ஆனால் அவருடைய வீடோ ஒரு சின்னஞ்சிறிய தகரக் கொட்டில். போரின்பொழுது தனது நூல்கள், கருவிகள் உட்பட அனைத்தையும் அவர் இழந்துவிட்டார்.

'நாங்கள் கலைஞர்கள். பாட்டுப் பாடுவதைவிட எங்களால் வேறென்ன செய்ய முடியும்? அப்பொழுதெல்லாம் புலிகளுக்காக நான் பாட்டுப் பாடினேன். அந்தப் பாடல்களை இப்பொழுது நான் சிந்தித்தே பார்ப்பதில்லை. இப்பொழுதெல்லாம் பாரம்பரியப் பாடல்களையே நான் பாடுகிறேன். காலத்தைக் கடத்த வேண்டுமே!' என்கிறார் பார்வதி சிவபாதம். மற்றவர்கள் பலரைப் போல் களம்விட்டு நகர்ந்தபொழுது அவரும் காயப்பட்டார். ஒரே ஒரு கருவியையே அவரால் காக்க முடிந்தது. 'இந்த சுருதிப் பெட்டியைத்தான் என்னால் கொண்டுவர முடிந்தது. இதை ஒரு சின்னப் பையிலிட்டு நான் கொண்டுவந்தேன். எங்கும் தோட்டாக்கள் பறந்து கொண்டிருந்தன. ஆனாலும் இதைக் கொண்டுவர நான் உறுதிபூண்டேன். இதுவே என் இதயத்துக்கு மிகவும் நெருக்கமானது. தேர்ந்தெடுக்க வேறெதுவும் இருந்ததாக நான் நினைக்கவில்லை" என்று சொல்கிறார் பார்வதி சிவபாதம்.

அந்த யாழ் சுமந்த சிறுவனோ எங்களுக்கு அகப்படவில்லை. மெனிக் பண்ணை அகதி முகாமில் இன்னும் அடைபட்டுள்ள 7,000 பேருள் அவன் ஒருவனாகலாம். எனினும் நாங்கள் அங்கு செல்வதற்குப் பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதி அளிக்கவில்லை. வீடுதிரும்பும் அனுமதிக்காக மக்கள் இன்னமும் அங்கு காத்துக் கிடக்கிறார்கள்.

மெனிக் பண்ணை அகதி முகாமில் ஓர் அகதியாய் இருந்த சிவரூபன் என்ற இசைஞரை நான் சந்தித்தேன். படத்தில் உள்ள சிறுவனையோ, அவனுக்குப் பக்கத்தில்



நடப்பவரையோ சிவரூபன் அடையாளம் காட்டவில்லை. அவர் தற்பொழுது தனது மனைவியுடனும், ஒரு வயது நிரம்பிய மகளுடனும் ஒரு தகரக் கொட்டிலில் வசித்து வருகிறார். போரின்பொழுது தனது குடும்பத்தவர்கள் பலரை அவர் இழந்துவிட்டார். சமர்க்களத்தை ஊடறுத்து நகர்ந்த அவர் உள்ளம் ஊறுபட்டுள்ளது. 'மக்கள்திரளுக்குள் சிக்கி அக்கா பின்னடைந்துவிட்டார். அவரை நான் மறுபடி கண்டதில்லை. காயப்பட்ட பலரை இறக்கவிட்டே நாங்கள் நகர நேர்ந்தது. இறந்த பலரின் உடல்களைக் கடந்து நாங்கள் நடந்து சென்றோம். யாருக்கு யார் உதவுவது என்பதை எங்களால் தீர்மானிக்க முடியவில்லை.' 'எனது நண்பன் காலை இழந்தான். எனக்கு கையில் சூடு பட்டது. தோளில் அவனை நான் சுமந்து சென்றேன். அப்படியிருந்தும் ஏனைய கருவிகள் அனைத்தையும் விடுத்து எனது இசைக்குழலை மட்டுமே நான் பற்றிக்கொண்டேன். இதை இசைத்தே என்னால் பிழைக்க முடியும்!" என்கிறார் சிவரூபன்.

படத்தில் உள்ள பையனைக் கண்டறியும் எங்கள் இறுதி முயற்சியாக நாங்கள் ஓர் அனாதை இல்லம் சென்றோம். சமரின்பொழுது பெற்றோரை இழந்த நூற்றுக் கணக்கான சிறுவர்கள் அங்கே வசிக்கிறார்கள். அங்கே யாழுடன் கூடிய சிறுவன் ஒருவனைக் கண்டோம். ஆனால் அவன் நாங்கள் தேடிய சிறுவனல்ல. நாங்கள் தேடிய சிறுவனோ இன்னமும் அந்த ஒலியொளி நாடாவில் மின்னிமறையும் சிறுவனாகவே விளங்குகிறான்! அவனைத் தேடிப்பிடிக்கும் நாட்டமே என்னை வடபுலம் எங்கும் கொண்டுசென்றது. உடல்களையும் முண்டங்களையும் கடந்துவந்த இசைஞர்கள் பலரை வழிநெடுக நான் சந்தித்தேன். இலங்கையில் போர் முடிந்து ஈராண்டுகளுக்கு மேலாகியும், வடுக்கள் ஆறவில்லை. இசை துஞ்சுகையில் எஞ்சுபவை எல்லாம் மக்கள் பட்ட வேதனை வழிவந்த புலம்பல்களே. யாழ் சுமந்த சிறுவனைக் கண்டறிய உதவுவீர்! அவனைக் கண்டறிய உங்களால் உதவ முடியும் என்று நினைத்தால், தொடர்புகொள்வீர்!

---

பிரியத் லியனகே, பி. பி. சி. சிங்கள சேவை
'சந்தேசய' பொறுப்பாளர்
தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை
தோற்றுவாய்:
***http://www.bbc.co.uk/news/world-asia-15818972***
நன்றி: குமுதம், சென்னை, 2012-03-07

---



# வாகனத்தில் செல்லும் சகலரும் ஆசனப்பட்டி அணியாவிட்டால்? தண்டனை?

## கனடிய தகவல் தொடர் 168



முன்னர் கார், வான் போன்ற வாகனங்களில் செல்லும் போது, சாரதியும் முன் ஆசனத்தில் அமர்ந்து போகின்றவர்கள் மட்டும் கட்டாயம் 'ஆசனப்பட்டி' அணிந்து கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தம் இருந்தமையால் பின் ஆசனங்களில் அமர்ந்து செல்பவர்கள் அனேகமானோர் ஆசனப்பட்டி தொடர்பாகவோ அல்லது அதன் முக்கியத்துவம் பற்றியோ சிந்திப்பதில்லை.

### முடிவு?

பலவிபத்துகள் நடந்திருக்கும். சாரதி உட்பட முன் ஆசனத்தில் இருந்தவர்கள் சிறு உராவல் காயங்களுடன் தப்பித்து கொள்ள, பின் ஆசனங்களில் ஆசன பட்டிகள் அணியாது இருந்தவர்கள் பலமாக காயமடைந்ததும், பல இடங்களில் உயிர் இழப்புகளை எதிர் கொண்டதும் கனடாவில் வசிக்கும் எம் இனத்தவர்கள் மத்தியிலும் நடந்து பலரும் அறிந்த விடயங்கள் ஆகும்.

இப்படிப்பட்ட ஏராளமான விபத்து அறிக்கைகளின் புள்ளி விபரங்கள் காரணமாக ஒன்ராரியோ மாகாண அரசு கடந்த டிசம்பர் - 01-2006 யில் இருந்து வாகனத்தில் செல்லும் சகலரும் சகல ஆசனத்தில் இருப்பவர்களும் ஆசனப்பட்டி அணிந்து கொள்ளல் வேண்டும் என்ற ஒரு சட்ட மூலத்தினை அமல் படுத்தியுள்ளது.

### ஆசனப்பட்டி அணியாது வாகனத்தில் செல்வோர் பிடிபட்டால் தண்டனை என்ன? (According to the ontario Traffic Law act (106)

தண்டனை பணம் $60 - $500 டொலர் வரை இரண்டு புள்ளி மதிப்பீடுகளை (Demerit points) இழக்க வேண்டிவரும்.

பதினாறு வயதுக்கு உட்பட்டவர் பிரயாணியாக சேர்ந்து போகும் போது ஆசனப்பட்டி அணியாது விட்டால் அதன் தண்டனையினையும் சாரதி மீதே சுமத்தி அவரே அதனை அனுபவித்து கொள்ள வேண்டும். பதினாறு வயதுக்கு மேற்பட்டவர் பிரயாணியாக சேர்ந்து போகும் போது ஆசனப்பட்டி அணியாவிட்டால், அவர் தொடர்பான தகவல்களை பெற்று நேரடியாக மேற்குறிப்பிடப்பட்ட தண்டனை வழங்கப்படும் (தகவல்களை பெறும் அதிகாரம் பொலிசாருக்கு இருப்பது என்பதும் வழங்கியே தீர வேண்டும் எனவும் சட்டம் வலியுறுத்துகின்றது).

ஒன்ராரியோ மாகாண அரசின் வீதி ஒழுங்கு சட்டப் பிரிவு 106 என்பது

• ஆசன பட்டியின் அணிதல் என்பது எப்படி இருத்தல் வேண்டும் (கழுத்து பகுதியிலிருந்து அதனை பொருத்தும் நாரி வரை இருக்க வேண்டிய ஆசனத்திற்கு ஏற்ப இருத்தல் வேண்டும்)
• எந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு குழந்தைகளுக்குரிய (Child Seat Belt) ஆசனத்தில் பட்டியுடன் இருத்தல் வேண்டும் என்பது
• ஆசனபட்டி சரியாக வாகனத்தில் இல்லாதிருந்து கண்டுபிடிக்கப்பட்டால் தண்டனை
• இவற்றினை அணியாவிட்டால் தண்டனை
• ஆசனபட்டி அணிய தேவையில்லாத விதி விலக்குகள்.

போன்ற பல விடயங்களை தெளிவு பண்ணுகின்றது.

### குழந்தைகளுக்குரிய விசேட ஆசனமும் பட்டியும் (Child Booster Seat) எந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு கட்டாயம் இருத்தல் வேண்டும்?

• எட்டுவயதுக்கு உட்பட்ட குழந்தைகள்
• 36 கிலோ (80 இறாத்தல்) நிறைக்கு குறையாத குழந்தைகள்
• 145 சென்ரி மீற்றர் (4 அடி 9 அங்குலம் உயரத்திற்கு குறைவான குழந்தைகள்)

கண்டிப்பாக குழந்தைகளுக்குரிய விசேட ஆசனத்தில் (Child Booster Seat) இருத்தி பாதுகாப்பாக ஆசனப்பட்டி அணிந்து இருத்தல் வேண்டும்.

### ஒன்பது கிலோ (20 இறாத்தல்) நிறைக்கு உட்பட்ட மிகச் சிறு குழந்தைகள் 9 -18 கிலோ (20 - 40 இறாத்தல்) நிறைக்கு உட்பட்ட சிறுகுழந்தைகளின் விசேட ஆசனமும் பாதுகாப்பாக எப்படி பட்டி பொருத்தப்படல் வேண்டும் என்பதும் சட்டத்தினால் (Motor Vehicle Safety Standards Act) வலியுறுத்தப்படுகின்றது?

• எட்டு வயதினை கடந்த ஒரு பிள்ளை
• 36 கிலோ (80 இறாத்தல்) நிறைக்கு மேற்பட்ட ஒரு பிள்ளை
• 145 சென்ரி மீற்றர் (4' 9") உயரமுள்ள பிள்ளை

என்ற நிலையில் இருக்கும் பிள்ளைகள் காலை மடித்து சாதாரணமாக வசதியாக ஆசனத்தில் உட்காரலாம் என்ற நிலை உருவாகலாம் என எதிர்பார்ப்பதால் இவர்கள் விசேட ஆசனத்தில் அமர வேண்டிய தேவை இருக்காது. சாதாரண ஆசனப்பட்டியினை அணிந்து விட்டால் போதும் என சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.mto.gov.on.ca/english/safety/smart-love/index.shtml என்னும் இணையதளத்திற்கு நேரே செல்லும்போது குழந்தைகளுக்கான ஆசனம் (Child Booster seat) எப்படி தெரிவு செய்வது? எப்படி பாதுகாப்பாக பொருத்துவது? இதில் உள்ள சட்ட பிரச்சினைகள் போன்ற சகல விடயங்களையும் அறிந்து கொள்ளலாம்.

'Smart Love' என்னும் தலைப்பில் இக்குழந்தைகளுக்கான ஆசனம் தொடர்பாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தவிர பிரம்ரன் நகர அவசர தீயணைப்பு பிரிவினர் அண்மையில் இது தொடர்பான ஒளி (DVD) தட்டினை வெளியிட்டுள்ளனர்.

905.458.5580 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது Firelife@bramton.ca என்னும் முகவரிக்கு மின் அஞ்சலில் தொடர்பு கொண்டும் பெற்று கொள்ளலாம்.

### ஆசனப்பட்டி அணிய தேவையே இல்லாதவர்கள் யார்? யார்?

பின்வருவோர் அல்லது பின்வரும் நிலையில் இருப்போர் ஆசனப்பட்டி அணிய தேவையே இல்லை என்பது சட்டங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ராக்ஸி சாரதிகள்
(ஆனால் ராக்ஸியில் செல்லும் பிரயாணிகள் ஆசனப்பட்டி அணியாது பிடிபட்டால் பிரயாணிக்கே தண்டனை வழங்கப்படும். குழந்தைகளை ராக்ஸியில் கொண்டு போனால் குழந்தைகளுக்குரிய விசேட ஆசனமும் (Child Booster Seat) கொண்டு செல்ல வேண்டும் என்பதும் பிரயாணியின் பொறுப்பு. சட்டரீதியாக ராக்ஸி சாரதிக்கு இந்த பொறுப்பு இல்லை.

ராக்ஸியில் ஆசனபட்டி ஒழுங்காக இல்லாது விட்டாலேயே அதற்குரிய தண்டனையினை ராக்ஸி சாரதி எதிர்கொள்ள வேண்டிவரும்.

2. பொதுமக்கள் பிரயாணிகள் பேருந்துகளில் (Public Transportation bus like TTC) பிரயாணம் செய்வோர்.
3. அம்புலன்ஸ் சாரதிகள்
4. மருத்துவ ரீதியாக ஆதாரத்துடன் ஆசனபட்டி அணிய முடியாத நிலையில் நிரூபிப்பவர்கள்
5. வாகனம் பின்நோக்கி நகரும் போது
6. 40 கி.மீற்றருக்கு குறைவாக வாகனம் செலுத்தி அடிக்கடி இறங்கி ஏறும் நிலையில் தொழில் செய்வோர் (உதாரணம் வீட்டுக்கு வீடு பத்திரிகை விநியோகம், குப்பை எடுப்பவர்கள்)

இப்படி சிலருக்கு ஒரு விதிவிலக்கும் சட்டங்களில் உண்டு.

இவை தொடர்பாக மேலதிக தகவல்கள் பெற வேண்டுமாயின் www.mto.gov.on.ca என்ற இணையதளத்தினுள் சென்று பார்வையிடலாம் அல்லது 1.800.268.4686 என்னும் தொலை பேசிக்கு அழைத்தும் தகவல்களை பெறலாம்.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# தூக்கம் உங்களைத் தழுவட்டும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இன்றைய காலகட்டத்தில் தூக்கமின்றி தவிப்பவர்கள் ஏராளம். அதுவும் வயோதிப காலத்தில் அடியெடுத்து வைப்பவர் களுக்குத் தூக்கம் என்பது பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

**இவர்களுக்கு சில ஆலோசனைகள்**

1. பொதுவாக தூங்கும் போது இடக்கை பழக்கமுள்ளவர்கள் வலது புறமாகவும் வலக்கை பழக்கமுள்ளவர்கள் இடது புறமாகவும் தூங்க வேண்டும். அப்போது தான் உடலுக்கு நல்ல ஓய்வு கிடைக்கும்.

2. தூக்கமின்மைக்கு நரம்புதளர்ச்சியும் ஒரு காரணம். இவர்கள் வெங்காயத்தை நெய்விட்டு வதக்கி சாதத்தோடு பிசைந்து சாப்பிட்டால் நரம்புகள் பலப்படும். நல்ல தூக்கம் வரும்.

3. தூங்கச் செல்லும் முன் கசகசாவைத் தூள் செய்து பாலில் கலந்து அருந்தியபின் தூங்க வேண்டும்.

4. இரவு தூங்கும் முன்பு பசுப்பாலில் தேன் கலந்து அருந்தினால் நல்ல நித்திரை கிடைக்கும்.

5. இரவு தூங்கச் செல்லும் முன்பு இரண்டு உள்ளங்கால்களையும் நன்கு அழுத்தி தேய்த்து விடும்போது உடலுக்குப் புத்துணர்ச்சி ஏற்படும் அமைதியான தூக்கம் பெறலாம்.

6. தூங்கச் செல்லுமுன் தூங்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதையும் நினைக்கக் கூடாது. மனதிற்கு இனிய இசையைக் கேட்டால் சிறப்பான தூக்கம் பெறலாம்.

7. தூக்கத்திற்கு செல்லும் போது பகற்பொழுதில் நடந்தவற்றை நினைத்தால் கண்களை மூடினாலும் வெளிச்சத்தைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டுத் தூக்கத்தைக் கெடுக்கும்.

8. இரவு உணவு அருந்தியபின் இரண்டு முதல் மூன்று மணிநேரம் கழித்தே தூங்க வேண்டும். ஏனெனில் இரைப்பையில் உணவு இருந்தால் தூக்கத்தைக் கெடுக்கும். அதேபோல் பட்டினி இருந்தவாறு படுத்தாலும் ஆழ்ந்த பட்டினி இருந்தவாறு படுத்தாலும் ஆழந்த தூக்கம் ஏற்படாது.

### தூக்கத்தை வரவழைக்கும் பயிற்சி முறைகள்

1. படுக்கைக்குச் சென்றதும் மல்லார்ந்த நிலையில் உள்ளங்கைகள் இரண்டையும் வயிற்றின் மேல் இலேசாக வைக்கவும். இப்போது சுவாசக்காற்றானது உள்ளிழுக் கும்போது வயிற்றுப்பகுதி மேலெழுவதையும் அதனை வெளிவிடும்போது சுருங்குவதனை யும் உணரமுடியும். இந்த நிலையில் மனதின் எண்ணங்களை அதன் மீது செலுத்தவும். இவ்வாறு ஒரு சில நிமிடங்கள் முடிந்தவரை எண்ண அலைகளை நிலை நிறுத்த முயலும் போது சுவாசமானது ஆழமாகிக் கொண்டு போவதை உங்களால் உணர முடியும். இந்த நேரத்தில் நினைவு மனமானது (Conscious Mind) தனது செயல்பாடுகளிலிருந்து விடுபடுகிறது. இப்போது ஆழந்த தூக்கநிலை ஏற்படுகிறது. இதனை தொடர்ந்து பழகி வந்தால் படுத்ததும் 3 முதல் 4 நிமிடங்களில் தூக்கம் உங்களை அணைத்துவிடும்.

2. அடுத்ததாக யோகாசனப் பயிற்சிகளில் மிகவும் அற்புதமான பலன்களைத் தரக்கூடிய ஆசனம் 'விபரீத கரணி' ஆகும். இதனை தினமும் 5 முதல் 10 நிமிடங்கள் வரை செய்து வருபவர்களுக்குத் தூக்கம் ஒரு பிரச்சினையாக இருக்க வாய்ப்பில்லை.

### செய்முறை

விரிப்பில் மல்லாந்து படுக்கவும் பின்கால்கள் இரண்டையும் செங்குத்தாக மேலே தூக்க வேண்டும். உள்ளங்கைகள் இரண்டையும் இடுப்புப் பகுதியில் வைத்து முழங்கை களைத் தரையில் அழுத்தியபடி இருகைகளாலும் இடுப்புப் பகுதியை மேலே தூக்கவும். இப்போது நெஞ்சுப் பகுதி நாடிப்பகுதியுடன் முட்டிய நிலையில்



விபரீதகரணி
VEEBAREETHA KARANI

இருக்கும். இப்போது கண்கள் மேலேயுள்ள கால்களின் பெருவிரல்களையும் பார்த்தபடி இருக்கும். ஆரம்பத்தில் இந்த நிலையில் ஒரு சில வினாடிகள் பின் ஒரு நிமிடம் இரண்டு நிமிடம் என்று நாளடைவில் எண்ணிக்கையை அதிகரித்து 5முதல் 10 நிமிடங்கள் வரை நிறுத்தப் பழக வேண்டும். இந்த நிலையில் பின் கழுத்துப் பகுதி தரையை அழுத்தியபடி இருக்கும். எனினும் கழுத்தில் வலி ஏற்படும்வரை செய்யக் கூடாது. உடல்எடை அதிகமுள்ளவர்களுக்கு ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் நாளடைவில் இலகுவாகிவிடும்.

இந்த ஆசனத்தை படுக்கைக்குப் போகுமுன் செய்துவந்தால் மிகவும் நல்ல பலனைத் தரும். உணவு உண்டபின் 3 மணிநேரம் கழித்தே இதனைச் செய்ய வேண்டும்.

இதனைக் கடந்து சிறிது நேரம் தியானப் பயிற்சி (Meditation) செய்து வருபவர் களுக்கு படுத்ததும் ஒரு சில நிமிடங்களி லேயே ஆழ்ந்த தூக்கம் வந்து விடும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

TBC Toronto Business College

PSW
PERSONAL SUPPORT WORKER
உடனடி வேலை வாய்ப்பையும் உயர்ந்த ஊதியத்தையும் வாழும் சமூகத்திற்கு சிறந்த சேவையையும் ஆற்றக் கூடிய இலகுவான கற்கை நெறி
Certified by the National Association of Career Colleges.
Certificate recognized by Hospitals, Nursing Homes, Etc.
100% Co-op Placement
26 Weeks Program
CLASSES STARTING SOON



SECOND CAREER
• EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
• 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
• 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்.
Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

ODSP, WSIB Recepients & New Immigrants Welcome

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
26 WEEKS



JOB OPPORTUNITIES
• Accounts Clerk
• Accounts Receivable
• Accounts Payable
• Bookkeeper
• Payroll Clerk

MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA
32 WEEKS



• Computer Skills
• Office Systems
• Medical Terminology
• Medical Billing
• MO Adminstrative Procedure
• Co-op Available

Come Visit our Facility and Sit in One of Our Classes. Call Now to Make an Appointment!
Ample Free Parking
Small Class Size
4465 Sheppard Avenue East, Suite 208
Toronto (Sheppard & Brimley)
info@tbcollege.com www.tbcollege.com
416-291-5155
Registered as a Private Career College under the the Private Career College Act 2005

# உன் நாமத்தின் அடைமொழி என்ன?

மனிதர்கள் தத்தம் பெயர்களின் முன்னே மங்களகரமான அடைமொழிகளை போட்டுக் கொள்கின்றார்கள்.

அவை இடுகுறிப்பெயர்களின் முன்னேயும் இருக்கலாம் அல்லது காரணப்பெயராகவும் இருக்கலாம்.

இடுகுறிப்பெயர்:- அந்த வகையில் இடுகுறிப்பெயர்களின் முன்னே திரு - திருமதி, செல்வன் - செல்வி என்பன அமையும். காரணப்பெயர் சிலசமயம் இடுகுறிப்பெயரின் முன்பும் அல்லது தனித்தும் குறிக்கப்பட்டவரை சுட்டி நிற்கும். இவை மேல்நாட்டின் நாகரிகம் வந்ததோடு தொடங்கிவிட்டன.

அதற்கு முன்னர் மகா றீறீ... என்றோ அல்லது சௌ-சௌபாக்கியவதி எனும் சமஸ்கிருதமயப்பட்ட சொற்கள் வழக்கத்தில் இருந்தன. Mr - Mrs உடன் பெண்உரிமைவாதிகளால் புகுத்தப்பட்ட Ms அதாவது ஏன் நாம் விவாகமானவரோ அல்லரோ என்பதை விளம்பரப்படுத்த வேண்டுமா. அப்படி ஆண்கள் விளம்பரப்படுத்துகிறார்களா? எனும் கேள்விகள் இயல்பாகவே எழுந்தன.

செல்வன் - செல்வி, திரு - திருமதி என்பவற்றுள் ஆண்கள் இருபது வயதுவரை மட்டுமே செல்வன் என்பதை உபயோகிப்பர். ஒரு தொழில் பெற்றவுடனேயோ அல்லது இருபது வயது தாண்டியவுடனேயோ திரு என்பதை தமக்கு ஆக்கிக்கொள்வர். பெண்களோ விவாகம் ஆகும்வரை செல்வி எனும் அடைமொழியையே உபயோகிக்க வேண்டும். முதிர் கன்னியர் பலர் தமது 45,



கலையரசு சொர்ணலிங்கம்

50 வயதிலும் செல்வி என்பது முறையோ?

எமது பேராசியர் ஒருவர் இது பற்றி தீவிரமாக சிந்தித்தார். இது 1950ஆம் ஆண்டளவில் நடைபெற்ற சம்பவம். தமிழ் கற்பித்தல் பற்றியும் பாலர் பாடல் தொகுதி பற்றியும் நூல்கள் வெளியிட்டவர். மிகக் காத்திரமான கருத்துக்களை முகவுரையில் சேர்த்தவர். இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் அந்நூல்கள் பிரபலம் பெற்றிருந்தன. பாராட்டுக்கடிதங்களில் சில "இத்தினை சிறிய வயதிலும் இப்படி ஒரு அறிவுப்பெட்டகத்தை தமக்கு தந்ததற்காக பாராட்டுகிறோம்" என வந்தன.
அடுத்த நூலில் தன் பெயருக்கு முன் திருமதி என போட்டிருந்தார். அவருடன் கற்ற பல ஆசிரியர்கள் பயின்று கொண்டிருந்த நமக்கு "அவர் எப்போது விவாகம் செய்தவர், வந்தவருக்கு என்ன வயது இருக்கும், என்ன தொழில் பார்க்கிறார்" என்று கேள்விகள் கேட்டிருந்தார்கள். அவருக்கும் வாழ்த்துக் கூறியும் "தாங்கள் கூறியபடியே தந்தை தாய் வைத்த பெயரை யாம் ஒரு புதியவரைக் கண்டவுடன் அந்தக் கணவர் பெயருக்கு மாறுவதோ என்று சொல்லி சிந்திக்க வைத்தீர்களே. அதை தாங்களே செயற்படுத்திக் காட்டிவிட்டீர்கள்" என வந்தது.

உண்மையிலேயே அவர் ஒரு அறிவு ஜீவி. அரசியல் முதற்கொண்டு சகல அறிவும் வாய்க்கப் பெற்றவர். கிறிக்கெற் என்பதே தெரியாத நமக்கு அவர் வானொலியில் கிறிக்கெற் பற்றி ரசித்துக் கேட்பது ஆச்சரியம். வம்பு, தும்பு பேசார். ஆன்மீகப் பற்றும் உடையவர்.

நாங்கள் இருவர் அவரைச் சந்திக்கப் போனோம். கவலையோடு இருப்பார் எனப் பயந்து பயந்து போனோம். அவர் சாதாரணமாகவே வரவேற்றுச் சிரித்தார். தவறுதலாகப் போடப்பட்டு விட்டதெனப் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கலாமே என என் தோழி கூறினார். உடனே "நீங்கள் சுத்தத் தமிழ் பேசவேண்டும் எனச் சொல்வீர்கள். பிழைவிட்டிருக்கமாட்டீர்கள். அச்சுக்கோர்ப்போர் தெரியாமல்...." கூறினேன்.

"செல்வன் எனும் சொல்லை ஆண்கள் இருபது வயது வரைதான் எழுதுவார்கள். அதன்பின் அவன் தான் பூரண அறிவு பெற்ற முழுமனிதனாக உணர்ந்து 'திரு' எனப்போடுகிறான். அதேபோல் செல்வி என்பதும் அப்படித்தான். அதன்பின் திருமதி தான். நாம் விவாகம் செய்தவரோ அல்லரோ என்பது ஏன் பிறருக்குத் தெரியவேண்டும். ஆண்களுக்குத் தெரிகிறதா? பெண்ணுரிமை, சமஉரிமை என்று ஏன் கத்தித் திரிவான். முதலில் புதுமை விரும்புவோர் செயற்படுத்திக் காட்டுங்கள்" என்றார்.

**"சொன்னபடி செய்கிறோமா"**
- பகவான் சத்தியசாய் பாபா.

**காரணப்பெயர்:-** பெயர்களை அடையாளப்படுத்த அந்தக்காலம் தொடக்கம் வேறு அடைமொழிகள் சேர்க்கப்படுகின்றன. என்னென்ன சாதானைகள் செய்கிறார்களோ அந்தச் சாதனைகளை அடைமொழிகளாக வழங்குவது. உதாரணமாக இந்தியாவில் பிரபலம் பெற்ற மூன்று ராமானுஜர்கள் வெவ்வேறு கட்டங்களில் வாழ்ந்தார்கள்.

11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜர், **தத்துவ மேதை** ராமானுஜர் என அழைக்கப்பட்டார்.

பிரபஞ்சத்தின் உண்மையைக் கணிதசமன்பாடுகள் மூலம் தேடியவர். அவர் எழுதி வைத்த 4000 சமன்பாடுகள் இன்றும் ஆராயப்பட்டு வருகிறன. எனவே இவர் **கணிதமேதை** ராமானுஜர் எனப்பட்டார்.

சங்க இலக்கியங்களையும் பக்தி இலக்கியங்களையும் ஆழ்வார் பாடல்களை யும் தொல்காப்பிய அகத்திணை, புறத்திணைகளுக்கு எளிமையான தமிழில் உரைஎழுதியும் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தவர் இலக்கியமேதை A.K ராமானுஜர்.

மேலும் பல எடுத்துக்காட்டுக்கள்: தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன், ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்தோன், கூழுக்கும் பாடிய ஔவை, பாரி மகளிர், கேணல் கடாபி, ஏழிசை வல்லபி (வானதி). இப்படி ஈழத்தில் கலைப்புலவர் (நவரத்தினம்), கலையரசு (சொர்ணலிங்கம்), கலைப்பேரரசு (AT. பொன்னுத்துரை), இலக்கண வித்தகர் (நமசிவாயம்) பெரியார், கலைஞர், இளையதளபதி...

இத்தகைய அடைமொழிகளே பெயருக்குப் பதிலாக உபயோகத்தில் உள்ளன. இவை சாதனைகளின் அடிப்படையில் தோன்றினவே தவிர, புனைபெயர்களல்ல. புனைபெயர்கள் தாமாக வைக்கப்படுபவை. மற்றவை சாதனைகளின் அடிப்படையில் பிறரால் கொடுக்கப்படுகின்றன. எழுத்தாளர், பேச்சாளர் என்பன சாதனைப் பெயர்களல்ல.

எனவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சாதனைகள் புரிந்து மக்களால் சாதனைப் பெயர்களால் அழைக்கப்பட வேண்டுமென விரும்புகிறோம்.

- குறமகள்-



**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

0 - 5 years Newer homes in Stouffville

**Renovate and Sell**
Old detached bungalow near University of Toronto

**MATH, SCIENCE & ENGLISH TUITION**
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 647.831.0363

# இன்றைய நாள் எப்படி?

## ஓடும் நீர் உறைவதில்லை 140

இந்த உலகில் எந்த விதமான ஏற்றத் தாழ்வும் இன்றி எல்லோருக்கும் சமமாகக் கிடைப்பது நேரம் ஒன்று தான். மழை, வெயில், காற்று, குளிர், வெப்பம், நீர், நிலம் என்பவையெல்லாம் இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொருவருக்கும் சமமாகப் பகிரப்பட வில்லை. உலகின் சில பகுதிகள் சோலைகளாகவும் சில பகுதிகள் பாலைவ-னங்களாகவும் உள்ளன. இவ்வாறே இயற்கையின் கொடுப்பனவுகள் உலகின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு வேறுபட்ட முறையில் அமைந்துள்ளன. ஆனால் நேரம் என்பது மட்டும் உலகின் சகல பகுதிக்கும் சமமாகப் பகிரப்பட்டிருக் கின்றது. இந்த நேர அமைப்பில் மிகவும் முக்கியமானதாக அமைவது ஒரு நாள். அதாவது இருபத்தி நான்கு மணித்தியாலங்கள். எமது வாழ்க்கையில் இடம் பெறும் நிகழ்வுகள் அனைத்தும் அவை ஒவ்வொன்றும் நிகழ்கின்ற அந்த நாளின் பதிவுகளாகவே அமைகின்றன. எனவே எமது வாழ்க்கையின் அதி முக்கியமான காலம் என்பது நாம் வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும் அந்த நாள் தான். இப்போதும் அந்த வாய்ப்புக் கிடைத்திருப்பதால் அதை “இன்று'' என்போம்.

முதலில் இன்றைய நாள் எப்படி என்ற கேள்விக்கான அவசியத்தைப் பார்ப்போம். ஒரு நாள் எனும் இருபத்தி நான்கு மணித்தியாலங்கள் எல்லோருக்கும் சமமான-தாக இருந்த போதிலும் ஒவ்வொரு மனிதனுக்குமான அந்தக் காலப் பயன் பாடானது வேறுபட்ட பெறுபேறுகளைக் கொடுப்பது ஏன்? சிலருக்கு இன்பமும் மகிழ்ச்சியுமாக அமையும் அந்த நாள் வேறு சிலருக்கு துன்பமும் கவலையும் நிறைந்ததாக அமைவது ஏன்? வேறு சிலருக்கு ஒரு நாளின் ஆரம்பம் மகிழ்ச்சி யாகவும் பிற்பகுதி துன்பமாகவும் மாறுவது ஏன்? வேறு சிலருக்கு ஆரம்பம் துன்பமாக அமைந்து அந்த நாளின் பிற்பகுதி மகிழ்ச்சியாக அமைகிறதே எப்படி? கடின-மாகக் உழைத்தேன் ஒன்றையும் காண வில்லையே என்று அழுபவர்கள் ஒரு புறமாகவும் சிறிய முயற்சி தான் ஆனால் பெரிய இலாபம் என்று பெருமை பேசுபவர்கள் மறுபுறமாகவும்... இப்படி எத்தனை நிகழ்வுகள் ஒரு நாளில்!

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

காலம் தவறு செய்வதில்லை. ஏற்றத் தாழ்வாக நடந்து கொள்வதுமில்லை. மனித இனத்துக்கு மட்டுமல்ல, உலகின் அத்தனை உயிரினங்களுடனும் அது சமமாகத் தன்னைப் பகிர்ந்து கொள்கிறது. அப்படியா னால் எமக்கு மட்டும் ஏன் ஒவ்வொரு நாளும் ஏற்றத் தாழ்வாக அமைகின்றது? ஏன் நாம் சமநிலையை இழக்கிறோம்? சமநிலையை இழப்பது மட்டுமல்ல. எதிர்பாராத சம்பவங்களும் எம்மைத் தாக்குகின்றனவே என்று எமக்குள்ளேயே ஓலமிடுகிறோமே எப்படி? 'எனக்கு ஏன் இப்படி நடக்க வேண்டும், கடவுளே உனக்குக்



KG Master-kgmaster@rogers.com

கண்ணில்லையா?''என்று கடவுளைக் கூட நிந்திக்கிறோமே ஏன்? தரப்பட்ட காலத்தைத் தரமாகப் பயன்படுத்தத் தெரியாமல் தவறான முறையில் பயன்படுத்திவிட்டு, தப்பித் தவறிக் கூட அதை ஒத்துக்கொள்ளாமல் தண்டனைக்கு உரியவர் கடவுளாக்கப்படுவது வேடிக்கையான விடயமல்லவா வாசகர்களே!.

இப்போது “இன்றைய நாள் எப்படி'' என்ற இந்தக் கட்டுரைக்கு வருவதற்கு முன்னர், இன்றைய நாள் உங்களுக்கு எப்படி அமைந்தது என்பது பற்றிய சுய மீளாய்வு ஒன்றை மேற்கொண்டால் அற்புதமான நாள், மிகவும் நல்ல நாள், சராசரியான நாள், அப்படியும் இப்படியுமான நாள், மிக மோசமான நாள், கூடாத நாள், சரியில்லாத நாள், எதிர்பாராத சிக்கல்களைத் தந்த நாள், விடிந்திருக்கவே கூடாத நாள் என ஏதாவது ஒன்றைக் கூறுகின்றோம். இவ்வாறு ஏன் கூறுகிறோம், எதை அடிப்படையாக வைத்துக் கூறுகின்றோம் என்று எப்போதாவது ஒரு மீளாய்வு செய்கின்றோமா, என்றால் இல்லவே இல்லை. மீளாய்வு எதற்கு? என்ன நடந்தது என்பது உறக்கத்துக்குப் போகுமுன்னர் தெரிகிறதே, என்று இனிமேலும் கூறாமல் ஒவ்வொரு நாளையும் சிறப்பான முறையில் எப்படி மீளாய்வு செய்வது என்பது பற்றியும் அந்த மீளாய்வின் நன்மை என்ன என்பது பற்றியும் பகிர்ந்து கொள்வதே எனது நோக்கம்.

நாம் வாழ்வதற்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு நாளும் எமக்குத் தரப்படுகின்ற அற்புதமான வாய்ப்பு என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு நாளும் உறக்கத்தில் இருந்து எழும் போது அந்த வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றவர்கள் எத்தனை பேர்? கண் விழித்தவுடன் நேற்றைய தொடர்ச்சிகள் நினைவுக்கு வந்துவிடுகின்றன. அதிலிருந்தே அந்த நாள் ஆரம்பமாகிவிடுகிறது. நேற்றைய தொடர்ச்சிகள் உறக்கத்துக்குப் போகும்வரை இன்று என்னும் பொன்னான நாளை விழுங்கி விடுகின்றன. இன்று என்பது வார்த்தையிலும் நேற்று என்பது வாழ்க்கையிலும் விளையாடிக் கொண்டிருக்கின்றன. போதாக்குறைக்கு நாளை என்பதும் அதன் கால அவகாசத்தைக் கருத்தில் எடுக்காமல் இன்றை விழுங்கிவிடுகிறது. ஒட்டு மொத்தத்தில் “இன்றை'' தொலைப்பவர்கள் தான் அதி பெரும்பாலானவர்கள். இன்று என்பது தொலைக்கப்படுமானால் அதை எப்படி மீளாய்வு செய்ய முடியும், அது தான் கை நழுவிப் போய்விட்டதே என்று கவலைப்படாதீர்கள். இன்றிலிருந்து நீங்கள் அதைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

முதலில் நாம் எவ்வாறு ஒரு நாளை அதாவது “இன்றை'' மதிப்பீடு செய்கின்றோம் என்பதைப் பார்ப்போம். இன்றைய நாள் நல்லதா அல்லது கெட்டதா என்பதை நாம் இன்று பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து மதிப்பேடு செய்கின்றோம். நல்லவை கிடைத்திருந்தால் நல்ல நாள் என்கிறோம். நல்லன அல்லாதவை கிடைத்திருந்தால் கெட்ட நாள் என்கிறோம். ஆனால் உண்மையோ வேறாக இருக்கின்றது. இன்று என்ற அந்த நாள் நாம் வாழ்வதற்கான ஒரு வாய்ப்பைத் தந்ததே அல்லாமல் எமக்கு நல்லதையும் செய்யவில்லை கெட்டதையும் செய்ய வில்லை. நாமாகத் தான் நல்லதையும் கெட்டதையும் அறுவடை செய்து கொண்டோம். அறுவடை என்றால் விதைப்பு அவசியமல்லவா! ஆமாம், கடந்து போன “இன்று'' களில் அதாவது நேற்றுக்களில் நாம் விதைத்த விதைகளின் விளைச்சலில் நாம் இன்று பெற்றுக் கொண்டவை தான் அந்த அறுவடைகள். காலம் எனும் விளை நிலத்தில் நல்லதை விதைத்தால் நல்லதை அறுவடை செய்வோம். தீயதை விதைத்தால் தீயதை அறுவடை செய்வோம். எனவே விதைகள் எமது தெரிவாகவும், விதைத்தவர்கள் நாமாகவும் இருக்கும்போது அறுவடையைப் பற்றி ஆனந்தப்படுவதிலோ அல்லது அலறுவதிலோ என்ன பயன்?

இப்போது நாம் நேற்றைய விதைகளின் விளைச்சல் தானே இன்றைய அறுவடை என்பதை அறிந்து கொண்டோம். அதனால் இன்று என்பதை மதிப்பீடு செய்வது இன்று எமக்குக் கிடைத்த அறுவடையால் அல்ல என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டோம். எனவே “இன்றைய நாள் எப்படி'' என்பதை மதிப்பிடுவது இலகுவாக்கப் பட்டுவிட்டதல்லவா? இருந்தாலும் இன்னொரு முறை பகிர்ந்துகொள்வோம். அதாவது, உறக்கத்துக்குப் போகு முன்னர், இன்று என்ற விளை நிலத்தில் நாம் எதை விதைத்தோம் என ஒரு மீள் பார்வை செய்வது தான் இன்றைய நாளை மதிப்பீடு செய்யும் ஒரே முறை. அப்போது தான் இன்றைய விதைகள் தரமாக இருந்தால் தான் நாளைய அறுவடை சிறப்பாக அமையும் என்ற விழிப்புணர்வும் ஏற்படும்.

*- நன்றியுடன் கே.ஜி மாஸ்டர்*

Professional Pest Control
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997
• Cockroaches • Rats & Mice
• Wasps & bees • Birds
• Ants & Spiders

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -
மஹாராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# நேர்மைரத்து!

'நான் என்ன செய்தாலும் இவர் ஏதாவது ஒரு குறையைக் கண்டுபிடிச்சு சனியன், மூதேவி, கழுதை என்று சதா நச்சரித்துக் கொண்டே இருக்கிறார், ஐயா. எதிர்த்துப் பேசினால் கோபிக்கிறார். நான் ஏதேனும் தொழில் பார்க்க வேண்டும் என்று எடுக்கும் முயற்சிகளைத் தடுக்கிறார். தான் நினைப்பதையே முடிக்கிறார். எனது வளர்ச்சியைக் கெடுக்கிறார். 'இலங்கையிலும் இவர் இப்படித்தான். கனடாவுக்கு வந்தும் திருந்தியபாடில்லை. என்னை அடக்கி ஒடுக்கி அடிமையாக வைச்சிருக்கப் பார்க்கிறார். ஆண்கள் பெண்களை அடக்கி ஆள்வது தென்றுதொட்டே இருந்துவரும் ஒரு வியாதிதான். காலம் மாறிக்கொண்டு வருவதை ஆண் வர்க்கம் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு ஐயா. இவரின் சர்வாதிகாரத்திலிருந்து நான் விடுதலை பெற விரும்புகிறேன். என்னால் இவரோடு இருக்க முடியாது. எனக்குச் சுதந்திரம் வேண்டும்.'

கூறிமுடித்தவள் அவள் - வழக்காளி. அவளின் சொற்களின் தொனி நீதவானின் மூச்சைக் கொஞ்சம் சூடாக்கியது. முகத்தின் கடுமை அவள் பட்ட கொடுமையை அவருக்குத் துல்லியமாக்கியது. அவர் கண்கள் பிரதிவாதியை நோக்கின. 'ஐயா! நான் வழக்கமான உத்தியோகத்துடன் வார முடிவிலும் பகுதிநேர வேலை செய்து வருகிறேன். குடும்ப நலனுக்காக மாடாய் உழைக்கிறேன். வேலையால் களைத்துப் போய் வந்தால் ஒரு தேநீர்கூட எனது மனைவி போட்டுத் தருவதில்லை. காலையில் நித்திரையால் எழும்ப ஒன்பது ஒன்பதரை மணி செல்லும். ஏன் என்று கேட்டால் நிம்மதியாகத் தூங்கக்கூடச் சுதந்திரம் இல்லையா என்று கேட்கிறா.

'தனது சுதந்திரத்தைப் பற்றிக் கதைக்கின்றவ எனது சுதந்திரத்தைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பதில்லை. நான் கலியாண வீடுகளுக்கு வேட்டி சால்வையுடன் புறப்பட்டால் பட்டிக் காடு என்று பகிடி பண்ணுகிறா. வேட்டி சால்வை எமது தேசிய உடை. கனடாவுக்கு வந்த பின்னர் இவ எமது தேச வழமைகளைப் பிற்போக்கானவை என்று ஒதுக்கித் தள்ளுகின்றா. 'சமூக சேவையெனச் சொல்லி இரவு நேரங்களிலும் ஊர் ஊராகத் திரியிறா. வீட்டை நான்தான் கூட்டித் துடைக்கிறேன். பாத்திரங்களையும் நான்தான் கழுவி வைக்க வேண்டி யிருக்கு. பெண் உரிமை பேசிப் பல இளம் குடும்பங்களைப் பிரித்துவைத்து வேடிக்கை பார்க்கிறா. பேசிக் கலியாணம் செய்வது பிழை என்கிறா. கூடித் தெருவோரம் கொஞ்சித் திரிவது சரி என்கிறா. இவற்றை எல்லாம் என்னால் ஆதரிக்க முடியாது. நான் தமிழன். கனடாவுக்கு என்ன, சந்திர மண்டலத்துக்குப் போனாலும் தமிழனாகவே வாழுவேன்.

'இவ என்னைப் பட்டிக்காடு பட்டிக்காடு என்று வீட்டில் மட்டுமல்ல, வெளியில் ஆட்களுக்கு முன்னாலும் பகிடி பண்ணுகிறா. இவ்வித அனுபவங்களும் இன்று அவ உங்களுக்குத் தெரிவித்த கருத்துக்களும் இவவுடன் கூடி வாழுதல் இனி முடியாத காரியம் என்பதைக் காட்டுகின்றன. அவ கேட்கும் விவாகரத்தை நீங்கள் வழங்கலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை.'

இவ்விதம் அவன் - பிரதிவாதி.

இரண்டொரு குறுக்குக் கேள்விகளுடன் விசாரணையை முடித்துக்கொண்டு நீதவான் பேசத் தொடங்கினார்.

'நீங்கள் இருவரும் படித்தவர்கள். திருமணம் புரிந்து இருபத்தைந்து வருடங்கள் குடும்பம் நடத்தியிருக்கிறீர்கள். இலங்கையில் நடந்த இனக் கலவரத்திலிருந்து தப்பி வெளியேறிக் கனடாவுக்கு வந்து அகதி கோரிய அதிட்டசாலிகள். இங்கு வாழ்ந்த ஆறு வருடங்களுக்குள் உங்கள் ஒரே மகளுக்குத் திருமணமும் நடத்தியிருக்கிறீர்கள். ஆக, பெரிதான பிரச்சனைகள் எதுவும் இல்லாத நீங்கள் விவாகரத்தைப் பெறத் தீர்மானித்திருப்பது வியப்பாக இருக்கிறது. 'கனடாவுக்கு வந்தபிறகுதான் உங்கள் இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதை உணரமுடிகிறது. குடும்பம் என்று இணைந்த பிறகு நான் வேறு நீ வேறு என்னும் எண்ணத்துக்கோ கணவன் மதிப்புக்குரியவன் பெண் அவனுக்குச் சேவை செய்யவேண்டியவள் என்ற வாதத்துக்கோ இடம் இல்லை.

'குடும்பம் அன்பின் அத்திவாரத்தில் கட்டி எழுப்பப்படுவது. இந்த அன்பு உங்களிடத்தில் இப்பொழுது இல்லாமல் இருக்கிறது. மீண்டும் கூறுகிறேன் கணவன் மனைவி என்ற முறையிலே உங்களிடத்தில் இருக்கவேண்டிய அன்பை என்னாற் காண முடியவில்லை.

'அன்பு தட்டிவிட உடைந்துவிடும் கண்ணாடியல்ல. வெட்டவெட்டத் தழைக்கும் வாழை. நீங்கள் நினைத்தால் இப்பொழுதும் இந்த அன்பை வளர்க்கலாம். அன்பு வளர்ந்தால் கருத்து ஒற்றுமையும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் உணர்வும் இயல்பாகவே வரும். ஆண் பெண் இருவரும் இணைந்து செயற்படுவதே இல்லறம். அதற்குக் கருத்து ஒற்றுமை மிகவும் அவசி யம். 'இப்பொழுது உங்களுக்கிடையேயுள்ள கருத்து வேறுபாடு சூழ்நிலை வேறுபாட்டால் எழுந்திருக்கிறது. ஆனால் நீங்கள் இருவரும் ஒரே கலாச்சாரத்தின் பின்னணியில் வளர்ந்திருப்பதால் இதனை ஒரு பாதகமான கருத்து முரண்பாடாக நான் கருதவில்லை. ஒருவருக் கொருவர் கொஞ்சம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் இதனை இலகுவாகவே தீர்த்துக் கொள்ளலாம்.

'எனினும் குடும்பப் பிரச்சினைகளால் இங்கு நடைபெற்ற பல தற்கொலைச் சம்பவங்களைக் கருத்திற்கொண்டும் பிரிவு அன்பினை வளர்க்க உதவும் எனக் கண்டும் ஒருவருட காலம் உங்களைப் பிரிந்திருக்கும் படியும் இக்காலப் பகுதிக்குள்ளும் உங்களால் ஒன்று சேர்ந்து வாழ முடியாத விடத்து, விண்ணப்பித்தால் விசாரணையின்றி உங்களுக்கு விவாகரத்து வழங்கப்படும் என்றும் தீர்ப்பளிக்கின்றேன்.'

சிறிது நேரத்தில் தீர்ப்புப் பத்திரத்துடன் வாதியும் பிரதிவாதியும் வெளியே வந்தனர். கணவனின் முகம் சூரியன் என்றால் மனைவியின் முகம் தாமரை. அங்கும் இங்கும் பார்த்துவிட்டுச் சூரியன் தொடங்கியது:



'நீ இப்படித் துணிச்சலாகப் பேசுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை.'' துணிச்சலாவது கிணிச்சலாவது! ஆட்கள் பகிடிபண்ணினால் என்ன செய்கிறதென்று கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியளா?'

'ஆருக்கு அப்பா தெரியப்போகுது? நீதி மன்றத்திலே எங்கடை ஆட்கள் ஆருமே இல்லை. சும்மா பயப்படாதேயும். உம்மையும் என்னையும் மகளையுந் தவிர வேறு யாருக்குமே இந்த விசயம் தெரிய வராது.' 'நீதிக்குத் தெரியுமல்லே!

'நீதவான்தான் தீர்ப்பைத் தந்திருக்கிறார். இதனால யாருக்கும் நட்டமில்லை. எமக்குக் கொஞ்சம் அதிகம் பணம் தருவதால் அரசாங்கமும் குட்டிச்சுவராகப் போவதில்லை.'

'எங்கடை மனச்சாட்சிதான் குட்டிச்சுவராய்ப் போச்சு. விவாகரத்து நேர்மைரத்தாய்ப் போச்சு.'

'பேசாமல் இரும். நீரும் சம்மதித்துத்தானே வழக்குப் போட்டது. இப்போ எல்லாம் முடிஞ்சாப்பிறகு ஞானம் வந்த ஆள்மாதிரி அலட்டிறீர். இந்தாரும், இந்தப் பத்திரத்தைக் காட்டிப் பொதுநலப்படிக்கு விண்ணப்பியும். மகளுடன் இருக்கப் போவதாகச் சொல்லி அவளின்ரை விலாசத்தைக் கொடும். ஒன்றாய் இருந்த காலத்தில் தந்ததைவிட இரண்டாய் இருப்பதற்கு அரசாங்கம் அதிக பணமல்லே தரப்போகுது. அதைப் பெற்றுச் சந்தோசமாக வாழத்தானே இந்த வேலை எல்லாம்.'



கவிஞர் வி. கந்தவனம்

# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கணவரின் இத்தகைய நிலைக்குக் காரணம் என்பதை மனைவி புரிந்து கொண்டார். கணவரின் தாயார் பிள்ளைகளை தன்னிடம் இருந்து மிகவும் அன்னியப்படுத்தியும், பாசத்தைக் காட்டாது வளர்த்துக் கொண்டதே தனது கணவரின் நிலைக்குக் காரணமென்பதைப் புரிந்து கொண்டார்.



உடல், மன ஆரோக்கியம் கொண்ட பிள்ளைகளாக வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றாரிடம் உள்ளது என்பதையும் இந்த உண்மைக் கதை எடுத்துக் காட்டுகின்றது. கோபத்தை முற்றாகப் புதைக்கும் பழக்கத்தை அவர் சிறு வயது முதல் பழகிக் கொண்டார். இவ்வாறான தன்மை கொண்டவர்களை மாற்றுவது மிகவும் கடினமானதானாலும் அவருக்கேற்ப கூடி வாழ்பவர்கள் தங்கள் செயற்பாடுகளை மாற்றி ஒத்திசைவு கொண்டும் படிப்படியாக அவர்கள் புரிந்து தம் பழக்கத்தை மாற்றும் வரை பொறுமை காத்துக் கொள்வதும் ஓரளவுக்கேனும் நிலைமையைச் சீர் செய்யும் என்று கூறப்படுகிறது. பொருத்தமான நேரத்தில் உளவளத் துணையை நாடி ஆலோசனை பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது. இந்தக் குறைபாட்டைச் சீராக்குவதற்காக உளவளத் துணையாளர்கள் ஆலோசனை வழங்குவார்கள். தங்கள் குறைகளை மாற்ற வேண்டும் என்ற விருப்பம் ஏற்படுவது முக்கியமானது.

வெகுளாமை கொண்டு வாழ்வதில் ஒவ்வொருவரின் தனித்துவமான பழக்கங்களும், தன்மைகளும் முக்கியமானவை. குறைபாடுகள் இருப்பின் அவற்றை இனம் கண்டு நிவர்த்தி செய்வதில் தொடர்புள்ளோர் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும். அன்பான வாசகர்களே! வழமை போலாக இன்றும் வெகுளாமை கொண்டு வாழ்வதுடன் தொடர்புள்ள சில விடயங்களை உரையாடிக் கொண்டோம். உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். தொடரும்...

# வெகுளாமை (Calm) - 10

'இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்: புணரின் வெகுளாமை நன்று' (குறள் 308 அதிகாரம் 31 வெகுளாமை) என்ற திருவள்ளுவரின் திருக்குறளுடன் இன்றைய உரையாடலை ஆரம்பிப்போம். 'பல சுடர் உடைய நெருப்பில் தோய்ந்தாற்போன்ற துன்பங்களை இழைத்த ஒருவன் நட்புக் கொள்வானாயினும் அவனிடம் கோபங் கொள்ளாதிருத்தல் நல்லது' என்பது இக்குறளுக்கான தமிழறிஞர் ந.சி.கந்தையா அவர்களின் கருத்துரை ஆகும். நமக்குத் துன்பங்களை இழைத்தவர்கள் மீதும் கூடக் கோபம் கொள்ளக்கூடாது என்று இந்தக் குறள் கூறிக் கொண்டாலும் இவ்வாறான நிலைமையை நடைமுறைப் படுத்துவதற்குரிய மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொள்ளுதல் இலகுவான விடயமல்ல.

வெகுளாமை கொண்டு வாழ்வதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆய்வு செய்யும் முயற்சியில் இவ்விடயத்துடன் தொடர்புள்ள நான்கு பழக்கங்கள் (Behaviours) அல்லது தொடர்பாக்கல் வடிவங்கள் (Communication Styles) பற்றி நாங்கள் அறிந்து கொள்வது முக்கியமானது. செயலற்ற அல்லது சகிப்புத்தன்மை கொண்ட பழக்கம் (Passive Behaviour or Passive Communication Style) முதலாவது வகை. இந்த வகையான பழக்கத்தைக் கொண்டவர்கள் தங்களது கருத்துக்களை அல்லது உணர்வுகளை வெளிப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வார்கள். அவர்களது உரிமைகளை அல்லது தேவைகளைப் பெற்றுக் கொள்ளாது விட்டு



விடுவார்கள். இவ்வாறான பழக்கம் அல்லது தொடர்பாக்கல் முறை ஏற்படுவதற்கு அவர்களின் குறைவான சுய கௌரவத் தன்மை காரணமாக அமைகின்றது. இவ்வாறான பழக்கம் கொண்டவர்கள் தங்களைக் கவனித்துக் கொள்ள முடியாதவர்கள் என நினைத்துக் கொள்கின்றார்கள். இவர்கள் மன அழுத்தம், குழப்பம் கொண்டு அவதிப்படுகிறார்கள். மற்றவர்கள் தமது உணர்வுகளைப் புரிந்து கொள்வதில்லை என்றும் எண்ணிக் கொள்வார்கள். மேலும் தாங்கள் பலமற்று இருப்பதாகவும், தங்களைப் பற்றிக் கவனம் எடுக்க முடியாதுள்ளதாகவும் சுய கருத்துக் கொண்டவர்களாக இருப்பார்கள்.

இரண்டாவது வகையினர் ஆக்கிரமிப்புப் பழக்கம் அல்லது தொடர்பாக்கல் முறை (Aggressive Behaviour or Aggressive Communication Style) கொண்டவர்கள். இவர்கள் தங்கள் கருத்துக்களை அல்லது உணர்வுகளை மற்றவர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் விதமாகத் தெரிவிப்பார்கள். இதற்கும் இவர்களிடம் உள்ள குறைவான சுய கௌரவமே காரணமாகும். இந்தப் பழக்கத்தைக் கொண்டவர்கள் மற்றவர்களை ஆக்கிரமித்தும், மற்றவர்களை அடக்குவதற்கு நகைச்சுவையாகப் பேசியும், தாக்கிப் பேசியும் கொள்வார்கள். தம்மைச் சூழவுள்ளவர்களை அடிக்கடி குழப்பியும், அச்சுறுத்தியும் கொள்வார்கள். மற்றவர்களைப் பார்த்து நீங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்றும் சொல்லிக் கொள்வார்கள். தாங்களே எல்லோரிலும் மேலானவர்கள் என்று கருதிக் கொள்வார்கள்.

மூன்றாவது வகை செயலற்ற ஆக்கிரமிப்புப் பழக்கம் அல்லது தொடர்பாக்கல் முறையைக் கொண்டிருத்தல் (Passive Aggressive Behaviour or Communication Style). இந்தப் பழக்கம் கொண்டவர்கள் செயலற்றவர்களாக காட்டிக் கொண்டு கோபத்தின் வயப்பட்டு இருப்பார்கள். திரைமறைவில் தங்களது கோபத்தை செயற்படுத்துவார்கள். தொடர்புள்ளவர்களைப் புறக்கணித்தும், வெளிப்படைத்தன்மை இல்லாமலும் நடந்து கொள்வார்கள். தொடர்புள்ளவர்களின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக இருப்பார்கள். கணவன் மனைவியாக இருந்தால் பாலியல் தொடர்பினைப் பாவித்து அடக்க முயற்சிப்பார்கள். தமக்குள்ளே பேசிக் கொள்வார்கள். அவர்கள் கோபம் கொள்கின்றார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

நாலாவது வகை வற்புறுத்தும் பழக்கத்தை அல்லது தொடர்பாக்கல் முறையைக் கொண்டவர்கள் (Assertive Behaviour or Communication Style). இவர்கள் தமது கருத்தை வெளிப்படையாகத் தெரிவிப்பதுடன் மற்றவர்களின் உரிமைகளை மீறாமலும் பார்த்துக் கொள்வார்கள். இவர்களிடம் இருக்கும் அதிகமான சுய கௌரவம் இதற்கான காரணமாக அமைகின்றது. தங்களது உணர்வுகள், நேரம், சுய பெறுமதி என்பவற்றை பாதுகாத்துக் கொள்வார்கள். மற்றவர்கள் கூறுவதை நன்கு கவனிப்பார்கள். நல்ல கண் தொடர்பை ஏற்படுத்துவார்கள். அமைதியான முறையில் தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். மற்றவர்களின் உணர்வுகளை மதித்துக் கொள்வார்கள். தங்கள் வாழ்வை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வார்கள். நாங்கள் எல்லோரும் வெகுளாமையுடன் வாழ்வதற்கு இந்த வகையான தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட நான்கு வகைகளில் இது மட்டுமே ஏற்புடையது. ஏனைய மூன்றும் எதிர் மறையானவை என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

செயலற்ற ஆக்கிரமிப்புப் பழக்கம் (Passive Aggressive Behaviour) கொண்டவர்களின் தன்மையை எடுத்து விளக்கும் ஒரு உண்மைக் கதையைக் கவனிப்போம். ஒருவரின் சிறு வயதில் ஏற்படும் குடும்பச் சூழ்நிலை இவ்வாறான தன்மை கொண்டவர்களாக மாற்றி விடுகின்றது. மேலும் உயிரியல், சமூக காரணிகளும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஒரு குடும்பத்தில் கணவன் நிலையற்ற மாறுபடும் செயற்பாடுகளுடன் காணப்படுகின்றார். அவரின் மனைவி அடிக்கடி அவரின் செயற்பாடுகள் மூலம் குழப்பமான நிலையில் இருக்கின்றார். கணவனுக்கு பிடித்த உணவு எதுவென மனைவியால் இனம் காண முடிவதில்லை. தனது வேலைகளைத் தானே பார்த்துக் கொள்வார். அவருக்கு பாலியல் தொடர்பில் நாட்டம் இல்லை. தனது வாழ்க்கைக்கு மனைவி தேவை இல்லை. ஆனால் மனைவி பிரிந்து செல்வதையும் விரும்பாதவராக இருக்கின்றார். இந்த நிலையில் கணவரின் தாயார் மூலம் அவர் சிறு பராயத்தில் இருந்து எவ்வாறு வளர்க்கப்பட்டார், எதற்காக தனது கணவன் இத் தன்மையைக் கொண்டிருக்கின்றார் என மனைவி ஆராய்ந்திருக்கின்றார். தாயார் சிறுவயதில் வளர்த்த விதமே



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

INCOME TAX returns preparation
வருமானவரி பத்திரங்கள் பூர்த்தி செய்தல்
Registered Education Savings Plan
பிள்ளைகளை உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் பதிவு செய்தல்
Life Insurance
பல்வேறு வகையான காப்புறுதி நிறுவனங்களின் விலைகளை ஆராய்ந்து குறைந்த விலையில் சிறந்த ஆயுள் காப்புறுதி, கொடிய நோய்களிற்கான காப்புறுதி, உடல் இயலாமைக்குரிய காப்புறுதி போன்றவற்றிற்கு ஒப்பந்தங்கள் செய்து கொடுத்தல்
Life Insurance, Critical Illness Insurance, Disability Insurance sales and work on claims
OTHER MULTIPLE SERVICES OFFERED
மேலும் பல்வேறு வகையான தேவைகளை நிறைவேற்றுதல்
பாஸ்போட் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல்
- Application for passport
இலவச மருந்து வசதிகளைப் பெற மாகாண அரசின் விண்ணப்பம் பூர்த்தி செய்தல்
- Ontario Trillium Drug plan
கனடாவிற்கு வெளியே ஏற்பட்ட மருத்துவச் செலவுகளை மாகாண அரசின் மருத்துவ திட்டத்தில் பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல்
- Claims out of country medical expense in OHIP
சர்வதேச வாகன சாரதிப் பத்திர விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல்
- Application for International driver's license
நகரசபையின் சலுகைக்குள் வழங்கும் குறைவான வாடகை வீடுகளிற்குரிய விண்ணப்பம் பூர்த்தி செய்தல்
- Application for subsidized housing in Toronto
பொலிஸ் பதிவுகள், குற்றப்பதிவு போன்ற சிக்கல் நிலையினை நீக்குவதற்கு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல்
- Complete pardon applications and to clear police records
உயிர் இழப்பின் பின்பு கனடிய ஓய்வூதிய திட்டத்திலிருந்து குடும்பத்தவர்க்கு சேரவேண்டிய சலுகைகளைப் பெறும் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல்
- Survivor benefits, Children Benefits and Death benefits from Canadian Pension Plan-CPP
பலதரப்பட்ட அலுவலகங்களிற்கு கடிதங்கள் எழுதுதல், விண்ணப்பப் படிவங்கள் நிரப்புதல் போன்ற சேவைகள்
- Preparing letters & completing forms to any authorities
Tharma Munnainathan BSc [M Eng]
Licensed Insurance Advisor & RESP Representative
Certified Income Tax Preparer
Former Engineer Srilanka Railways
416 500 9475
GTA SQUARE - UNIT 252 5215 Finch ave East @ Middlefield



# தொழில்நுட்பம் - வருங்கால தொலைநோக்கு

## இன்றில் இருந்து 2500 வருடம் வரை என்ன நடக்கும்?

## ஒரு அறிவுபூர்வமான தொழில்நுட்ப அலசல்:

பகுதி 06

கடந்த இதழ் தொடர்ச்சி...

### 6. தெய்வ நம்பிக்கை:

### தெய்வ நம்பிக்கை எப்படித் தொடங்கியது?

பண்டைக்காலத்தில், மனிதரால் பல இயற்கை விடயங்கள் பற்றி முழுமையாகச் சீரணிக்க முடியவில்லை. வானம், பூமி, சூரியன், சந்திரன், வெள்ளி, மழை, கடல், ஆறு, மின்னல், முழக்கம், நில அதிர்வு, சுனாமி, புயல், வெள்ளம், வரட்சி, எரிமலை என்ற பல விடயங்கள் எப்படி உருவாகின்றன என்பது பெரும் புதிராகவே இருந்தது. திருப்தியான விடைகள் கிடைக்காத விடத்தும், உண்மையான விளக்கங்களை அறியவோ, கிரகிக்கவோ கூடிய ஆற்றல் இல்லாத காரணத்தினாலும், தமக்கு மிகவும் சௌகரியமாக, இவற்றை எல்லாம் செய்பவர் கடவுள் என்று ஒருவரைச் சிருஷ்டித்தார்கள். காலம் காலமாக, தங்கள் தங்கள் தேவைகளுக்குச் சாதகமாகப் பல உப தெய்வங்களையும் உருவாக்கினார்கள். உலகிலே, மனிதர்களுக்குள் நடைபெறும் பலவிதமான சமூகக் குற்றச்செயல்களைக் குறைப்பதற்கு இந்தத் தெய்வ நம்பிக்கை மிகவும் உதவியாக இருந்தது. அரசனால் முழுநேரமும் மக்களைக் காப்பாற்ற முடியாமல் போகவே, மக்களிடையே தெய்வபயத்தை உண்டாக்கி, அத்தெய்வம் 24 மணிநேரமும் மனிதர் எல்லோரையும் கண்காணித்துக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் செய்யும் நல்ல, கெட்ட செயல்கள் யாவற்றையும் அவர் கணக்கெடுத்து, அதன்படி அவர்களை, அவர்கள் இறந்தபின் சொர்க்கலோக சௌகரியங்களையும் அல்லது நரகலோக சித்திரவதைகளையும் அழிப்பார் என்று நன்றாகவே மக்களை மூளைச்சலவை செய்து அதில் வெற்றியும் கண்டார்கள். ஆனால், காலம் போகப்போக, பல பல சமயங்களும், வேறு வேறு கடவுள்களும் உருவாக்கப்பட்டு, தத்தம் கடவுள்தான் பெரியவர் என்ற சண்டைகளினால், நினைத்ததிலும் பார்க்க மோசமான விளைவுகள் உருவாகி வெடிக்கும் போர்களினால் பல்லாயிரக் கணக்கில் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் விழைந்துகொண்டே இருக்கின்றன. அத்தோடு, மக்களின் குருட்டு நம்பிக்கைகளைப் பாவித்துப் பணம் செய்யும் ஏமாற்றுப் பேர்வழிகள் பல வேடங்களில் பெருகியும் விட்டனர்.

### விழிப்புணர்வின் காரணிகள்:

- மனிதன் தன்னால் முடியாது என்று எண்ணியிருந்த பல விடயங்களை நவீன தொழில்நுட்பம் மூலம் கண்டு பிடித்தமை.

- மனிதனுக்கு வேண்டியனவை எல்லாம் கிடைத்து, இறைவனைக் கேட்டுப் பெற வேறு ஒன்றும் இல்லாதமை.

- கடவுளே எல்லாம் நடத்துபவர் என்றால் அவர்தானே கஷ்டங்களையும் கொடுப்பவர் என்பதை உணர்ந்தமை.
- கடவுள் எல்லாமே உணர்பவர் என்றால் எதற்காக கஷ்டங்கள், அழிவுகள், கொலைகள், கொடூரங்கள், அநியாயங்கள் பற்றி அவருக்குப் பல விதமான கூட்டுப் பிரார்த்தனைகள் மூலம் ஏன் அறிவிக்க வேண்டும்?

- கடவுளைப் புகழ்ந்தால், போற்றினால், குஷிப்படுத்தினால் கேட்டதைத் தருவார் என்றால் அவர் என்ன கடவுளா? மனிதனா?
- அவரே எல்லாம் இயக்குபவர் என்றால் நாம் செய்யும் நல்லவை, கெட்டவை எல்லாமே அவர் செயல் தானே?

- கடவுளின் பிள்ளைகள், அவதாரங்கள் என்று கூறிக்கொள்பவர்களே நோய்வாய்ப் படுவதும், கொலை செய்யப்படுவதும் எப்படி? இவர்கள் எப்படி தம் பக்தர்களைக் காப்பாற்றுவார்கள்?

- அற்புதங்கள் செய்து காட்டும் இவர்கள், சிறு பொருட்கள் அல்லாது, நாடிவரும் அடியவர்கள் விரும்பும் குறிப்பிட்ட ஒன்றை உருவாக்கிக் காட்டினார்களா?
- கர்ம விதிப்படி எமது பாவம் யாருக்கோ மறுபிறப்பில் போய்ச் சேரும் என்றால் மனிதன் குற்றச் செயல்கள் செய்வது அதிகரிக்கும் என்பது உண்மை.
- பாவத்தைச் செய்த பின்னர் கடவுளை வேண்டினால் அவர் மன்னிப்பார் என்றால், அவர் யார் கடவுளா?
- எல்லாம் கடவுள் சித்தம் என்றால், எமக்கு என்ன, எப்ப, எவ்வளவு, எங்கே வேணும் என்று கடவுளுக்கே உத்தரவு போடும், தெரியப்படுத்தும் அளவுக்கு நாம் என்ன கடவுளிலும் பெரியவர்களா?

இப்படிப் பலவிதமான புரிந்துணர்வுகளின் பின்னர் மனிதன் உருவாக்கிய கடவுளின் தேவை சிறிது சிறிதாக அரும்பத் தொடங்கியது.

### அந்த உலகில் 90% மத நம்பிக்கை இல்லாதவர்கள்:

அடுத்த 500 வருடங்களில் படிப்படியான விழிப்புணர்வின் பின் மத நம்பிக்கையும், கடவுள் தேவையும் பின்வரும் காரணங்களினால் தேய்வடையும்.
- மதநம்பிக்கை இல்லாத நாட்டு மக்கள் எல்லாம் அதி உயர் செல்வச் செழிப்போடு சிறப்பான வாழ்க்கைத் தரத்தினைக் கொண்டிருந்தார்கள். கல்வியில் உயர்மை கொண்டு பல புதிய நவீன சாதனங்களைக் கண்டு பிடித்தார்கள்.
- மதமே எல்லாம் என்று திரிந்த நாட்டு மக்கள் மிகவும் குறைந்த வாழ்க்கைத் தரம், கல்வியின்மை, பொருளாதார வீழ்ச்சி, பட்டினி, பஞ்சம் காரணமாகச் செழிப்பான நாடுகளைக் கையேந்தி நிற்க வேண்டி இருந்தது. இவர்கள் கஷ்டப்பட்டு உழைக்காது, சுலபமான வழியில் இறைவன் கொடுப்பார் என்று நம்பிக் கெட்டார்கள்.
- கடவுள்தான் செய்தார் என்று நம்பிய இயற்கை முதலிய பல விடயங்களை மனிதன் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தான்.
- கடவுள் என்று கூறப்பட்டவருக்கு பிற்கால முன்னேற்றங்கள் பற்றி ஒரு சிறிய அறிவுகூடி இல்லாது, அவர் கற்கால ஆயுதங்கள், வாழ்வில், அம்பு மற்றும் மாடு, ஆடு, குதிரை, ஒட்டகம், பண்டி, கழுதை, குரங்கு என்று சிறு வட்டத்தினுள் மட்டும் நின்றதை உணர்ந்தான்.
- கடவுள் எனப்படுபவர் தொடக்கம், முடிவு இல்லாத பல பரிமாணங்கள் உள்ளவராக இருந்தால்தான் இவ்வளவு சிருஷ்டிகளையும் பராமரிக்க முடியும். அப்படிப்பட்டவரை நாலு பரிமாணத்தை மட்டுமே உணரக்கூடிய இந்த மனிதனால் உணரப்படுவது என்பது முடியாத காரியம்.
- மனிதன் இங்கு உள்ள சொர்க்கத்தை விட்டு, இன்னும் பேரவாக் கொண்டு ஏன்தான் கற்பனையில் சொல்லப்படும் சொர்க்கத்தை அடையவேண்டும் என்று பேராசை கொள்ள வேண்டும்?
- மதநம்பிக்கை, கடவுள் பயம் என்பன ஒருவரின் மன அழுத்தங்களையும், கவலைகளையும் குறைப்பதற்கான, ஆறுதல் தரும் மூளையைப் பதப்படுத்தும் முறை யாகும். ஆனால், நவீன புத்திஜீவிகளுக்கு கடவுள் என்று ஒன்று தேவையில்லாது ஒரு வெறும் வெறுமையிலே தியானம் செய்து இதே பலனைப் பெறலாம். இவ்விதமாக மனத்தை ஒருநிலைப் படுத்த முடியாதவர்களுக்கு மாத்திரம் ஒரு உயரிய போலிஸ், கடவுள் தேவையாய் இருக்கும்.

இத்தகைய காரணங்களினால், பிற்கால மனிதன் கடவுளுக்கே ஒரு கும்புடு போட்டு விட்டான். கடவுள் இருக்கிறாரோ அல்லது இல்லாமல் போய்விட்டாரோ என்று பெரிதாய் அலட்டிக்கொள்ளத் தயாராய் இல்லை. என்றாலும், ஒரு சில பழமைவாதிகள் உலகின் சில மூலைகளில் இருந்து, அவர்களினால் இன்னமும் விளங்காத சில விடயங்களைக் கடவுள்தான் செய்கிறார் என்று கூறிக்கொண்டு சொர்க்கத்துக்குப் போவதற்காக இறைவனைத் தொடர்ந்து குஷிப்படுத்திக் கொண்டு இருப்பார்கள்.

இத்துடன் இந்த அறிவுடை தொலை நோக்கல் முடிவடைகிறது.
நீங்கள் இன்னும் சற்று விரிவான ஆங்கில மூலக் கட்டுரையை வாசிக்க விரும்பின் தொடர்புகளுக்கு:
santhira_gasan@Yahoo.com.au

(முற்றும்)

**இது ஆங்கில மூலத்தின் சுருங்கிய தமிழ் வடிவம்**



- ஆக்கம்: செல்லத்துரை சந்திரகாசன் -
*santhira_gasan@Yahoo.com.au*

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

# GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

**இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை**

**இன்றே அழையுங்கள்**

**இலவச ஆலோசனைகளுக்கு**

# (416) 556-9287

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# குழந்தைகள் வளரட்டும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்படப் போகின்றன. அவற்றில் எந்த தாக்கத்தின் மீது உங்கள் குழந்தைக்கு மிகுந்த ஈர்ப்பு இருக்கிறதோ அதை நோக்கி செல்லப் போகிறது. பெற்றோருடன் இருப்பதுதான் தங்களின் மிகப்பெரிய ஈர்ப்பு என்ற உணர்வை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். ஆனந்தமான, அறிவுப்பூர்வமான, அற்புதமான மனிதராக உங்களை வெளிப்படுத்திக் கொண்டால், உங்கள் குழந்தை வேறெந்த துணையையும் தேடிப் போகாது. எளிய விடயங்களைக்கூட உங்களிடம் வந்து கேட்கத் தொடங்கும்.

அன்பும் ஆனந்தமும் மிக்க சூழலில் உங்கள் குழந்தைகளை நீங்கள் உருவாக்கினால் தவறுகள் நடக்க வாய்ப்பில்லை. வீட்டிலோ, பள்ளியிலோ, சமூகச் சூழலிலோ துயரமான சூழலில் குழந்தை வளர நேர்ந்தால்தான் தவறுகள் நடக்கின்றன. வீட்டிற்கு உள்ளும் வெளியிலும், நாள்தோறும் கோபம், அச்சம், பரபரப்பு, பாதுகாப்பின்மை ஆகியவற்றையே குழந்தைகள் எதிர்கொண்டிருந்தால் அவர்கள் எப்படி ஆனந்தமாக வாழமுடியும்? அன்புக்கும் ஆனந்தத்திற்கும் நீங்கள் உதாரணமாய் திகழ்ந்தால் நன்மைகள் தானாக நிகழும்.

சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அதிவலிமை வாய்ந்தவர்களாய் ஆக்குவதற்கு ஆசைப்பட்டு அவர்களை பல சிரமங்களுக்கு ஆளாக்குகிறார்கள். ஏனென்றால் பெற்றோர்களுக்கென்று எத்தனையோ இலட்சியங்கள் உண்டு. வாழ்வில் அவர்களால் என்னவெல்லாம் ஆக முடியவில்லையோ, அப்படியெல்லாம் அவர்கள் குழந்தைகளை ஆக்கிப் பார்க்க நினைக்கிறார்கள். தங்களுடைய பெற்றோர்கள் வழங்கிய சில அடிப்படைகளைத் துணையாகக் கொண்டு தாங்கள் ஓரளவு செயல்பட்டது போல, தாங்கள் வழங்கும் சில அடிப்படைகளின் உதவியோடு தங்கள் குழந்தைகள் செயல்பட வேண்டும் என்று பெற்றோர் கருதுவது இயற்கை. ஆனால் ஒரு சில பெற்றோர்கள் அதீத ஆர்வம் காரணமாக தங்கள் குழந்தைகளிடம் கொடுமையாக நடந்து கொள்வதும் உண்டு. இன்னும் சிலரோ குழந்தைகளிடம் அன்பாக நடந்து கொள்வதாக கருதி அளவுக்கதிகமாக செல்லம் கொடுத்து குழந்தைகளை வலிமையில்லாமலும் உலகிற்கு பயன்படாத நிலையிலும் வளர்த்து விடுவதும் உண்டு.

சொல்லப்போனால், குழந்தை வளர்ப்பில் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று சொல்வதற்கு சரியான எல்லைக் கோடுகள் இல்லை. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு அளவிலான கவனம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்ப அதனிடம் செலுத்த வேண்டிய கனிவின் அளவும், கண்டிப்பின் அளவும் வேறுபடுகிறது.

குழந்தைகளுக்கு விதிக்கின்ற கட்டுப்பாடுகள் மிகவும் கொடுமையாக உள்ளன. பள்ளியிலும் சரி, வீடுகளிலும் சரி, இந்தக் கட்டுப்பாடுகள் குழந்தைகளுக்கு மிகுந்த சிரமம் தருவதாய் இருக்கின்றன. பொதுவாகவே பள்ளி வாழ்க்கை குழந்தைகளிடமிருந்து குழந்தைத் தன்மையை முற்றிலும் அகற்றுவதாகவே உள்ளது. குழந்தைத் தன்மையை அகற்றிவிட்டால் பெரியவர்கள் போல் நடந்து கொள்கிற குழந்தைகள்தான் மிஞ்சுவார்கள். இதை எல்லா இடங்களிலும் பார்க்கிறீர்கள். பல பெரியவர்கள் பதின் பருவத்தினர் போல் நடந்து கொள்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்தில் குழந்தைத் தன்மையை இழந்திருக்கிறார்கள். இந்நிலை மேலைநாடுகளில் அதிகம் காணப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் தங்கள் குழந்தைத் தன்மையை இழந்தவர்கள், பிற்காலத்தில் குழந்தைத்தனமாக நடந்து கொள்ளத் தொடங்குகிறார்கள். ஒரு குழந்தை குழந்தையாக இருப்பது மிகவும் முக்கியம். அந்தக் குழந்தையை பெரியவர்களாக்க எந்த அவசரமும் இல்லை. ஒரு குழந்தை குழந்தைத்தனமாக நடந்து கொள்வது அற்புதமான விடயம். ஆனால் பெரியவர்கள் குழந்தைத்தனமாக நடந்து கொண்டால் அது வளர்ச்சியின்மையின் அடையாளம்.

நீங்கள் உங்கள் குழந்தையை நல்லவிதமாக வளர்க்க ஆசைப்பட்டால், முதலில் உங்களுக்குள் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்த இயலும் என்று பார்க்கவேண்டும். இதற்கு ஓர் எளிய பரிசோதனையை செய்து பார்த்தாலே போதும். ஓரிடத்தில் தனியாக அமர்ந்து உங்கள் வாழ்வில் எதையெல்லாம் மாற்றினால் நன்றாக இருக்கும் என்று தீவிரமாக சிந்தித்துப் பாருங்கள். அந்த மாற்றங்களை அடுத்த மூன்று மாதங்களில் கொண்டுவர என்னவழி என்று சிந்தியுங்கள். அந்த மாற்றங்கள் வெளியுலகை சார்ந்ததாக இருக்கக்கூடாது. உங்களைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். உங்கள் நடவடிக்கைகள், உங்கள் பேச்சு, உங்கள் செயல்முறைகள், உங்கள் பழக்கங்கள் ஆகியவற்றை மூன்று மாதங்களில் உங்களால் மாற்றிக் கொள்ள முடிந்தால் உங்கள் குழந்தைக்கு போதனை செய்கிற உரிமை உங்களுக்கு உண்டு.

ஒருவிதமான வாழ்க்கை முறையிலிருந்து இன்னொரு விதமான வாழ்க்கைக்கு மாற்றுவதற்கு என்னென்ன தேவை என்று உங்களுக்குத் தெரிந்தால், உங்கள் குழந்தையையும் நீங்கள் புத்திசாலித்தனமாகக் கையாள்வீர்கள். இல்லையென்றால் மற்றவர்கள் சொல்லும் அபத்தமான ஆலோசனைகளை பின்பற்றிக் கொண்டிருப்பீர்கள். குழந்தையை வளர்ப்பதில் ஆலோசனைகள் உதவாது. ஒவ்வொரு குழந்தையையும் கூர்ந்து கவனித்து அதன் வளர்ச்சிக்கு என்ன தேவை, அதற்கு என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என்கிற புரிதல்தான் முக்கியம். ஏனெனில் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதத்தில் அரியதோர் அற்புதம்.

இளம் குழந்தைகளுக்கு தயவுசெய்து ஆன்மீகத்தை அறிமுகம் செய்யாதீர்கள். ஒரு விதத்தில் பார்த்தால் மனிதர்களுக்கு ஆன்மீகம் குறித்து நினைவுபடுத்திக் கொண்டே இருப்பது ஆபாசமான விடயம். குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்களிடம் ஆன்மீகம் பேச அவசியம் இல்லை. முட்டுக்கட்டைகள் இல்லாத அறிவின் தன்மையுடன் வளர்வதற்கு நீங்கள் வாய்ப்பளித்தால், அவர்கள் ஆன்மீகத் தன்மையில் வளர்வது நிச்சயம். முட்டுக்கட்டைகள் இல்லாத அறிவின் தன்மை என்று சொன்னால், எந்த அடையாளத்தையும் ஏற்றுக் கொள்ளாத விதத்தில், உங்களோடு கூட தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் வளர்வதற்கு உங்கள் குழந்தைக்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். மனதில் எந்த அடையாளமும் இல்லாமல் வளர்கிற குழந்தை ஆன்மீகத் தன்மையோடுதான் மலரும். அதற்கு ஆன்மீக போதனை அவசியமில்லை. இது ஒரு செடிக்கு மலர்ச்சியை சொல்லிக் கொடுப்பது போன்றது. எந்த செடிக்கும் ஒரு பூவை எப்படி மலர்விப்பது என்று சொல்லித்தர வேண்டிய அவசியமில்லை. அதேபோல குழந்தைகளுக்கு ஆன்மீக போதனை அவசியமில்லை.

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தந்த அபத்தங்களையும், தந்திரங்களையும் மறக்கடிக்கச் செய்தால், இயல்பாகவே உங்கள் குழந்தை ஆன்மீகத் தன்மையை அடையும். வாழ்க்கை என்றால் என்ன? வாழ்வைக் கடந்து என்ன இருக்கிறது? என்று பார்ப்பது மனிதகுலத்தின் இயல்பான அறிவும் இயக்கமும் ஆகும். நீங்கள் என்னவாக இல்லையோ அவற்றுடன் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆழமான அடையாளங்கள் காரணமாக, இந்த உண்மையை நீண்ட காலமாக புறக்கணித்து வந்திருக்கிறீர்கள். உங்கள் உடலும் மனமும் கூட அத்தகைய அடையாளங்கள்தான். நீங்கள் என்னவாக இல்லையோ அவற்றுடன் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டால் உங்கள் அறிவு வளைந்து நெளிந்து போய்விடும். அந்த அடையாளங்களை சார்ந்தே இருப்பதால் அவை எதையுமே நேராகப் பார்க்காது.

மனிதர்களின் அறிவு நேர்நிலையில் இருக்கிறபோதுதான் ஆன்மீகம் இயல்பானதாக இருக்கும். அப்போது மற்றவர்கள் உங்களுக்கு சொல்லித்தர வேண்டியதாகவோ, நினைவுபடுத்த வேண்டியதாகவோ ஆன்மீகம் இருக்காது. வாழ்வின் பௌதீகத் தன்மைகளை கடந்த ஒன்று இருப்பதை உங்களால் மிக எளிதாக உணர முடியும். உலகில் மிகச் சிலர்தான் அதனை உணர்கிறார்கள், ஏனென்றால் குழந்தைப் பருவத்திலிருந்தே குறிப்பிட்ட சில விடயங்கள் உங்கள் மேல் திணிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடையாளங்களை இறுகப் பற்றிக் கொள்ளுமாறு பலரும் உங்களை ஊக்குவித்து வந்திருக்கிறார்கள். உங்கள் பெற்றோர்களும், உங்கள் ஆசிரியர்களும் அந்த அடையாளங்களை உங்கள் மேல் திணித்திருக்கிறார்கள். ஏனென்றால் அதுதான் அவர்களின் கல்வி முறையாக இருக்கிறது. உங்கள் தலைவர்கள் உங்கள் சாதி, இனம், நாடு ஆகிய அடையாளங்களை நீங்கள் சார்ந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒவ்வொருவருக்கும் இப்படி ஒவ்வொரு நோக்கம் இருக்கிறது.

இவையெல்லாம் எந்தப் பொருளுமற்றவை என்று நான் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் செய்கிற ஒரு விடயம் மிகவும் பயனுள்ளது என்பதற்காகவே அதனோடு உங்களை ஆழமாக அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. எப்போது உங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறீர்களோ அப்போதே நீங்கள் உருக்குலைந்து போகிறீர்கள். உருக்குலைந்து போனவர்களால் மக்களுக்கு நல்வாழ்வை கொண்டு வர இயலாது. உங்களுக்கு நல்ல நோக்கங்கள் இருக்கலாம். ஆனால் உங்கள் அடையாளங்களாலேயே இந்த உலகத்தை பல லட்சம் துண்டுகளாக சிதறடித்து விடுகிறீர்கள். இது மனித குலத்தின் ஒட்டு மொத்த நன்மைக்கு எந்த விதத்திலும் உதவாது.

எனவே உங்கள் குழந்தைகளுக்கு ஆன்மீக போதனையை வழங்காதீர்கள். அவர்களது உடல் மற்றும் மன மேம்பாட்டிற்காக சில எளிய யோகப் பயிற்சிகளை அவர்கள் மேற்கொள்ளலாம், அது போதுமானது!

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# HomeLife/GTA

## Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 ■ 45 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

TRIDEL BUILT FOR LIFE

# TRIDEL நிறுவனத்தின் புதிய வரவு

# ஒன்றின் விலையில் இரண்டு

* ஒரு வாகனத்தரிப்பு இடமும் சேர்ந்துள்ளது

COMPLETE SPRING 2014



TRIDEL BUILT FOR LIFE

## இந்த Floor plan இன் நன்மைகள்



* ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ வாடகைக்கு கொடுக்கலாம்.

* ஒன்றில் வாழ்ந்து கொண்டு மற்றையதை வாடகைக்க கொடுக்கலாம்.

* இரண்டையும் சேர்த்தும் வாடகைக்கு கொடுக்கலாம்.

* *Laundry* உம் உள்ளது.

* குறித்தளவு எண்ணிக்கையான இந்தவகை **Condo. Units** விற்பனைக்கு உள்ளன.

இந்த Floor Plan பற்றிய விளக்கத்திற்கு HomeLife/GTA Sales Rep. அழைக்கவும்

# இலக்கியவாதிகள் பிறந்த இடம்-குமரகம்



## கேரளா சுற்றுலா இடங்கள் - 7

கேரளா சுற்றுலாவில் ஆலப்புழாவுக்கு அடுத்து நாம் பார்த்திருக்க வேண்டிய இடம், குமரகம். ஆலப்புழாவின் காயல் பரவசத்தைத் தனக்குள் வைத்திருக்கும் ஆலப்புழாவின் இன்னொரு இனிப்புப் பிரதேசம். எத்தனை அதட்டினாலும் துறுதுறுவென அலைந்து கொண்டிருக்கும் குழந்தையைப் போல அலையடித்துக் கொண்டே இருக்கிறது குமரகம் அரபிக்கடல். உள்ளுக்குள் பேரமைதியைத் தேக்கிவைத்து கரையோரம் பேரிரைச்சல் காட்டும் கடல்.

குமரகம் என்றதுமே, அனைவருக்கும் நினைவுக்கு வருவது ஆயுர்வேத மசாஜாகத்தான் இருக்கும். அடல் பிஹாரி வாஜ்பாய், இந்தியப் பிரதமராக இருந்தபோது இங்கு மசாஜ் எடுத்துதான் தன் உடல்நிலையை மேம்படுத்திக் கொண்டார். அதுவரைக்கும் ஆலப்புழா சுற்றுலாவின் ஒரு பகுதியாக இருந்த குமரகம், அதன்பிறகு தனி ராஜாங்கம் ஆகிவிட்டது. பாப் உலகின் இளவரசி பிரிட்னி ஸ்பியர்ஸ் ஒரு புத்தாண்டை குமரகமில் கொண்டாடி, தனக்கு மிகவும் பிடித்த இடங்களில் குமரகமும் ஒன்று எனச் சொல்ல, குமரகம் உலக பிரச-ித்தி பெற்றுவிட்டது. இந்தியாவின் மிகப்பெரிய இரண்டு இலக்கியவாதிகள் பிறந்த இடம் என்ற பெருமையும் குமரகமுக்கு உண்டு. ஒருவர், தகழி சிவசங்கரன் பிள்ளை. இன்னொருவர், அருந்ததி ராய். கடற்கரைக்கும் ஆலப்புழா நகருக்குமான தொலைவு ஒரு சில கிலோமீட்டர்தான். பத்து நிமிடப் பயணத்தில் மறுபடியும் படகுத்துறையை வந்தடைய முடியும். அடுத்து....? குமரகம். ஊரின் மேற்கு திசையில் நீண்டு விரிந்திருக்கிறது நெடிய கடற்கரை. ஐஸ்க்ரீம்காரர்களும் சுண்டல் சிறுவர்களும் அங்குமிங்கும் அலைகின்றனர். தின வாழ்வின் அசௌகர்யங்களிலிருந்து விட்டு விலகிவந்து குதூகலிக்கும் பல்வேறு நாட்டு சுற்றுலாப் பயணிகள் அந்த பிராந்தியத்துக்கு கூடுதல் அழகூட்டுகின்றனர். முகக் கண்ணாடியில் சூரிய வெளிச்சத்தைப் படச்செய்து, அதில் எதிரொளிக்கும் ஒளிக்கதிர்களை இன்னொரு முகத்தில் விசி-றியடித்து மகிழும் சிறுவனைப் போல, தன் மீது படும் கதிர்களை எல்லாம் ஒளி பிம்பங்களாக்கி கரை மீதிருப்பவர்கள் மீது திருப்பி விடுகிறது, கடல். குமரகோம் கடலோரம் கரையொதுங்கும் பெயர் தெரியாச் சிறு பொருட்களில், ஆப்பிரிக்கப் பழங்குடியினரின் அணிகலன், மிக்கி மவுஸ் படம் பதித்த குழந்தையின் குட்டி காலணி... என பல ரகங்கள் உண்டு. இவை அலை நீரில் கால் நனைக்கும் சுற்றுலாப் பயணிக-ளின் முகமெங்கும் மகிழ்ச்சியின் வெளிச்சத்தைப் பரவச் செய்யும். தீராத கடல் விளையாட்டு மனதுக்கு அலுப்பூட்டும் போது, அதன் கரையோரம் தங்குவதற்கு தரமான காட்டேஜ்களும் குழந்தைகள் விளையாடச் சிறு பூங்காவும் உண்டு.

ஆலப்புழாவிலிருந்து குமரகத்தை அடைய தரைமார்க்கமாகவும் நீர் மார்க்கமாகவும் இரண்டு வழிகள் உள்ளன. சாலை வழியே காரில் போனால் ஒன்றரை மணி நேரமும் நீர் வழியே போனால் மூன்று மணி நேரமும் ஆகும். காரில் போனாலும் குமரகம் அழகை ரசிக்கலாம் என்றாலும், காரில் போவதற்கா இவ்வளவு தூரம் வந்தோம்? படகில் போகலாம், கேரளாவின் அழகைப் பருகலாம். ஆலப்புழாவிலிருந்து தனியார் படகுகள் வாடகைக்குக் கிடைக்கின்றன. 1,000 முதல் 1,200 ரூபாய் வரை வாடகை. கொஞ்சம் நேந்திரம் சிப்ஸை வாங்கிக்கொண்டு படகில் அமர்ந்தால் சுகம், சுகம்தான். நீர்வழிப் பயணத்தின் இடையிடையே காணக் கிடைக்கும் கேரள கிராமங்களும் அந்த மக்களின் கலாசாரமும் தனி அழகு. பத்தில் ஐந்து பேர் முகங்களில் சந்தனப்பொட்டு பளிச்சிடுகிறது. அது எல்லோர் முகங்களிலும் கருணையையும் சாந்தத்தையும் நிரம்பி வழியச் செய்கிறது. “சேட்டா... இ ஸ்தலத்திண்டே பெருமை அறியுமோ..?” எனத் தொடங்கும் படகின் ஓட்டுநர், அத்தனை ஆர்வமாக பேக்வாட்டர் பிரதேசத்தை விவரிக்கிறார். ‘திக்கெங்கும் சூழ்ந்திருக்கும் நீர்ப்பரப்பின் சூட்சுமங்கள் அனைத்தும் எனக்குத் தெரியுமாக்கும்’ என்பதான சிறிய பெருமை அவரது முகத்தில் எட்டிப் பார்க்கிறது. ஆனால், இதுபோல் எத்தனை பேருக்கு சொல்லியிருப்பார்.

**- வழிப்போக்கன் -**

தொடர்ச்சி 37ஆம் பக்கம்




New
JAASMIN
Banquet
HALL
Wedding - Banquets - Birthday - Parties - Anniversaries
Meeting - Family Events
Call: 416 937 1145 / 416 827 6660
905.477.3331
90 Nolan Court, Unit #50 Markham, ON L3R 4C9
www.newjaasmin.ca
905.477.3350


New
JAASMIN
Banquet
HALL
நியு ஜாஸ்மின் ஸ்தாபனத்தாரின் புதிய சேவை
Catering & Delivery
உங்கள் நாவுக்கு சுவையூட்டும் சைவ மற்றும் அசைவ உணவுவகைகளை
நீங்கள் Order செய்து பெற்றுக் கொள்ளலாம்.
Call: 416 265 3360 / 416 937 1145 / 416 827 6660
Can Order Through
Online
newjaasmin@hotmail.com
கிராமத்து மண்வாசனையுடன் கூடிய
ஈழத்து உணவுவகைகளுடன்
இந்திய மற்றும் மேலைத்தேய உணவுவகைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
90 Nolan Court, Unit #50 Markham, ON L3R 4C9
www.newjaasmin.ca
905.477.3350
905.477.3331




## நிகழ்ச்சிகளுடன் நீங்கள் இரண்டறக் கலந்துவிடுங்கள். நீங்கள் விரும்பியபடி $462[1] ஐயும் சேமியுங்கள்.

தொடர் நாடகங்கள். விறுவிறுப்பான நிகழ்ச்சிகள். செய்திகள். பாடல்கள். கிரிக்கெட். திரைப்படங்கள்.

கீழே காணப்படும் அலைவரிசைகளில் குறைந்தது ஏதாவது ஒன்றை $10.10 அலைவரிசை ஒன்றிற்கு/மாதம்[2] தெரிவு செய்வதன் மூலம் றோஜேர்ஸ் டிஜிட்டல் TV ஐ சிறந்த விலைக்குப் பெறுங்கள்.

$21.29 / மாதம்
2 வருட ஒப்பந்தத்துடன்*
(மாதந்தக்கட்டணம் மற்றும் நியமத்தரமான டிஜிட்டல் பெட்டி வாடகையும் உட்பட)[3]

*மாதக் கட்டணம் வரும் மார்ச், 1, 2012 முதல் $23.32/மாதம் ஆக உயர உள்ளது.

றோஜேர்ஸ் டிஜிட்டல் அடிப்படை TV வாடிக்கையாளரான நீங்கள் பின்வருவனவற்றை மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்:

- 170 இற்கும் மேற்பட்ட டிஜிட்டல் அலைவரிசைகளுடன் வருடம் முழுவதும் இலவசமாக அலைவரிசைகளின் முன்னோட்டங்களையும் பார்க்கலாம்
- பிரபலமானவர்களின் பேட்டிகள் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகளை Rogers On Demand Online இல் பாருங்கள் (RogersOnDemand.com)[4]

குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே இந்த சலுகை. மாற்றுங்கள் அத்துடன் இன்றே சேமியுங்கள்! அழையுங்கள் 1 866 622-7542

ROGERS™

Offer available to new Rogers Digital TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. Taxes extra. **1** Savings of $462.72 over two years is based on Digital Basic regular monthly service fee of $40.57/mo. as compared to $21.29/mo. promotional rate for 2 years (including CRTC Local Programming Improvement Fund Fee, monthly Digital Service Fee and standard digital box rental). Effective March 1, 2012, savings of $462.72 over two years is based on Digital Basic regular monthly service fee of $42.60/mo. as compared to $23.32/mo. promotional rate for 2 years (including CRTC Local Programming Improvement Fund Fee, monthly Digital Service Fee and standard digital box rental). **2** Includes where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. **3** Includes monthly Digital Service Fee of $2.99 and SD box rental of $4.49 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Regular monthly rates apply after promotional period. 2-year term required for Digital TV. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription. **4** Charges apply to some On Demand programming content. Rogers On Demand Online only available in Canada with an Internet connection. © 2012

# திரை விமர்சனம் - காதலில் சொதப்புவது எப்படி?

காதலில் தோல்வியுற்ற ஒருவன் தனது தோல்வியைக் குறித்து சிந்தித்து, அலசி ஆராய்ந்து, இறுதியில் அதில் இருந்து பாடம் கற்றுக்கொள்வதுதான் இப்படத்தின் கதை. அவனது காதல் மட்டுமல்லாமல், பெற்றோர் காதல், நண்பர்கள் காதல் எல்லாவற்றையும் பார்க்கும் அவனுக்கு ஒன்று மட்டும் புரியாத புதிராகவே உள்ளது. ஒருவரையொருவர் விரும்பி, புரிந்துகொண்டு காதலிக்கும் இருவர், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் விரும்பாத சில பண்புகளை திரும்பத் திரும்பக் கிளறிப் பார்த்து அதனால் உண்டாகும் சிக்கலாம் விலகிக்கொள்வதும், பிறகு பிரிவின் வலியால் வாடி பரஸ்பரம் விரும்பும் குணங்களைப் பிரதானப்படுத்தி திரும்பத் தழுவிக் கொள்வதுமாக நடக்கும் காதல் கண்ணா மூச்சி விளையாட்டுக்கு என்ன அர்த்தம்?

500 Days of Summer ஹாலிவுட் படத்தின் தமிழ் தழுவல்தான். ஏற்கெனவே, கவுதமமேனன் இந்தப் படத்தைத் தழுவி தமிழில் 'விண்ணைத்தாண்டி வருவாயா' எடுத்து விட்டார். என்றாலும், சாமர்த்தியமாகவும் 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தை ஞாபகமூட்டாத தனித்தன்மையுடனும் 'காதலில் சொதப்புவது எப்படி?' படத்தை எடுத்துள்ளார் அறிமுக இயக்குநர், பாலாஜிமோகன். படம் முழுக்க, கதாநாயகனான அருண், தன் காதலைச் சொல்வதாக பின்னணிக் குரல் கதையை நகர்த்துகிறது. அருண் தன் காதல் தோல்வியால் கசப்புற்று அவநம்பிக்கையுடன் இருக்கிறான். அவனுக்கு தன் காதல் கதையை சொல்வதில் ரொம்ப ஈடுபாடெல்லாம் இல்லை. அது தன்னை காயப்படுத்தும் என்று அந்த நினைவுகளை கடந்துவிட எத்தனிக்கிறான். ஆனால், தன் நண்பர்களின் வெவ்வேறு காதல்களை விவரிக்கும் போது, உதாரணத்துக்காக வேறு வழியின்றி சொல்வது போல், "இப்படித்தாங்க என் லைப்பிலயும் நடந்திச்சு" என்று தன் கதையை நடுநடுவே ஆரம்பிக்கிறான். ஒவ்வொரு வசனத்தின் இறுதியிலும் முற்றுப்புள்ளி போல் கட்டாயம் ஒரு பெருமூச்சு விடுகிறார்.

'500 டேய்ஸ் ஆப் சம்மர்' படத்தில் கதா நாயகி சம்மர் விடாப்பிடியான, வலுவான ஆளுமை கொண்டவள். அவளைக் காதலிக்கும் டாம் தொட்டால் சுருங்கும் பையன். அவனது பணிவும் இனிமையான சுபாவமும் அப்பிராணி எனும் தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. ஒருநாள் சம்மர், "நான் உன்னை நிஜமாகவே காதலிக்கவில்லை" என்று உதறித் தள்ளும் போது மனதளவில் நொறுங்கி விடுகிறான். 'காதலில் சொதப்புவது எப்படி?' படத்திலும் இப்படித் தான். பணிவான பையன், முரட்டுத்தனமான பெண். படம் ஆரம்பிக்கும் போதே, பார்வதிக்கு எதிர்பாராமல் கோபம் வந்து ஒரு கண்ணாடி கோப்பையை தூக்கி எறிந்து அருண் மண்டையை உடைத்து விடுகிறாள். பார்வதி ஏன் இப்படி இருக்கிறாள்? ஆவேசமாக தன்னை நேசித்த அவள் அதே ஆவேசத்துடன் தன்னை தாக்கவும் செய்கிறாளே, ஏன்? காதலிப்பது ஏன் இவ்வளவு சிரமமாக இருக்கிறது, ஏன் பெண்கள் இப்படி புதிர்மயமாக இருக்கிறார்கள்? இந்த கேள்விகளுடன்தான் அருண் பேசத் தொடங்குகிறான். இந்த கேள்விகளை தவிர வேறெந்த நபர்களையோ, அவர்களின் வாழ்வு பற்றியோ அருண் யோசிப்பதில்லை.



பார்வதியின் கண்டனத்துக்குரிய செயல்களுக்கு அவளது அப்பாவை திடீரென்று இழந்த அதிர்ச்சி, பாதுகாப்பின்மை காரணமான பதற்றம் ஆகியவை காரணமாக இருக்கலாம் என யோசிக்கிறான் அருண். பார்வதி, அருண் இருவரது பெற்றோர்களும் காதலித்து மணம் புரிந்தவர்கள்தான். அருணின் பெற்றோர்களின் காதல் நிலைக்கிறது. அவர்களும் தனது மகனின் உணர்வுகளை மதிக்கிறார்கள். பார்வதியின் பெற்றோரோ, தங்களுக்கு மகள் இருப்பதையே பெரிதாக நினையாமல் விவா-கரத்து செய்யும் முடிவை எடுக்கிறார்கள். அவள், அருணை காதலிப்பது வீட்டை விட்டு போன தன் அப்பாவின் ஸ்தானத்தில் அவனை வைத்து ஆறுதல் தேடுவதற்கு தான். பின்னர், அப்பா மீதுள்ள அவளது வெறுப்பும் ஏமாற்றமும் அருண் மீது மெல்ல மெல்ல தொற்றுகிறது. பார்வதி குடும்பம் நிலைப்பட்டதும் அவள் பழையபடி அமைதி யாகி அருணை ஏற்கிறாள். படம் முடிவில் அருண் ஒரு தெளிவுக்கு வருகிறான். அது காதலின் வெற்றி, தோல்வி பற்றி அலசுவது வீண் என்பதுதான். 'என்னதான் தர்க்கரீதியாக ஆராய்ந்தாலும் வாழ்வின் சிக்கலான போக்கின் முன் அவை அத்தனையும் தோற்றுப் போகும். சொதப்பலோ இல்லையோ காதலை அதன் போக்கில் செய்வதுதான் நல்லது. பெண்களின் விசித்திர குணங்களை புரிய முயலாமல், ஒழுக்க நியாயங்களை விசாரணை செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் உசிதம்.' '500 டேய்ஸ் ஆப் சம்மர்' கதாந-ாயகி டோமை நிராகரிப்பதற்கு, "தன்னால் யாரையும் காதலிக்க முடியாது. காதல் உணர்ச்சிகளே தனக்கு எழாது. ரொமாண்டிக் தன்மையே இல்லாதது தன் ஆளுமை" எனக் காரணம் சொல்வாள். ஆனால், அடுத்த முறை அவன் பார்க்கும் போது அவள் எதிர்பாராமல் வேறொருவனை காதலித்து கல்யாணமும் செய்திருப்பாள். "எனக்கே தெரியாது, இது எப்படி நிகழ்ந்தது என்று. பார்த்த உடனே அவரைக் காதலிக்கத் துவங்கி உடனே கல்யாணமும் செய்துகொண்டு விட்டேன். ஆனாலும், இப்பொழுதும் எனக்கு காதலின் விழுமியங்களில் நம்பிக்கை இல்லை" என்பாள் சம்மர்.

'காதலில் சொதப்புவது எப்படி?'யில் அருணும் நண்பர்களும் பாண்டிச்சேரிக்கு ஒரு நிச்சயதார்த்தத்திற்கு செல்கிறார்கள். அங்கு அவர்கள் சந்திக்கும் கேத்தி, ஜான் மற்றும் கேத்தியின் முன்னாள் காதலன் ஆகியோருடனான உரையாடலில், 'ஆண்கள் சைக்கோத்தனமாக பெண்களை சந்தேகப்பட்டு கட்டுப்படுத்த முயல்கிறார்கள்' என்ற விஷயம் விவாதமாகிறது. அருண், பார்வதியிடம் மெச்சிக்கொள்கிறான்: "நான் ஒருநாளும் உன்னை கண்டுரோல் பண்ண டிரை பண்ணினது இல்லையே". அதற்கு பார்வதி திரும்ப கேட்கிறாள்: "Who are you to control me?".

மிக அப்பிராணியாக தெரியும் அருணுக்குள்ளும் மிக நுட்பமாக பெண்களை கட்டுப்படுத்தும் அதிகார மோகம் செயல்படுகிறது.

பாண்டிச்சேரியில் சந்திக்கும் கேத்தி, பார்வதிக்கு நேர்மாறாக அமைதியான முதிர்ச்சியான பெண். அழகானவளும்கூட. கேத்தியின் பிரச்சினை அவளது முதல் காதலன் அவளை கட்டுமீறி சந்தேகப்படு கிறான் என்பது. எனவே, கேத்தி முதல் காதலனிடம் முறித்துக்கொண்டு இரண்டாவ தாக ஜானை காதலிக்கிறாள். அவர்களின் நிச்சயதார்த்தத்துக்குத்தான் அருணும் நண்பர்களும் பாண்டிச்சேரி வருகிறார்கள். இந்த குழுவில் சேர்ந்துகொள்ளும் முதல் காதலன் வஞ்சக எண்ணத்துடன் மெல்ல மெல்ல ஜானின் மனதில் விஷத்தை ஏற்றுகிறான். கேத்திக்கும் அருணுக்கும் கள்ளக்காதல் என்ற சந்தேகத்தை விதைக்கிறான். ஜான் அதை உடனடியாக நம்பி திருமணத்தை முறிக்க எத்தனிக்கிறான். 'ஏன் பெண்கள் இப்படி எதிர்பாராத விதமாய் மாறுகிறார்கள்' என்று யோசித்து வந்த அருண், இந்த அனுபவத்தினால், 'மனிதர்கள் ஏன் ஒட்டுமொத்தமாக இப்படி விநோதமாய் இருக்கிறார்கள்' என்று வியப்படையத் தொடங்குகிறான்.

அருண் பெற்றோர் காதல் வெற்றிக்குக் காரணம் அவனது அப்பா நன்றாக சம்பாதித்து குடும்பத்தை பார்த்துக் கொள்கிறார் என்பது. பார்வதியின் அப்பாவுக்கு இந்த சாமர்த்தியம் போதாது

**- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

என்பதால் அவரது காதல் கசக்கிறது. பணமும் அந்தஸ்தும் நிறைய சாமர்த்தியமும்தான் காதலின் நிலைப்புக்கு அஸ்திவாரம். காதல் திருமணங்கள் தோற்பதற்கு இதில் ஏதாவதொன்று குறைவதே காரணம் என்ற எதார்த்தம் நாசுக்காக இப்படத்தில் கையாளப்பட்டுள் ளது. இவர்கள் மூலம், இளம் வாலிப உள்ளங்களின் காதலை அவர்களே அவ்வப்பொழுது சீரான இடைவெளிகளில் எப்படி சொதப்பிக் கொள்கின்றனர் என்பதை மட்டுமல்லாமல், கணவன் - மனைவி திருமண வாழ்வை சொதப்பிக் கொள்ளாமால் இருப்பது எப்படி என்பதையும் பேசுகிறது படம். ஆண், பெண் இருவரது சிந்தனை மாறுபாடுகளை சொல்வது படத்தில் மனதில் நிற்கும் காட்சி. ஆண், அரை மணி நேரம்கூட ஒன்றும் யோசிக்காமல் அப்படியே இருப்பான். ஆனால், காதலி அதை நம்ப தயாராக இருப்பதில்லை. "நீ என்ன யோசிக்கிறாய்?" என்று அவனை ஐயப்பட்டுக் கொண்டே இருக்கிறாள்.

சித்தார்த் மிக கச்சிதமான தேர்வு. பத்து வருடங்களுக்கு முன்பு கல்லூரி மாணவனாக 'பாய்ஸ்' படத்தில் நடிக்க ஆரம்பித்த

**தொடர்ச்சி 26ஆம் பக்கம்**


## வெளிவந்துவிட்டது!

பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற

Dr. கோபால் அவர்களின்

**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**

**மருத்துவ கைநூல்.**

கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

## LAW OFFICE

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# BASEMENT RENT

**NEILSON & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Working people preferred. Avail. immediately.
416.332.4759 / 416.545.9959

**BRICHMOUNT & FINCH**
2 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, Tamil stores, school, etc. No smoking. Avail. immediately.
416.568.0686 / 647.864.7426

**BRIMLEY & SHEPPARD**
1 Bedroom bsmt. for rent. Sep. entrance. Cable, laundry. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Close to bus, stores & Scarborough Center. Avail. immediately.
416.999.4842 / 416.299.9853

**MORNINGSIDE & MORNINGVIEW**
1 Bedroom bsmt + 1 bedroom in mainfloor for rent. Laundry, parking. Close to all facilities. Avail. Anytime. Ladies or Old people preferred.
தொடர்புகளுக்கு: 647.401.6479

**LAWRENCE AVE. & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.701.0667

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.801.3840

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, mall. Small family preferred. Avail. Anytime.
416.464.4207 / 416.431.6349

**MARKHAM & 14TH AVE.**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.9457

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. ஒருஅறை மேல்தளத்திலும் வாடகைக்கு உள்ளது. Avail. April 01, 2012. Small family or single person preferred.
416.431.4730 / 647.771.3801

**MARKHAM & DENISON**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.520.0496

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2012.
தொடர்புகளுக்கு: 905.947.8018

**ELSON & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 416.569.7882

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall, public school, high school. Avail. April 01, 2012.
தொடர்புகளுக்கு: 905.472.1438

**KENNEDY & EGLINTON**
Very convenient location with all facilities. One bedroom, livingroom, dining, kitchen, stove, fridge, washroom etc. Sep. entrance + parking. Very good working couple or small family. Avail: immediately.
தொடர்புகளுக்கு: 416.264.3899

**McLEVIN & NEILSON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, laundry. Very nice & clean. Close to doctors offices, Malvern mall, school & library. For immediate occupation.
Contact: 416.281.2105
Call after 6:00 pm & weekends anytime

**NEILSON & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, U oF T, hospital, mall. Ladies, students or couple preferred. Avail. immediately.
416.284.9129 / 416.200.9026

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Living Room, Kitchen, Full wash room, Sep. entrance. Close to TTC, School, Town Center and all facilities. Quiet place. Avail. immediately.
416.265.9138 / 416.271.8467

**BRIMORTON & MCCOWAN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school, park, TTC, Scarborough Town. Avail. immediately.
416.439.1570 / 416.431.5195

**SHEPPARAD & DONMILLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet, cable. Close to hospital, college. Ladies or couple preferred. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 647.222.4076

**SCAR.GOLF CLUB & BRIMORTON (MARKHAM & ELLESMERE)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.278.0349

**FINCH & NEILSON**
2 Bedroom bsmt with kitchen for rent. Laundry, tv cable (With a tamil channel). Sep. entrance & parking. Close to school, bus stop. Suitable for couple or small family. Avail. immediately.
647.852.3330 / 416.754.4968

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Freshly painted 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, plaza, library. No pets & No smoking. $800 Price negotiable.
தொடர்புகளுக்கு: 416.828.5454

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Utilities included. Close to all facilities. No Smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.292.7346 / 416.217.8610

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable, internet. Close to TTC, pizza, mall. Students, working people or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.899.1123

**MARKHAM & DENNISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.868.2131

**BRIMORTON & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. washroom and kitchen. Sep. entrance. Rent $550. Non smokers & Working people preferred.
தொடர்புகளுக்கு: 416.884.0513

**MORNINGSIDE & NIGHT STAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.473.2988 / 647.990.4584

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. April 01, 2012.
தொடர்புகளுக்கு:416.717.8979

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, livingroom. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**MORNINGSIDE & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.0633

**WARDEN & LAWRENCE**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.267.0161

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school, tamil stores. Non smokers. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.406.2999

**MCCOWAN & STEELES**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, 2 car parking, laundry full washroom, kitchen. Close to 24 hrs. bus service, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.4363

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
905.599.1622 / 647.986.8622

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Close to TTC, YRT. Parking, Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.376.5811

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. March 01, 2012.
416.438.2626 / 647.286.7687

# HOUSE FOR RENT

**ROSELAND & WESTNEY**
4 bedroom New house for rent. Close to all hwy 401, school, TTC. Avail. April 01, 2012.
647.765.5072 / 905.239.1740

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately. Rent $1500 + bills.
647.293.7090 / 416.283.9696

**FINCH & NEILSON**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.473.2988

**BIRCHMOUNT & ELLESMERE**
3 Bedroom house for rent. Kitchen, living room, 2 1/2 washroom. Close to all facilities. No pets & No smoking. $1,590 + utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.5311

**MORNINGSIDE & ELLESMERE**
4 Bedroom + 2 bedroom bsmt house for rent. Close to all facilities. University on Ellesmere Rd. Avail. Anytime. வீடு தனியாகவும் bsmt தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.201.2542

**STEELES & 9TH LINE**
4 Bedroom house for rent. 4 Washrooms. Close to all facilities. 2 Bedroom bsmt also Avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.931.3444

# HOUSE FOR SALE

மானிப்பாயில் 3 3/4 பரப்பு காணியில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. கோவில், வைத்தியசாலை, பாடசாலை என்பன அருகில் உள்ளன.
011.94.11.250.3018 / 416.500.9864
mohan1821@hotmail.com

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living hall. Close to TTC, mall. Avail. Anytime. Bachelor student preferred.
416.624.6895 / 416.498.7914

**FINCH & WARDEN**
1 Room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
416.431.9950 / 416.557.7241

**MIDDLEFIELD & FINCH**
Upper level 1bedroom avail. Share kitchen, washroom, laundry, internet, cable. Close to TTC, GTA Mall, restaurants. Woman preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.966.5440

**BURNHAMTHORPE & Q.E.W.**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.720.0898

**MARKHAM & DENISON**
1 Bedroom for rent in a bsmt & 1 bedroom available in main floor. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.339.1062

2 அறைகள் கொண்ட Condo. ஒன்றில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Kitchen, washroom. சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. மல்வேன் மோல் (Malvern Mall) இற்கு முன்பாக அமைந்துள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.804.6693

**MARKHAM & STEELES**
1 Room for rent. Close to all facilities. Internet. Walmart, TTC, YRT. Avail. immediately. Senior or girls preferred.
தொடர்புகளுக்கு: 416.722.5631

**MORNINGSIDE & NEILSON**
1 Room for rent. Parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.8362

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. ஒருவர் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**DANFORTH & EGLINTON**
Upper level 2 bedrooms for rent. Close to all facilities. Avail. immediately. Each room rent $350.
647.216.7326 / 416.289.0510

# ROOM RENT

**CORNALL CENTER BLVD & NORTH OF HWY 7**
1 Bedroom for rent in a coach house. Sep. entrance, parking, kitchen, washroom, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.270.2677

**BASEMENT APARTMENT / ROOM FOR RENT**
Newly renovated bsmt / room available for rent. Close to TTC, Cedarbrae mall, schools, shopping. தொடர்புகளுக்கு:
647.706.4881 / 416.439.4076

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

# CONDO. FOR SALE

**MCCOWAN & SHEPPARD**
2 Bedroom + 2 washroom condo. for sale. Close to all facilities. Avail. immediately. 1700sq.ft. Asking price $240,000.
தொடர்புகளுக்கு: 416.471.3622

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுட செய்தரப்படும். Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## CATERING & TAKEOUT FOR SALE

10 வருடம் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Catering & Takeout business for sale. Avail: immediately.
தொடர்புகளுக்கு: 905.399.9262

## CONVENIENCE STORE FOR SALE

Convenience store for sale. Close to all facilities. Asking price $60,000. 2 Rooms also avail.
தொடர்புகளுக்கு: 416.471.3622

## BUSINESS FOR SALE

**MCCOWAN & EGLINTON**
Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது. 1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

# திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து Toronto வில் வேலை பார்க்கும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட 2 இல் செவ்வாய் உள்ள 34 வயதுடைய B.A. பட்டதாரியான மணமகனுக்கு நல்ல குணமுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.768.8105

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயது பல்கலைக்கழகப்பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

வன்கூவரில் அரசாங்க நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பிராமண குல 33 வயது ரேவதி நட்சத்திரம் சாதகத்தில் பாவம் குறைந்த மணமகனுக்கு நல்ல மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: விளம்பரம்
**5215 FINCH AVE. E., #201,**
**TORONTO, ON M1S 0C2, CANADA**

## மணமகன் தேவை

1985 இல் பிறந்த பல்கலைக்கழகப் பட்டதாரியான 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ரொரன்ரோவில் படித்த வேலை புரியும் நற்குணமுள்ள மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: விளம்பரம்
**5215 FINCH AVE. E., #201,**
**TORONTO, ON M1S 0C2, CANADA**

# சமைத்த உணவு

யாழ்ப்பாண முறைப்படி அரிசிமா குழல் புட்டு (சிவப்பு, வெள்ளை) சகல விதமான வைபவங்களுக்கும் செய்து கொடுக்கப்படும். கேசரி இலவசம். யாழ். சமையல் கலை நிபுணரால் தயாரிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.561.2165

# CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 416.832.1359

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# WANTED

**DOWNTOWN** இல் உள்ள Thai restaurant க்கு **Delivery Driver, Kitchen Helper, Cook** தேவை. ஆங்கிலம் எழுத, வாசிக்க கூடியவர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.889.3191 / 416.497.7660 / 647.771.6237

## தேவை!

**Stouffville** பகுதியில் வாழும் குழந்தைகளோடு துணையாக இருப்பதற்கு முதிய பெண் ஒருவர் தேவை. புதிய வீடு. இருப்பிட வசதி உணவு யாவும் கொடுக்கப்படும்.
416.551.4419 / 905.591.1668

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஸ்காபுரோவில் ஆண் ஒருவரை வீட்டில் பராமரிப்பதற்கு அனுபவமிக்க பெண்மணி ஒருவர் தேவை. வசதிகள் கொண்ட அறையும் உணவும் வழங்கப்படும். ஆங்கிலம் பேசக்கூடியவர், வாகனம் ஓடத்தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 647.701.1354

# JOB! JOB!

அச்சகம் ஒன்றில் பணிபுரிய ஒருவர் தேவை. Photoshop, Corel draw நன்கு தெரிந்த தமிழ், ஆங்கிலம் சரளமாக பேச, எழுதக்கூடிய பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.922.9686

## வேலைக்கு ஆள் தேவை

**FINCH & MIDDLEFIELD**
தமிழ் உணவகம் ஒன்றிற்கு Cashier & Cook தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.286.9334

## வேலைக்கு ஆள் தேவை

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றில் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238


## COMPUTER REPAIR

+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568


# STORE FOR SALE

**BIRCHMOUNT & SHEPPARD**
2248 BIRCHMOUNT ROAD உள்ள Daisy Mart ஒன்று விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.293.6860

**TUTORING (WEB DEVELOPMENT)**
**By Experienced Graduate Tutor**
*Math 6 - 11, Physics - 11*
*Data Management - 12*
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTML, ASP, PHP & Mysql, Networking CCNA Prep. Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

மேலும் பக்கங்கள் 25, 26



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070**

**Tutorial 292 Questions**

(1) Find the domain of the composite function (fog) (x)
f o g) (x)   f( x) = x/x + 3,  g(x) = 2/x   (For Gr. 12)

(2) Prove that for any vectors U & V
$|u + v|^2 + u - v|^2 = 2(|u|^2 + |v|^2)$

(3) A ught plane is travelling at 175 km/h on a heading of N 8° E in a 40km/h wind from N 80° E. Determine the plane's ground velocity?   (For Gr. 12)

(4) The vector U and V are linearly independent find S if the vectors (1-S) U - 2/3 V and 3U + S V are paralled   (For Gr. 12)

(5) For what values of a and b will the parabola $Y = x^2 + ax + b$ be tangent to the $y = x^3$ at the point (1,1) (For Gr. 12)

## 10 வருட அடமானக்கடன்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

குறைத்துள்ளது. இந்த அடமானக் கடனின் போட்டி ஆதன விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதனைக் காணலாம். இந்த குறைந்த வட்டிவீதம் மார்ச் 28, 2012 வரை மட்டும் தான் கிடைக்கும் எனவும் சில நிபந்தனைகளுடன் அடமானக் கடன் வழங்கப்படும்.

ஏற்கெனவே பலதடவை, கனடிய மக்களின் அளவுக்கதிகமான கடனைப்பற்றி சந்தர்ப்பங்களில் சிறந்த முடிவாக இருக்கமுடியாது எனத் தெரிவித்துள்ளார்கள்.

குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்களால் ஆதனத்தை விற்று இடம் மாறவேண்டி ஏற்பட்டால், அடமானக்கடனை முறிப்பதற்குரிய தண்டனை (Mortgage Penalty) மிகப்பெரிய அளவாக இருக்கலாம். இந்த அடமானக்கடனை முறிப்பதற்குரிய தண்டனை பற்றி,



தொடர்ந்து குரல் கொடுத்துவரும் மத்திய நிதியமைச்சர் தனது இந்த மாதக்கடைசி (March)யில் கொண்டுவர இருக்கும் கனடிய வரவு செலவுத்திட்ட அறிக்கையில், சில இறுக்கமான நிபந்தனைகளை ஏற்படுத்தி னால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

சில பொருளாதார ஆலோசனைகளின் அறிவுத்தலில் 10 வருட மாறாத (10 years closed mortgage) கடன் பெறுவது அனேக அனேகமான நிதிநிறுவனங்கள் இலகுவாக புரிந்து கொள்ளுமாறு தெரியப்படுத்துவதில்லை என்பதனையும் கவனத்தில் கொள்க. எந்த முடிவும் தனிப்பட்டவர்களின் பொருளாதார நிலைமைகளிற்கு ஏற்ப எடுப்பதே சிறந்ததாகலாம். அத்துடன் தகுந்தவர்களும் ஆலோசனை செய்து முடிவு எடுத்தால் உங்களுக்கும் உங்களுடன் சார்ந்தவர் களுக்கும் பலனைக் கொடுக்கலாம்.

## திரைவிமர்சனம்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

சித்தார்த், இப்பொழுதும் கல்லூரி மாணவன் பாத்திரத்துக்கு அழகாகப் பொருந்துகிறார். அமலாபாலும் அப்படித்தான். அமலாபாலின் முடி அலங்காரம் இந்தப் படத்தில் ரொம்ப வித்யாசமா இருக்கிறது. தலையை முழுக்க பின்னிட்டு, நாலைந்து முடியை எப்போதும் முன்னே எடுத்து விட்டிருப்பது எதோ ஒரு விதத்தில் தனி தன்மையுடன் அழகாக இருக்கிறது.

அடி வாங்குகிறார். முப்பதாண்டுகளுக்கு முந்தைய 'இளஞ்ஜோடிகள்' சுரேஷை ஞாபகம் வைத்திருப்பவர்கள் இதில் அப்பா பாத்திரத்தில் வரும் சுரேஷைப் பார்த்தால் அதிர்ந்து போவார்கள். அமலாபாலின் அப்பாவாக வரும் சுரேஷும் அமலாபாலின் அம்மாவும் விவாகரத்து வரைக்கும் போய், பிறகு கமலின் 'வளையோசை கலகலவென...' பாடலை பாடி மீண்டும் சேர்வது வித்தியாசம்.



இவர்களுடன் வரும் வகுப்புத் தோழர்கள் நகைச்சுவையுடன் படத்தை நகர்த்த உதவி செய்கின்றனர். காதல் என்ற பிறகு அபத்தங்கள் இல்லாது போனால் எப்படி? அசடு வழிய அடி வாங்கும் காதல் திலகங்கள் பாத்திரங்களாக வரும் இவர்களால் மனம் விட்டுச் சிரிக்க இடை விடாத வாய்ப்புகள் வரிசையாக வந்துகொண்டே இருக்கின்றன. கொஞ்சம் குண்டான, பேசும் விழிகளோடு வரும் சிவா, சளைக்காமல் ஒவ்வொரு பெண்ணிடமும்

படத் தொகுப்பு: டி.எஸ்.சுரேஷ், இசை: தமன், ஒளிப்பதிவு: நிரவ்ஷா மூவரது பணியும் பாராட்டுக்குரியவை. துளியும் விரசம் இல்லாமல், சில்லென்று ஒரு காதல் கதையை முதல் முயற்சியிலேயே அழகாகப் படைத்திருக்கிறார் இயக்குநர் பாலாஜி மோகன். வாழ்த்துகள் பாலாஜிமோகன்!

காதலில் சொதப்புவது எப்படி? - காதலில் சொதப்பாமல் இருக்கவும் பார்க்கலாம்!



# இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## நண்பனின் நீதி

தமிழ் படங்களிலிருந்து நாங்கள் நல்ல கருத்துக்களை பெறலாமா? இதற்குப் பதிலை, இந்த பொங்கலுக்கு வெளிவந்த 'நண்பன்' படத்தில் பார்ப்போம். நீங்கள் இப்படத்தை பார்த்திருப்பீர்கள். இதில், இரு நண்பர்கள் மற்ற நண்பரை தேடுகிறார்கள். போகிற வழியில், தங்களது பல்கலைக்கழக வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்கள்.

இந்த Pressure ஐ பற்றி படத்தில் பாரியின் நண்பர்கள் மூலம் விளக்குகிறார்கள். பாரியின் நண்பன் செந்தில் அவசியத்திற்கு பல்கலைகழகத்திற்கு செல்கிறான். அவர்களது மற்ற நண்பன் வெங்கட், தன்னுடைய ஆசையை பின் தொடராமல் பெற்றோரின் அழுத்தத்தால் Engineer ஆக படிக்க வந்தான். பாரி இருவருக்கும் வகுப்பில் ஏன் அவர்கள் கடைசியாக



அவர்கள் விருப்பம் இல்லாமலும், கஷ்டப்பட்டும் தான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்கள். ஆனால் 'பாரி' என்று அழைக்கப்படும் அவர்களின் நண்பன், தன்னுடைய அறிவை வளர்க்க ஆசையாக பல்கலைக்கழகம் வருகிறான். பாரி அவனது நண்பர்களுக்கு எப்படி பல்கலைக்கழக படிப்பை சந்தோசமாக தொடர்வது என்று காட்டுகிறான். அவனின் கருத்து ஒன்று, படிப்பதை விளங்கித்தான் படிக்க வேண்டும், ஒன்றும் விளங்காமல் மனனம் செய்தால் ஒரு பயனும் இல்லை. இதை மேல்நாட்டிலிருந்து வந்து, 'தமிங்கலம்' மூலம் தமிழ் விளங்காமல் தமிழ் படிக்கும் ஒரு சக மாணவரின் பேச்சு மூலம் விளங்கப்படுத்துகிறான். அந்தக் காட்சி மிகவும் சிரிக்க, சிந்திக்க கூடியதாக இருந்தது.

பாரி 'Virus' என்னும் பல்கலைக்கழக பேராசிரியருடன் படிப்பிக்கும் முறையைப் பற்றி மோதல் செய்தார். மேற்கூறிய மனனம் செய்யும் முறையும், பள்ளியை 'Pressure Cooker' மாதிரி ஆக்குவதும் பாரிக்கு விருப்பம் இல்லை. உண்மையில் பாரி கூறியது சரிதான். ஏனெனில் இந்தியாவில் இவ்வாறு Pressure கூடி, ஒவ்வொரு நாளும் 129 மாணவர்கள் தற்கொலை முயற்சி செய்கிறனர் என இணையத்தள செய்தி ஒன்றில் வாசித்தேன்.

வருகிறார்கள் என உணர்த்துகிறான். செந்திலுக்கு அதிகமான பயம் உண்டு. வெங்கட் விருப்பம் இல்லாமல் படிக்கிறான்.

பின்னர் வெங்கட் பெற்றோருடன் கலந்து பேசி விரும்பிய வேலையை விருப்பத்துடன் செய்கிறான். செந்தில் பயம் நீங்கி வேலையில் தைரியத்தோடு சேர்ந்தான். பாரியின் முக்கியமான கருத்து 'எல்லாமே நன்மைக்காகவே நடக்கிறது' எனக்கூறும் 'All is well' என்பதே.

பாரி ஒரு ஏழை வேலைக்காரனின் மகன். ஆனால் கடைசியில் உலகம் போற்றும் விஞ்ஞானி ஆனான். எப்படி?

"All is well' என்று கூறியதோடு மட்டுமில்லாமல், அவ்வாறே அவன் நம்பினான். அவன் All is well என்று கூறி, மனத்தை தைரியமாக்கி Positive ஆக நினைத்து, உயர்ந்த நிலைக்கு வந்தான். எமது மனம் சில வேலைகளில் பயந்தாலும் All is well போன்ற Positive ஆன சொற்களை கூறி தைரியப்படுத்தலாம்.

மனதில் விரும்பியதைத்தான் நாம் செய்ய வேண்டும் அல்லது நாம் செய்வதை விருப்பதுடன் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், எல்லாம் சோகமாகவும், கஷ்டமாகவும் இருக்கும்.

உங்களது மனத்தை பின்பற்றினால் எல்லாம் வெற்றி தான். அந்த வெற்றியை அடைவதற்க்கு Positive ஆக இருங்கள். என்ன நிலையிலும், Positive ஆக இருந்தால் எல்லாம் Positive ஆகவே நடக்கும்.

**நீதி: எல்லாம் நன்மைக்காகவே நடக்கிறது.**



**ஞா. ஆரணி**
**அகவை 13**


**TUTION**

தமிழ் மூலம் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது.
ஆங்கிலம் சரளமாகவும் விரைவாகவும் கற்கச் சிறந்த இடம்.
**இந்திரா மூலிகை பானம்**
இந்திரா மூலிகை பானம் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்த பானம். குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
தொடர்புகளுக்கு: **416.269.5942**



**AYURVEDA**
**MASSAGE GOOD FOR HEALTH & PAINS**
Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.
**Women For Women, Men For Men - 416.434.9251**

**EATON ACADEMY**
An Ontario Private School Registered with the Ministry of Education.
*ALL HIGH SCHOOL CREDIT COURSES OFFERED*
Courses Start in December, February, July and August
For Registration and Further Details Call
**Contact: 416.669.3101**
*80 Nashdene Road, Building D, Unit 220 (MARKHAM & NASHDENE)*



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com**


மேலும் பக்கங்கள் 24, 25

# ஆடவனைப் பார்த்தமாத்திரத்தே மனதைப் பறிகொடுத்த காரிகை

## சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்

- த. சிவபாலு -

தலைமகனைப் பார்த்தமாத்திரத்தே காதல் கொண்டனள் தலைமகள், தோழிக்கோ பெரும் இக்கட்டானநிலை, அவனைப் பார்த்தமாத்திரத்தே அவனிடத்துத் தனது உள்ளத்தைப் பறிகொடுத்தவள் தனது தோழி என்பதனை அறிந்துகொண்டவள் அதற்கு மாற்றுவழி காணவேண்டிய கடப்பாடுடையவள். இந்தக் காதல் படுத்தும்பாட்டைப் பெற்றோருக்குத் தெரியவைப்பதன் மூலமே தனது தோழியின் கவலைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பது அவளது நம்பிக்கை. நேராகவே தோழியின் தாயிடம் சென்று உண்மையை உரைத்து ஒருவழி காணவிளை கின்றாள். தாயிடம் நயமாக அன்னையே நீ வாழ்வாயாக! ஏன் வாழ்த்திப் பீடிகைபோடுகின்றாள். நின்மகள் பாலைத்தானும் உண்கின்றாளில்லை, ஏதோ துன்பத்தில் இருக்கின்றாள், மெலிந்துபோகின்றாள், உடல் வெளிறிப்போய்விட்டது என்று என்னிடம் கேட்கின்றாய். நான் என்ன சொல்லுவேன். கண்டனள் தலைவனைக் கண்டதும் காதல் கொண்டனள் என்பதனை இப்பாடலிலே சிலவரிகளிலே மிக அழகாகக் குறிப்பிடுகின்றார் சங்கப்புலவர் தங்கால் முடக்கொள்ளனார். அன்னையே கேட்பாயாக என உரைப்பதாக அமைகின்றது அவரது வரிகள். அவளது உள்ளத்தை ஒருவன் திருடிச்சென்று விட்டான் அதுதான் காரணமாக இருக்கவேண்டும் அதனைப்பற்றி நானும் தெளிவாக அறிந்திலேன். முன்பொருநாள் அழகிய பூக்கள் பூத்துக்குலுங்கும் மலைச்சாரலிலே நானும் அவளும் எங்கள் தோழியருடன் அழகாகப் பூத்திருந்த கொன்றை மரத்தில் மலர்களைப் பறிக்கச் சென்றிருந்தோம். அந்தவேளை புலி, புலி என ஒரு சத்தம் கேட்டது. சத்தம் வந்ததிசையை நாங்கள் பார்த்தோம். அங்கே கண்களை மட்டுமல்ல உள்ளத்தைக் கவரத்தக்க காந்தருவனோ என்று சொல்லக்கூடிய ஆணழகன். பெண்கள் தங்கள் மார்பகங்களைப் பதித்து இன்பம் கொள்ளக்கூடிய அகன்ற மார்புகளில் சந்தனந்தடவி செழுங்கமல மலர்களை கோர்த்து மாலையாக அணிந்து, தலையிலே வெட்சிப்பூவினால் ஆன தலைப்பாகையை அணிந்தவனாகவும் வில்லினை தோழிலே அணிந்தவனாகவும் ஒரு அம்பினை கையிலே ஏந்திய வண்ணமும் வந்தஅவன், எம்மிடம் அந்தப்புலி சென்ற இடம் யாதோ? என்று எங்களிடம் வினவியும் நின்றான்.

அவனைக் கண்டதும் வெட்கத்தினால் அவனை நேருக்குநேர் ஏறெடுத்துப்பார்க்கக் கூட திராணியற்றவர்களாக நாம் ஒருவரின் மீது ஒருவர் முகம்பொதித்து மறைந்து பார்த்திருந்தோம். அவனோ 'கருத்துடன் பேணிய



ஐவகையான வகுத்த கூந்தலினையும், அழகிய நெற்றியினையும், கரிய நெய்த்த கூந்தலையும் உடைய மடந்தையர்களே! உங்களிடத்தே பொய்யும் உளவாமோ? என்றனன். மலைநாட்டிற்கு உரியவனாகிய அவன் குதிரைகளின் வேகத்தை அடக்கி மெல்லெனச் செலுத்தும் பாங்கிலே உனது மகளின் கண்களை எதிர்மறுத்துப் பன்முறை நோக்கியவாறே அவ்விடம் விட்டு சென்றனன். 'அவளும்நோக்க அண்ணலும் நோக்கினான்' கம்பனின் அடிகளை நினைவுறுத்துவதாக அமைந்தன அவனது பார்வை. பார்த்த மாத்திரத்தே உனது மகள் அவனிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டாள் தாயே!

பகற்பொழுது மறைந்து அந்தி மாலைப்பொழுதாகிய அவ்வேளையிலே அவன் சென்று மறையும் அந்தத்திசையே நினது மகள் பார்த்தவண்ணமாக நின்றிருந்தாள். என்னிடம் தோழியே இவன் சிறந்த ஆண்மகனே! என்றாள். எனவே அவளது நிலையை நீ நன்கு ஊகித்து அறிந்து கொள்வாயாக, காதல் வயப்பட்டவரின் நிலை நீயறியாததோ என மிக நயமாக தாய்க்கு அவள் உணர்த்தி நிற்பதனை இந்தச் செய்யுள் படம் பிடித்துக்காட்டுகின்றது.

அன்னாய்! வாழி! வேண்டு அன்னை! நின்மகள்
பாலும் உண்ணாள், பழங்கண் கொண்டு,
நனிபசந் தனள் என வினவுதி, அதன்திறம்
யானும் தெற்றென உணரேன், மேல்நாள்,
மலிபூஞ் சாரல், என்தொழி மாரோடு

ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி,
'புலிபுலி!' என்னும் பூசல் தோன்ற-
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆய்இதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்,
பக்பம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்,
கயம்மண்டு ஆகம் செஞ்சாந்து நீவி,
வரிபுனை வில்லன், ஒருகணை தெரிந்துகொண்டு,
'யாதோ, மற்றுஅம் மாதிறம் படர்?' என்
வினவிநற் றந்தோனே, அவற் கண்டு,
எம்முள் எம்முள் மெய்ம்மறைபு ஒடுங்கி
தூயி நின்றென மாகப், பேணி,
'கைவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மைஈர் ஓதி மடவீர்! நும் வாய்ப்
பொய்யும் உளவோ? என்றனன் பையெனப்
பரிமுடுகு தவர்த்த தொன், எதிர்மறுத்து,

நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்ற அக் குன்றுகிழ வோனே!
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன்மறை தேஎம்நோக்கி, மற்றுஇவன்
மகனே, தோழிட!' என்றனள்,
அதன் அளவு உண்டுகோள், மதிவல் லோர்க்கே.

(அகநானூறு பாடியவர் தங்கால் முடக்கொற்றனார்)

# இன்னொரு...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

புரிந்து கொண்டார்கள், செழியனும் கார்த்திக்கும்.

'அடுத்த அறையில் இருந்து கொண்டு எங்களை நோட்டம் விடும் உங்களின் நண்பர்களுக்காக இதனையும் சொல்லுகிறேன். இந்த பிரபஞ்ச விபத்து நடக்கும் அவ்விடத்தில் சில கணங்களுக்குள் நடப்பது போல இருப்பினும், பிரபஞ்சங்களின் காலம் மிகப் பெரியதாக இருக்கும். அதுதான் பௌதீகத்தின் வியப்பான விடயம். ஒளியின் வேகத்தில் பயணப்படுகையில் நேரக் குறுக்கம் ஏற்படுகின்றதல்லவா, மிக மிக வலிமையான ஈர்ப்புப்புலத்தில் நேரம் குறுக்கமடைகின்றதல்லவா! அதைப்போலத் தான் நேரக் குறுக்க விளைவானது பிரபஞ்ச விபத்தின் போதும் ஏற்படுகின்றது. பெருமளவு சக்தி மாற்றம் சடுதியில் நடப்பதால் இந்த நேரக் குறுக்கம் ஏற்படுகின்றது என் நினைக்கின்றேன். நான் நினைக்கின்றேன், எங்களது பிரபஞ்ச விபத்தின் போது நாங்கள் பதினைந்து பூமியின் வருடங்களைத் தொலைத்து விட்டோம். புதிய பிரபஞ்சத்துள் கிட்டத் தட்ட 20 வருடங்கள் வாழ்ந்த நாங்கள் மீண்டும் இங்கு வருவதில் அடுத்த பதினைந்து வருடங்களை இழந்து விட, எங்களது தோற்றம் இளமையாக இருக்கின்றது. அவ்வளவுதான்!' 'உங்களது பிரச்சனைகளுக் கெல்லாம் தீர்வுகள் கிடைத்து விட்டனவா? இல்லை என்று தெரிகின்றது. புதியதாக, உங்களால் நம்பிக்கொள்ளவே முடியாத வகையிலான கேள்விகள் உங்களுக்குள் முளைத்துள்ளன, அப்பிடித்தானே! நீங்களே கேளுங்கள். அவற்றிக்கும் பதில் சொல்லுகிறோம்' என்றான் இன்பன்.

அப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள், தங்களினுள் எழுந்த கேள்விகளுக் கெல்லாம் பதில்கள் உடனேயே அவர்களால் கொடுக்கப்பட்டிருந்தது என்பதனை. தான் என்ன கேட்கப் போகிறேன் என்பது அவர்களுக்குத் தெரியும் என்ற போதிலும் எப்படியானது?' செழியன் கேட்டான் 'உங்களது பிரபஞ்சம்

(இன்னமும் வரும்)

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் - கனடா

'ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்சரின் பிறந்ததின விழாக் கொண்டாட்டம்'

பகவான் ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்சரின் பிறந்ததின விழா கொண்டாட்டம் வருகின்ற பங்குனி மாசம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ***(Saturday March 17, 2010 at 10.00 A.M.), at Vedanta Society of Toronto (Jane & Eglinton) 120 Emmet Avenue, Toronto*** அமைந்துள்ள ஸ்ரீ இராமக்கிருஷ்ண சபை மண்டபத்தில் இடம்பெறும்.

சுவாமி கிருபமயானந்தாஜி மகராஜ் அவர்களின் ஆன்மீக உரையுடன் வைத்திய கலாநிதி. லம்போதரன் மற்றும் கலாநிதி சுஜீவ் ஜெகநாதன் அவர்களின் சிறப்புரைகளும் இடம்பெறும். பஜனை, சிறுவர் நிகழ்ச்சிகள், நடனம், நாடகம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன. அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 416.609.1484 / 905.472.2891
905.821.7336 / 416.293.7427

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3
பகுதி 36

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

'நான் முன்னரே சொன்ன பல சமாந்தரப் பிரபஞ்சங்கள் பற்றி நினைத்துப் பாருங்கள். அவை வெவ்வேறு சக்திமட்டங்களால் ஆனவை. ஆனாலும் எங்கும் நிரம்பியுள்ளன. வெவ்வேறு சக்திமட்ட இயல்பினால் அவை ஒன்றுடன் ஒன்று கலப்பதில்லை. ஆனால் சில சமயங்களில், சில இடங்களில் மட்டும் இரண்டு பிரபஞ்சங்களின் சக்தி மட்டங்கள் ஒன்றாக வந்துவிடுகின்றன. அதுவும் சில கணங்களுக்கு மாத்திரமே அவையிரண்டு ஒரே சக்தி மட்டத்தில் இருக்கும். அந்த சில கணங்களில்தான் பிரபஞ்ச விபத்து நடக்கின்றது.' இன்பன் கூறினான்.

**◊ சி.வி. நாதன் ◊**

பிரபஞ்ச விபத்திற்கான விளக்கத்தை இன்பன் கூற நாகராசனைத் தவிர்த்து அனைவருமே ஆச்சரியத்தின் உச்சத்திற்குப் போனார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் விஞ்ஞானிகளாக இல்லாத இருவர் பிரபஞ்ச விபத்தினைப் பற்றிக் கூறுவது ஆச்சரியமாகவே இருந்தது.

இன்பன் இன்னமும் சொல்லிக் கொண்டே போனான். 'இந்தப் பிரபஞ்ச விபத்து நடக்கும் போது, இரண்டு பிரபஞ்சங்களின் சக்தி மட்டங்கள் அக்குறிப்பிட்ட இடங்களில், அக்குறிப்பிட்ட சில கணங்களில் ஒன்றாக இருப்பதால், அவற்றினிடையே ஒரே மாதிரியான தன்மைகள் ஏற்படுகின்றது. அதனால் இரண்டு பிரபஞ்சங்களிடையேயும் சில சமயங்களில் பரிமாற்றங்கள் நிகழ்ந்து விடுகின்றது. அதாவது ஒரு பிரபஞ்சத்தின் உடமைகள், இன்னொரு பிரபஞ்சத்தினுள் சடுதியில் சென்றுவிடுகின்றன.' சிறிது நேரம் இடைநிறுத்திய இன்பன், தொடர்ந்தான்.

'அடுத்ததுதான் பிரச்சினையான விடயம். ஒருவேளை, பொதுவாகவே பழைய நிலைக்கு வந்து விட்ட பிரபஞ்சத்தினுள், புதியதாக வந்த மற்றப் பிரபஞ்சத்தின் உடமைகளுக்கு இப்போது புதிய பரிமாணவெளி. அதனால் அவை அப்பிரபஞ்சத்துள் தொலைந்து போய்விடுகின்றன. ஒருவேளை அங்கு சென்ற உடமைகள், உயிரினங்களாக இருந்தால், புதிய பரிமாணவெளியில் அவர்கள் அல்லது அவைகள் சென்ற இடத்தில் ஒட்சிசன் இல்லாது போயின் அவை இறப்பதுடன், அங்கே காணாமலும் போய்விடுகின்றன. ஒட்சிசன் போதிய அளவில் இருப்பின் சுவாசிப்பால் ஆன உயிர் இருப்பினும் பரிமாண வெளியில் தொலைந்துதான் போக வேண்டும். இதுதான் பிரபஞ்ச விபத்தின் விளைவு' என்றவன் மீண்டும் அவர்கள் தான் கூறியவற்றைக் கிரகித்துக் கொள்ளட்டும் என்பதற்காக நிறுத்திப் பின்னர் தொடர்ந்தான். 'ஆனால் சில பிரபஞ்சங்களின் வெளிகள் ஒரே மாதிரியான சிறிய விலகலுடனான பரிமாணவெளிகளைக் கொண்டிருக்கக் கூடியன. அப்படியான ஒரு புதிய பிரபஞ்சத்தினுள் சென்றிருந்தால், அவர்கள் சென்ற இடத்தில் பழைய பிரபஞ்சத்தின் சூழலும் இருந்தால் அவர்கள் புதிய பிரபஞ்சத்துள் தொலைந்து போகாமல், புதிய சூழலில் உயிர் வாழலாம். புதிய பிரபஞ்சத்தினுள்ளும் உயிர் வாழலாம். அப்படியான ஒரு பிரபஞ்ச விபத்தில்தான் நானும் நாகராசண்ணணும் அகப்பட்டு எங்களது பிரபஞ்சத்தில் இருந்து தொலைந்து போனோம்' 'இன்னமும் சில விபரங்களைச் சொல்ல வேணும்' இன்பன் நிறுத்தியதும் நாகராசன் தொடர்ந்தான்.

'பொதுவாகவே பிரபஞ்சங்களின் சக்தி மட்டங்கள் ஏன் ஒன்றாகின்றன என்பதற்கு தெளிவான விளக்கம் கூறமுடியாது. ஆனாலும் சக்தி மட்டம் ஒன்றாக வருகையில் பெருமளவு சக்தி வெளிவிடப்படுகின்றது. வெளிவிடப்படும் சக்தியானது அப்பிரபஞ்சத்தின் என்ன வடிவிலான சக்தியாகவும் வெளிவரலாம். எமது பிரபஞ்சத்தில் வெப்பம், வெளிச்சம், பெரும் காற்று, இடிமுழக்கம் போன்ற சத்தம் போன்ற சக்தியின் ஒரு வெளிப்பாட்டில் அந்த வெளிவிடப்படும் சக்தி வெளிவரும். நாங்கள் தொலைந்த போது ஆச்சிவீடு எரிந்தது என்பது அறிந்து கொண்டோம். அது இந்தச் சக்தி வெளிப்பாடு என்றுதான் நாங்கள் தெரிந்து கொண்டோம்' மற்ற அறையில் இருந்து கொண்டு மொழிபெயர்த்துக் கொண்டிருந்த மணியனின் மனதில் எப்படி இந்த வயது வித்தியாசம்? என்ற கேள்வி எழ, சிரித்துக் கொண்டே திரும்பிப் பார்த்தான், நாகராசன். செழியனும் கார்த்திக்கும் கூடத் திருப்பிப் பார்த்தார்கள். வெறும் சுவர் மாத்திரமே அவர்களுக்குத் தெரிந்தது. ஆனாலும் இவர்கள் ஏன்'? அந்தப் பக்கத்தில் அறையிற்கு அப்பால் ஆட்கள் இருக்கின்றார்கள் என்பது முன்னரே இவர்களுக்குத்தான் தெரியும் போல் தெரிகின்றது. சுவரையும் ஊடுருவிக் கொண்டு பார்க்கக் கூடியவர்களோ!

இவர்கள் இருவருக்கும் எங்களைவிடவும் ஏதோ வல்லமை இருக்கின்றது என்பதைப்

தொடர்ச்சி 28ஆம் பக்கம்


Train to be a ...
**Community Service Worker** With CO-OP



Other Diploma Programs:

**Computerized Accounting**

THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE

**Network Engineering**

Microsoft | IT Academy Program

**Business Administration**

**Medical Office Assistant**

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER
ontario association of career colleges

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

citi COLLEGE
www.CitiCollege.ca

Financial Assistance may be available to those who qualify

# இளம் மேதாவிகள் - வீடுகளில் அறிந்து கொள்ளப்படாதவர்கள்!

இருபது முப்பது மாணவர்களை வாங்குகளில் வரிசையாக இருத்திவைத்து அவர்களுக்கு முன்னால் நின்று பிரசங்க பாணியில் அல்லது உரத்த குரலில் சத்தமிட்டுக் கொண்டிருக்கும் ஆசிரிய உலகினை மேற்கு நாடுகளில் காண முடியாது. கற்பித்தல் முறை முற்றிலும் மாறியிருக்கின்றது. ஆசிரியருக்கு பெரிய மூளை, மாணவருக்கு சிறியமூளை அல்லது மூளையே இல்லை என்ற நிலையும் இன்றில்லை. மாணவர்கள் ஆசிரியர்களை கேள்விகளால் துளைத்தெடுப்பது மட்டுமல்ல சிறிய வயதில் பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானிகளாக வெளியேறும் நிலை இன்றுள்ளது. வயதிற்கு கூடிய மூளை அல்லது மேதாவித்தனம் என்பது எப்படி வருகின்றது? என்பதில் கூட ஆராய்ச்சியாளர்கள் குழம்பிப்போயுள்ளனர். எங்கள் வீடுகளில் எத்தனையோ மேதாவிகள் அல்லது நுண்மதியாளர்கள் இருப்பார்களோ தெரியாது. ஆனால் அதனைப்பற்றி கவலைப்படாத பெற்றோர்களும் பலருளர்.

பொதுவாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எப்படி வருவார்கள்? என்பதனை சோதிடரிடம் மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்வர். அவரும் ஏதோ தன் வருமானத்திற்காக டாக்டராகவோ அல்லது எஞ்சினியராவோ வருவார் என்று சொல்லிவிடுவார். தெரிந்தது இந்த இரண்டு வேலைகள் தானோ தெரியவில்லை!. இன்று எத்தனையாயிரம் வேலை!, எத்தனை துறைக்கல்வி!. சிந்திக்கவே முடியாத கல்வி உலகம். எனவே தான் எமது பிள்ளைகளின் திறமைகளை, புத்திசாலித்தனத்தை பெற்றோர்கள் கண்டு கொள்ளவேண்டும். இதற்காக பெற்றோர்கள் நுண்மதி (Intelligence), நுண்மதி ஈவு (IQ), மீத்திறன் (Giftedness) போன்றவற்றினைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும்.

சாதாரணமாக வீடுகளில் அவன் கணக்கில் புலி, படிப்பில் கெட்டிக்காரன் மகாவிண்ணன் என்றெல்லாம் சொல்லக் கேள்விப்பட்டிருக் கின்றோம். இது எல்லோருக்கும் பொருந்துமா? என்பது கேள்வி. உண்மையான புத்திசாலி யார்? இதனை அளக்க முடியுமா? இவர்களையும் புத்தி குறைந்தவர்களையும் ஒரே வகுப்பில் வைத்திருக்கலாமா என்பதெல்லாம் பிரச்சினை. இதற்கு பல ஆய்வுகள் உதவுகின்றன. அற்புதமான அறிவுச் செல்வங்கள் எங்கள் வீடுகளில் இருப்பார்கள். அவர்களை அறிய முயற்சி செய்யுங்கள்.

இன்றுள்ள பல உளவியலாளர் நுண்மதி பற்றி சில தகவல்களை வெளியிட்டுள்ளனர்?. அத்துடன் பல்துறை சார் நுண்மதியினையும் ஆய்கின்றனர். இது சோதிடம் போன்று யூகங்கள் அல்ல. சரியான தகவல்கள் அல்லது அளவீடுகளாகும். அமெரிக்க நியூயோர்க் நகரத்தில் 1980 இல் இதற்காக 90 குழந்தைகளை தெரிந்து முதல் 7வது மாதம், பின்பு ஒரு வருடத்தில், பின்பு 10வது வருடத்தில் என தொடர் ஆய்வு செய்தனர். முடிவுகள் தொடர்ந்து நுண்மதியாளர் பற்றிய தகவல்கள் உண்மையென



நிரூபிக்கப்பட்டன. இதற்காக பல சொற்கள், இலக்கங்கள், பிரச்சினை விடுவிப்பு, எண்ணக்கருக்கள் கொண்ட வினாக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டன. இந்த அடிப்படையில் Sir Francis Galton (1822-1911) என்பவர் நுண்மதிப்பரீட்சையை வைத்தார். இதனை தொடர்ந்து Alfred Binet என்பவர் (1857-1911) இதனை சற்றுவிரிவாக ஆய்வு உளவயது (Mental Age) என்பதினை கால வயது (Chronological Age) கொண்டு கணித்தார். அதாவது 5வயது பிள்ளை 6வயது பிள்ளையின் பரீட்சையில் அதிகபுள்ளி பெற்றால் அப்பிள்ளையின் உளவயது 6 என கணிக்கப்படும். அதாவது வயதுக்கு மீறிய புத்திசாலி இதே போன்று 5வயதுப்பிள்ளையின் பரீட்சையில் 10 வயதுப் பிள்ளை சித்திபெற்றால் உளவயது 5 என்பதாகும். அதாவது வயதிற்கு மிகவும் குறைந்த அறிவுள்ளவர் இதனை ஜேர்மன் உளவியலாளர் வீதமாக மாற்றி நுண்மதி ஈவு கண்டு பிடிக்க ஒரு வாய்ப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளனர். MA/CA x 100 =IQ என்பதே அதுவாகும். அதாவது நூற்றுக்கு மேல் படிப்படியாக புத்திசாலித்தனம் அதிகரிக்க அவர் நுண்மதியாளராகின்றார். இதனையே மீத்திறன் எனலாம். இப்படியானவர்கள் சிலரே காணப்படுவர். அமெரிக்காவில் Lewis Terman என்பவர் இதனை பாவித்தார். பின்பு பல ஆய்வுகள் செய்யப்பட்டு இதில் நம்பகத்தன்மை உண்மைத்தன்மை உள்ளனவா என கண்டறிந்தனர்.

சிறந்த நுண்புத்தியுள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதினை நாம் கண்டுகொள்ள வேண்டும். இவர்கள் சிறந்த படைபாற்றல் (Creativity) உள்ளவர்கள், புதிதாக எதனையும் உருவாக்குவார்கள். சிறந்த கற்பனைவளம் நிறைந்தவர்கள், எதற்கும் காரணம் காண்பவர்கள், நன்றாக வாசிப்பவர்கள், நிறைந்த ஞாபகசத்தி யுள்ளவர்கள், சுதந்திரமாக செயற்படுபவர் கள். இதில் முழுவதும் எல்லாரிடமும் இல்லை என்றாலும், சிலது சிலரிடம் உள்ளதாகும். இவற்றினை மிகவும் நுணுக்கமாக பெற்றோர்கள் அவதானித்து ஆசிரியர்களிடமும் கூற வாய்ப்புண்டு. 140 க்கு மேல் நுண்மதி ஈவு செல்லும் போது மிகுந்த நுண்மதி ஒருவரிடம் காணப்படலாம். இன்றுள்ள சூழ்நிலையில் எப்படியானவர் களிடம் இம்மீத்திறன் ஏற்படுகின்றது என்பது பற்றியும் ஆராயப்படுகின்றது. முதலில் பரம்பரை (Heredity) என்பது ஒருவரின் நுண்மதியை தீர்மானிக்குமா? என்பது பற்றி அறியப்பட்டது. இதற்காக பெற்றோரின் உயிரணுக்களைப் பரிசோதனையிடல், பரம்பரை அலகுபற்றிய அறிக்கை தயாரிப்பு, இரட்டைப்பிள்ளைகள் பற்றிய ஆய்வு, சகோதரங்கள் பற்றிய ஆய்வு, குடும்ப எண்ணிக்கை பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு நிகழ்ந்தது. இதற்காக பல பல்கலைக்கழகங்கள் பெருமளவில் பணம் செலவு செய்துள்ளன. Robert Plomin என்ற ஆய்வாளர் 600 பிள்ளைகளின் இரத்தப்பரிசோதனை செய்து நுண்மதியாளர் 100 பேரில் இந்த பரம்பரை தன்மை பற்றி முடிவு கண்டுள்ளார். இதனை Allele (Any of a group of possible mutational form of gene) என்பர். எனவே பரம்பரை அலகு ஒருவரது திறனில் முக்கியம் பெறுவது அடிப்படையில் உண்மையாகும்.

நுண்மதியில் தற்போதுள்ள ஆய்வாளர்கள் இதற்கு மாறாக சூழல் (Envioronment) தான் முக்கியம் பெறுவதாக வலியுறுத்துகின்றனர். இதற்காக பல நாடுகளில் ஆய்வு, பல குடும்பங்களில் ஆய்வு, பல குழுக்களில் ஆய்வு நடை பெற்றன. இதிலும் பல முடிவுகள் வந்துள்ளன. சூழல் மாற்றத்தினால் பிள்ளையின் நுண்ணறிவில் 20-25 வீதம் மாற்றமுறும் என்பதே அதுவாகும்.

வேறு சில அறிஞர்கள் குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களை கொண்டு நுண்ணறிவை ஆய்ந்தனர். அங்கத்தவர் தொகை கூடுதலாக நுண்ணறிவு குறைகின்றதென்பது இவர்கள் கருத்து. இதேபோன்று பல கலாச்சாரங்களுக்கிடையில் நுண்ணறிவு வேறுபாடு அடைவதாகவும் ஆய்வு செய்தனர். இரு இனங்களுக்கிடையிலும் நுண்ணறிவு வேறுபாடு உள்ளதென்றனர். வெள்ளையர்கள் கறுப்பர்களைவிட 15 புள்ளிகள் அதிகம் பெறுவது கண்டறியப்பட்டது. ஜப்பானியர் வெள்ளையர் களை விட 6 புள்ளிகள் அதிகம் பெறுவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இன்று நுண்ணறிவு பற்றி திடமான கொள்கை குழம்பிப்போயுள்ளது. பொதுவாக 1000 உளவியலாளர்கள் உயிரணுவும் சூழலும் பெரும்பங்கு வகிப்பதனை ஒப்புக்கொண்டுள்ளனர்.

எமது பிள்ளைகள் வளர்க்கப்படும் சூழ்நிலை காரணமாக இவர்களது திறன் குறைந்து போய்விடலாம். தற்போது அனுபவம் (Experience) என்பது நுண்மதியில் முக்கியம் பெற்றுவருகின்றது. இதனை பெற்றோர்கள் வழங்க முன்வரவேண்டும். உங்கள் குழந்தைகளிடம் உள்ள திறன்களை கண்டறியப்பட வேண்டும். இந்நாட்டில் இப்படியான பிள்ளைகளுக்கு விசேட கல்வித்திட்டம், பாடசாலைகள் உள்ளன. இலங்கை போன்று ஒவ்வொரு வகுப்பாக செல்லும் நிலை இங்கில்லை.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 30

மேதாவியான றதபோட் தமது அணுபற்றிய கண்டுபிடிப்புடன் நின்றுவிடவில்லை. அணுவின் மத்தியில் உள்ள நேர் மின் தன்மையதான அணுக்கரு எப்படியானது என்பதை அறிவதில் ஆர்வமாக இருந்தார். அணுக்கருவினைச் சுற்றிவரும் மிகமிகச் சிறிய துகள்களான இலத்திரன்களில் அதிக நாட்டம் கொள்ளவில்லை. வேறு ஆய்வாளர்கள் அணுக்கருவினைச் சுற்றிவரும் இலத்திரன்கள் பற்றிய ஆய்வுகளைத் தொடர, றதபோட் தமது கவனம் முழுவதையும் அணுக்கருவின் பக்கமாகவே வைத்திருந்தார். இக்காலத்தில், மிகவும் சிறிய அணுவாகிய ஐதரசன் அணுவின் அணுக்கரு தனிமையாக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்ததின் பயனாக அணுக்கருக்களின் புதிர் ஓரளவுக்குத் தெளிவானது. அணுக்கருக்களில் இலத்திரன் களைப் போல் 1836 மடங்கு பாரமானதும், இலத்திரன்கள் கொண்ட அளவு மின்தன்மையானதும் ஆனால் நேர் மின்தன்மை கொண்டதுமான இன்னொரு சிறிய துகள் அணுக்கருவில் இருப்பது தெளிவானது. இதனை 'முதலாவது' எனப் பொருள்படும்படியான 'புரோத்தோன்' (proton) என அழைத்தார். ஆக, இப்போது அணுவொன்றின் அணுக்கருவில் நேர் ஏற்றம் கொண்ட புரோத்தோன்கள் உள்ள, அவ்வணுக்கருவைச் சுற்றி, அணுக்கருவில் எத்தனை புரோத்தோன்கள் உள்ளனவோ அதே எண்ணிக்கையிலான எதிரேற்றம் உள்ள இலத்திரன்கள் வலம் வருகின்றன என்பது அணுவுக்கான மாதிரியாக அமைந்து விட்டது. இத்துடன் றதபோட் திருப்தியடைய முடியவில்லை. இன்னொரு சிக்கலும் வந்து விட்டது. அது அணுவின் திணிவினால் ஏற்பட்டது. தனிமம் ஒன்றின் அணுத் திணிவி னைப் பார்த்தால் இப்போது புரோத்தோன்களினதும் இலத்திரன்களினதும் திணிவுகளின் மொத்தமாக இருக்க வேண்டு மல்லவா! ஆனால் ஐதரசன் அணுவினைத் தவிர்ந்த ஏனையவற்றிற்கு இது பொருந்த வில்லை. அணுக்களில் உள்ள புரோத்தோன்களினதும் இலத்திரன்களினதும் திணிவுகளின் கூட்டுத்தொகையானது அணுவின் மொத்தத் திணிவின் பாதியாகவே காணப்பட்டது. அப்படியாயின் அணுக்கருவில் புரோத்தோன்களுடன் இன்னமும் ஏதோ ஒன்று இருக்கவேண்டும்.

தொடர்ந்த ஆய்வுகள் அணுக்கருவில் புரோத்தோன்கள் போன்ற ஆனால் மின்தன்மையில்லாத இன்னொரு வகைத் துகள்கள் இருப்பதையும் காட்டின. அவற்றிக்கு நியூத்திரன்கள் (neutron) எனப் பெயரிட்டார்கள். முடிவாக றதபோட்டின் அணுவின் மாதிரியில், அணுவொன்றின் மத்தியில் அணுக்கரு உள்ளது. இவ்வணுக்கருவில் புரோத்தோன்களும் நியூத்திரன்களும் உள்ளன. இவ்வணுக் கருவினைச் சுற்றி இலத்திரன்கள் வலம் வருகின்றன, என்பதாயிற்று. றதபோட்டுக்கு 1908ம் ஆண்டு இரசாயனத்திற்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. அணுக்கருவின் சிக்கல் தீர்க்கப்பட்ட காலத்தில் ஆய்வுகள், அணுக்கருவினைச் சுற்றி வரும் இலத்திரன்களைப் பற்றிய தெளிவுகளைத் தந்தன. அது பற்றி இனிப் பார்ப்போம். இப்போது அணுவின் அமைப்பிற்கு புதியதான வடிவம் வந்து விட்டதை அறிந்து கொண்டீர்கள். அந்தப் புதிய அமைப்பைப் பாருங்கள், அணு கோளவடிவானது அதின் பெரும் பகுதி வெறுமையாக உள்ளது. அதன் மையத்தில் மிகவும் சிறிய அணுக்கரு ஒன்று உள்ளது. இவ்வணுக்கருவில் நேரேற்றம் பெற்ற புரோத்தோன்களும், ஏற்றம் எதுவும் இல்லாத நியூத்திரன்களும் சேர்ந்துள்ளன. அணு ஒன்றின் பாரத்திற்கு இந்த அணுக்கருவே காரணமாக உள்ளது. இவ்வணுக்கருவினைச் சுற்றியுள்ள பெருவெளியில் மிகவும் பாரம் குறைந்த இலத்திரன்கள் அணுக்கருவைச் சுற்றி வருகின்றன. இது எப்பவெனில், கதிரவனைச் சுற்றி, கதிரவனின் கோள்கள் வலம் வருவது போன்றது. இதனால் அக்காலத்தில் அணுவின் அமைப்பினை நுண் கதிரவத் தொகுதி என அழைத்தனர். (இன்னமும் சிலர் அப்படி அழைப்பதை நீங்கள் கேட்கலாம்) பார்த்தீர்களா, கிட்டத்தட்ட 100 ஆண்டுகளின் முன்னராக டால்ரன் தனது மனக் கண்களில் கண்ட அணுவின் மாதிரி இன்று எப்படி மாற-விட்டது.

றதபோட்டின் நுண் கதிரவத் தொகுதி அணுவமைப்பின் சிக்கல்கள்.

றதபோட்டும் அவரது குழுவினரும் அணுவிற்கு அருமையான அமைப்பொன்றி னைக் கூறியிருந்தார்கள், அவர்களது பரிசோதனைகளின் வாயிலாக. ஆனாலும் அந்த அமைப்பில் தெளிவின்மைகள் இருப்பதை றதபோட் கண்டு கொண்டார். ஏனைய விஞ்ஞானிகளாலும் கூடக் கண்டு கொள்ள முடியாத பிரச்சனையாக இருந்தது, அவ்வமைப்பின் தெளிவின்மைகள். அணுக்களில் இலத்திரன்கள் உள்ளன என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. எந்த அணுவை எடுத்தாலும், இலத்திரன்கள் காணப்படுகின்றனதான். ஆனால் எவ்வொழுங்கில் அல்லது ஒழுங்குகளில் அவை இருக்கின்றன? எவ்விதம் அணுக் கருவைச் சுற்றி வருகின்றன? போன்ற கேள்விகள் பெரியதாய் எழுந்தன. அக்காலத்தில் இருந்த செம்மைப் பொறிமுறை கொண்டோ, ஆய்வுகளின் வழியிலாகவோ இதனை கூறமுடியவில்லை. இன்னொரு சிக்கல், மிக முக்கியமானதாகும். அணுவில் இலத்திரன்கள் உள்ளன. அவை எதிர் மின்னேற்றம் கொண்டவை. அணுவின் மத்தியில் உள்ள அணுக்கருவில் நேரேற்றம் உள்ளது. எதிரேற்றமும், நேர்ரேற்றமும் ஒன்றை ஒன்று கவரும். எனவே பாரம் குறைந்த இலத்திரன்கள் ஓடி வந்து அணுக்கருவுடன் சேர்த்து விடவேண்டும். (கிட்டத்தட்ட இலத்திரன் ஒன்று, அணுக் கருவில் இருக்கும் ஒரு புரோத்தோனை விட 2000 மடங்கு பாரம் குறைந்தது.) அப்படிச் சேர்ந்தால், அணுக்கருவிற்கு வெளியே இலத்திரன்கள் இருக்கமுடியாது. ஆனால் இருக்கின்றனவே! அதற்கு விளக்கமாக, இலத்திரன்கள் அணுவில் அணுக்கருவை சுற்றிக் கொண்டு வருகின்றன, அதனால் இங்கும் பெரும் சிக்கல்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 104

அணுவின் மத்தியில் உள்ள அணுக்கருவில் உள்ள நேரேற்றம் காரணமாக அணுவில் மின்புலம் உள்ளது. மின்புலத்தில் இலத்திரன் இயங்கும் போது, இலத்திரனில் இருந்து கதிர்வீசலான சக்தி வெளியேறும் என மாக்ஸ்வெல் காட்டியிருந்தார். அதன்படி, அணுக்கருவைச் சுற்றிவரும் இலத்திரன்கன் சக்தியை இழக்கவேண்டும். இப்படிச் சக்தியை இலத்திரன் இழக்குமாயின், தனது பாதையை விலத்தி உட்புறமாக நகர்ந்து, ஒரு சுருளி வடிவில் இயங்கி முடிவில் மத்தியில் இருக்கும், அணுக்கருவுடன் சேர்ந்து விட வேண்டும். நியூட்டனின் செம்மைப் பொறிமுறை இதனைத்தான் கூறுகின்றது. இப்படியாக, இலத்திரன் ஒன்று அணுவில் சுருளியாக இயங்கி, அணுக்கருவை வந்து சேர்வதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு எனக் கணித்துப் பார்த்தார்கள். ஒரு செக்கனை ஆயிரம் பில்லியன்களால் (1000,000,000,000) பிரித்துப் பாருங்கள், அவ்வளவு சிறிய நேரத்தில் எல்லா இலத்திரன்களுமே அணுக்கருவை வந்து சேர்ந்து விடவேண்டும். அப்படியாயின் எந்தவொரு அணுவுமே உறுதியானதாக, எங்குமே இருக்க முடியாது. ஆனால் எங்கும் காணும் பொருட்களில் எண்ணிட முடியாத அளவில் அணுக்கள் இருக்கின்றனவே? எப்படி? இதுதான் முக்கியமான சிக்கலைத் தந்த கேள்வி. செல்வாக்குப் பெற்றிருந்த, இனி ஒரு பௌதீக விதி எமக்குத் தேவையில்லை என்றிருந்த காலத்தில் செம்மைப் பொறியியலுக்குச் சவால் விடும் வண்ணமாக, இந்தச் சிக்கல் இயற்பியற் சிந்தனைவாதிகளிடையே வந்தது. இந்தச் சிக்கலைத் தீர்க்க டென்மார்க்கின் இளம் விஞ்ஞானியான நீல்ஸ் போர் (Neils Bohr) வந்தார். போர் எப்படிச் சிக்கலைத் தீர்த்தார் என்பதற்கு முன்னராக அவரைப் பற்றியும் சிறிது அடுத்த தடவையில் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# கடன், ஆறா வடு, ஈழப்போராட்டத்தில் எனது பதிவுகள், *Tea Time with Terroists* ஆகியவற்றை முன்வைத்து...

## தூறல்

**வானரன்**

கடந்த வாரங்களில் தொடர்ச்சியாக புத்தக வெளியீடுகள் நடைபெற்றன. மிகவும் சுவாரசியமாக பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன. இவ்வாரம் ஐ.நா மனித உரிமைக் குழுமத்தில் இலங்கை பற்றி எடுக்கப்படும் தீர்மானத்தை அனைவரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றனர். எதேச்சையாகவே அல்லது திட்டமிட்டு என்று நினைக்கும் வகையில் நூல் வெளியீடுகள் அல்லது அறிமுகங்களும் இலங்கையைப் பற்றியதாகவே இருந்தது.

இக்காலத்தில் ஒரு இஸ்ரேலிய திரைப்படத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படம் இலங்கையைப் பற்றியது அல்ல. ஆனால் இலங்கையை நினைவு படுத்திய படம். The Debt அதாவது கடன் என்ற தலைப்பைக் கொண்டது இப்படம். இரண்டாம் உலகப் போரில் யூதரை படு கொலை செய்தவர்களை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது அல்லது கொலை செய்வது என்பதை இஸ்ரேலிய உளவுப் படையான மொசாட் தொடர்ச்சியாக செய்து வருகின்றது. மியுனிச் ஒலிம்பிக்கின் போது (1972) 11 இஸ்ரேலிய வீரர்கள் பாலஸ்தீனியரால் கடத்தப்பட்டு படு கொலை செய்யப்பட்டனர். இஸ்ரேலிய வீரர்களை கொன்றவர்களை முன்னால் இஸ்ரேலிய பிரதமர் கோல்டா மெயரின் நேரடிக் கண்காணிப்பில் அமைக்கப்பட்ட குழு கொலை செய்தது. இதனை மையமாக வைத்து ஸ்ரீபன் ஸ்பில்பேர்க் மியுனிச் என்ற பெயரிலேயே படமாக்கியிருந்தார். பல வருடங்களுக்கு முன்னர் விளம்பரத்தில் இப்படம் பற்றிய விமர்சனம் வெளி வந்திருந்தது. அவ்வாறான ஒரு முயற்சியே 'கடன்' படத்திலும் இடம் பெறுகின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது நாசி கொமாண்டர் Dieter Vogel அல்லது The Surgeon of Birkenau என அன்புடன் அழைக்கப்படுவர் மருத்துவ பரீட்சார்த்த முயற்சிகள் மூலம் பல்லாயிரக்கணக்கான யூதர்களை கொலைசெய்துள்ளார். மூன்று இஸ்ரேலிய மொசாட் அங்கத்தவர்கள் ரேச்சல், டேவிட், ஸ்ரீபன். இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளை நாசிக் கொமாண்டரை கொலை செய்ய வேண்டும். இவர் இப்பொழுது ஒரு பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ இயல் நிபுணர் (obstetrics and gynaecology). ரேச்சல், டேவிட்ம் ஆர்ஜன்ரீனாவில் இருந்து மேற்கு ஜேர்மனிக்கு வந்துள்ள தம்பதிகளாக நடிக்கின்றனர். இவர்கள் ஸ்ரீபனுடன் ஒரு வீட்டில் தங்குகின்றனர். ரேச்சல் மருத்துவ கொமாண்டரிடம் தனக்கு பிள்ளைகள் இல்லை எனக் கூறி மருத்துவ பரிசோதனைக்கு செல்கின்றார். மூன்றாவது சந்திப்பின் போது திட்டமிட்டவாறு ரேச்சல் விஷ ஊசியொன்றால் வைத்தியரை குத்தினார். மயக்கத்தில் இருந்த வைத்தியருக்கு இருதய நோய் என மருத்துவரின் மனைவியும் தாதியுமாகவுள்ள வரிடம் கூறி அம்புலன்சை வரவழைக் கின்றார். அம்புலன்ஸ் இவர்களுடையது. ஒரு வீட்டில் வைத்தியர் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். ஒருவர் மாறி ஒருவர் இவரை கண்காணிக்க வேண்டும். இவரது வாய் மூடப்பட்டு கைககள் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் இவருக்கு சவரம் செய்யப்படுகின்றது. சாப்பாடும் கரண்டியால் ஊட்டப்படுகின்றது. தவறுதலாக இவருக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள சவரக் கத்தியை தனது காலால் எடுத்து கைகளை விடுவித்து ரேச்சலை தாக்கி அங்கிருந்து வெளியேறுகின்றார். இதன் பின்னர் இம்மூவரும் இவரைத் தேடும் படலங்கள் தோல்வியில் முடிகின்றன. என்ன செய்வது என யோசித்தவர்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனர். வைத்திய கொமாண்டரை சுட்டுக் கொன்று விட்டோம் என மொசாட்டிற்கு பொய் சொல்வது என தீர்மானத்துக்கு வருகின்றனர். தாயகம் திரும்பும் இவர்களுக்கு பெரு வரவேற்பளிக்கப்படுகின்றது. இது நடைபெற்றது 1965ம் ஆண்டு.



1997ம் ஆண்டு சுமார் 32 ஆண்டுகளுக்கு பின்னர் ரேச்சலின் வீட்டில் ஒரு விருந்து நடைபெறுகின்றது. ரேச்சலும், ஸ்ரீபனும் இப்பொழுது தம்பதிகள். சமூகத்தில் உயர் அந்தஸ்தில் உள்ளவர்கள். இவர்களது மகள் சரா 1965ம் ஆண்டு சம்பவத்தை மையமாகக் கொண்டு ஒரு நூலை எழுதியுள்ளார். அதனையொட்டிய விருந்தே ரேச்சலின் வீட்டில் நடைபெறுகின்றது. அங்கு வரும் டேவிட்டிடம் தனது திருமண வாழ்க்கையின் துயரங்களை ரேச்சல் பகிர்ந்து கொள்கின்றார். ஸ்ரீபன் ஒரு புதிய தகவலை ரேச்சலிடம் கூறுகின்றார். 1965ல் தப்பிய வைத்தியர் இப்பொழுது உக்கிரெயினில் அகதியாக தஞ்சமடைந்துள்ளார் என்பதே அச்செய்தி. இவரை ஒரு பத்திரிகையாளர் மிக விரைவில் பேட்டியெடுக்கவுள்ளார் என்பதும் இவர்களுக்கு தெரிய வருகின்றது. பொய்யை உண்மையாக்க இது ஒரு சந்தர்ப்பம். உடனடியாக வைத்தியரை கொலை செய்ய வேண்டும். முதலில் மறுக்கும் ரேச்சல் பின்னர் உக்கிரெய்ன் செல்கின்றார். ஒரு கட்டத்தில் பத்திரிகை யாளருக்கு உண்மையை ஒரு குறிப்பில் எழுதிவிட்டு செல்லும் ரேச்சல் பின்னர் வைத்தியரை கொலை செய்து விடுகின்றார். பத்திரிகையாளருக்கு எழுதிய செய்தி இப்பொழுது விரைவில் உலகத்திடம் செல்லவுள்ளது.

இப்படம் இஸ்ரேல் தனது கொலை யாளிகளுக்கு எதிராக தொடரும் வஞ்சம் தீர்க்கும் படலத்தை வெளிப்படுத்துகின்றது. மறுபுறம் உளவுப் படைகள் பாதிப்படைந்தவர் களையே பழிவாங்கும் படலத்தில் பயன்படுத்துகின்றது. டேவிட் பெற்றோரை போரில் இழந்துள்ளார். பல சமயங்களில் இவரது வன்முறை செயற்பாடுகளுக்கான காரணம் இது என பார்வையாளர்களை எண்ணவைக்கின்றது. அதேபோல் இஸ்ரேலின் வஞ்சம் தீர்க்கும் படலத்தையும் பார்க்க பார்வையாளர்களை தூண்டுகின்றது. ஒரு குற்ற உணர்ச்சிகளை பலவீனமாக பார்க்காமல், பலமாக மாற்ற முற்படுகின்றார்கள்.

இங்கு ஒவ்வொரு பாத்திரத்திலும் இரு நடிகர்கள் நடிக்கின்றனர். இளம் வயது ரேச்சலாக (Jessica Chastain) ம் வயது முதிர்ந்த ரேச்சலாக (Helen Mirren) ம் நடித்துள்ளனர். அதே போல் ஸ்ரீபன், டேவிட் ஆகியோரது பாத்திரங்களிலும் இருவர் நடித்துள்ளனர்.

இப்படம் இரு வடிவங்களில் வெளி வந்துள்ளது. 2007ம் ஆண்டு இதன் முதலாவது வடிவம் கீபிறு மொழியில் வெளிவந்தது. Ha-Hov or HaChov என்ற பெயரில் வெளிவந்தது. இதனை இயக்கியவர் Assaf Bernstein. இதன் இரண்டாவது அமெரிக்க வடிவத்தை John Madden. இவர் இயக்கிய சேக்ஸ்பியர் இன் லவ் பலராலும் மறக்க முடியாத படம். திரைப்பட ஆர்வலர்கள் இவ்விரு படங்களையும் பார்க்க வேண்டும். இரு படங்களிலும் சிறு சிறு வேறுபாடுகள் உள்ளன. திரைக்கதை சொல்லும் உத்தி மிகவும் சிறப்பாக உள்ளது. அவற்றுடன் பாராட்டப் பட வேண்டிய மற்றம்சம் எடிட்டிங். இளம் டேவிட்டாக இரு படங்களிலும் வருபவர்கள் சிறப்பாக நடிக்கின்றனர். இப்படங்கள் திரை ஆர்வலர்களுக்கு ஒரு பாடம் சொல்லியது எனக் கூறலாம். இப்படத்தை பார்த்தவுடன் எனது மனதில் ஓடிய விடயம் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கும் வஞ்சம் தீர்க்கப்படுமா? என்பதே.

2. இதே முள்ளிவாய்க்கால் படுகொலை களுக்கு சற்று முன்னால் போராட்ட களத்திலிருந்து வெளியேறி தற்சமயம் சுவிசில் வாழும் சயந்தன் எழுதிய ஆறா வடு என்ற நூல் போரின் பல வலிகளை வெளிப்படுத்தியது. இந்திய இராணுவப் படையினர் இலங்கையில் தங்கிய காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் என பல சிறு கதைகளை கொண்ட தொகுப்பாக இந்த நூல் உள்ளது. இது நாவலா? என்ற கேள்வி ரொரண்ரோவில் நடைபெற்ற விமர்சனக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. ஒரு நல்ல படைப்பு பல சந்ததிகளுக்கு பல விடயங்களை காவிச் செல்லும். இது இந்நாவலில் இல்லை என்பது உண்மையே. இன்றைய கால கட்டத்தில் இருப்பவர் களுக்கு சம்பவங்களின் காலங்களின் பின் புலங்கள் சொல்லப்படத் தேவையில்லை. ஆனால் எமது வருங்கால சந்ததியினருக்கு இந்நாவலை வாசிக்கும் பொழுது திண்டாடும் நிலை அல்லது அடிக்குறிப்பு தேடும் நிலையே ஏற்படும். இந்திய இராணுவக் காலங்களில் அவர்களது முகாம்களை சுற்றியுள்ள பல மைல்கள் சுற்றளவிற்கு ஒருவித எண்ணெய் மணம் வீசம். இது அக்காலக்கட்டத்தின் ஒரு சரித்திர வெளிப்பாடு என்றே கூறலாம். இந்திய இராணுவம் என்றவுடன் நினைவுக்கு வருபவற்றில் இந்த மணமும் முக்கியம் பெறுகின்றது. இந்த நாவலில் இது ஒரு சிறு குறிப்பாகவே உள்ளது. அதற்கான




அழுத்தமே இல்லை. விமர்சனக் கூட்டத்தில் வெளிப்பட்ட அழுத்தம் கூட நாவலில் இல்லை என்பது கவலையளிக்கின்றது. சயந்தன் ஒரு நல்ல திறமையான எழுத்தாளர். அடுத்து வரும் படைப்புக்களில் மாற்றங்களை எதிர்பார்க்கலாம். இணையத் தளங்களில் ஆறா வடு பற்றிய விமர்சனங்களை பார்க்கலாம்.

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

# முன்னேற்றத்தின் அத்திவாரம் விசுவாசம்

உனது நம்பிக்கை சரியானது என உனக்கு நீயே நிரூபித்துக் கொள்வதற்குத் தகுந்தவற்றையே உனது மனதில் எண்ணங்களாக நீ உருவகிக்கின்றாய்.

வாழ்வின் நெருக்கடிகள் யாவற்றிற்குமூடாக வெற்றிகரமாக எதிர்நீச்சலிட அத்தியா வசியமான அனைத்தும் எனக்குள் மேலதிகமாகவே நிறைந்திருக்கின்றன, நான் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்ற நம்பிக்கை எனக்குள் கிளம்பியிருக்கின்றது. உனது ஆளுமையை அபிவிருத்தி செய்வதுதான் வாழ்வின் முதன்மையான முக்கிய குறிக்கோள். வாழ்வின் குணாதிசயங்கள் நீ நீயாக வளர்வதற்கு உனக்கு உதவுகின்றன. இந்த அடிப்படை முக்கிய நியதி விளங்காவிட்டால் உனக்கு பிரச்சினை வரும்போது நீ தத்தளித்துத் தடுமாறி பின்வாங்கத் தூண்டப்படுவாய். 'இதென்னடா, சோதனைமேல் சோதனை! இது தானா வாழ்வு?' என மனம் வெதும்புவாய். பிரச்சினைகளுக்கூடாகப் பயணிக்கையில் நீ தேர்ந்தெடுக்கும் பதில் நடவடிக்கைகள்தான் உனது ஆளுமையை வளர்த்து உயர்த்துகின்றன எனும் உண்மையைப் புரிந்து கொள்ளாது அதைத் தவற விட்டு விடுகிறாய்.



ஒரு நெருக்கடி உருவாகும்போது, அதற்குரிய பதில் நடவடிக்கை உனது குணத்தைப் பற்றி நன்கு விளக்கும்.

அனுபவம்தான் மனிதனின் ஆற்றலை வளர்த்து சக்தி தரும். பிரச்சனையின்போது உனக்கு உதவிய ஆற்றல்களின் ஞாபகம் உனக்கு வரும். அப்போது நெருக்கடிகள் எப்போதும் நிலைத்திருப்பதில்லை என்பதையும் நினைத்துக் கொள். காலத்திற்கேற்ற மாதிரி வாழ்வு அடிக்கடி உன்னை மாற்றிப் புதுப்பித்துப் கொள்ளும். உனது ஆளுமையை உயர்த்திடச் சந்தர்ப்பம் வரும்போது அதற்கேற்றவாறு சந்தர்ப்பங்களையும் உறவுகளையும் வாழ்வு உன்முன் வைக்கும். அப்போது அவை யாவற்றிற்கும் உனது ஆளுமையையும் ஆற்றலையும் உயர்த்தும் பதில் நடவடிக்கை களைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுவது உனது பொறுப்பு.

உனது சூழலிலும் உனக்கும் நடைபெறுபவற்றால் தானா உனது குணாதிசயம் நிர்மாணிக்கப்படுகின்றது என இன்றுவரை நீ நினைத்திருக்கலாம். உனது வாழ்க்கை அனுபவம் ஒவ்வொன்றும்தான் உனது ஆளுமையைக் கட்டி எழுப்புகின்றது என்பதை இன்று உணர்ந்துகொள். அன்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி, இரக்கம், பொறுமை, பண்பு, கருணை, அமைதி போன்ற குணாதிசயங்களை உனது ஆளுமையைக் கட்டியெழுப்பும் கருவிகளாக உபயோகித்திடப் பழகிக்கொள். பிரச்சினைக்கு உனது பதில் நடவடிக்கையை இவை சிறப்பாக வழிநடத்தும்.

**எனது உள்ளார்ந்த குணாதிசயத்தையும் ஆளுமையையும் மிகுந்த ஆற்றலுடன், மேலும் சிறப்பாக வெளிப்படுத்தும் முயற்சியிலே இன்றுமுதல் நான் ஈடுபடப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 201

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# கடன், ஆறா வடு...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

3. ஆறா வடுவுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் கணேசன் அல்லது ஐயர் எழுதிய ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் என்ற நூல் வெளியீடு தமிழர் வகைதுறை நிலையத்தால் நடத்தப்பட்டது. தற்சமயம் ஐயர் சுகயீனமாக இந்தியாவில் உள்ளமையால் நூல் விற்பனையில் பெறப்பட்ட 1600 டொலர்கள் ஐயருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தமிழர் போராட்டம் பற்றி பல நூல்கள் வெளி வந்துள்ளன. அருளரின் லங்காராணி, செழியனின் ஒரு நாட்குறிப்பு, கோவிந்தனின் புதியதோர் உலகம், புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் போன்ற நூல்களின் வரிசையில் இந்நூல் வெளிவந்துள்ளது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப நாட்களை இவ்வளவு தெளிவாகவும் உண்மையாகவும் யாரும் வெளிப்படுத்த வில்லை. நாமறியா பல தகவல்கள் இந்நூலில் உள்ளது. நிச்சயமாக அனைவரும் வாசிக்க வேண்டிய நூல். இது ஏற்கெனவே இனியொரு இணையத்தளத்தில் தொடராக வெளிவந்தது. பல பத்திரிகைகள் இணையத்தளங்கள் இதனை மறு பிரசுரம் செய்திருந்தன. முதலாவது பதிப்பின் 90 வீதமான பிரதிகள் விற்கப்பட்டு விட்டன. ஆங்காங்கே சில அத்தியாயங்கள் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஐயரின் துணிச்சலுக்கும் நேர்மைக்கும் இந்நூல் ஒரு உதாரணம்.

4. ஐயரின் நூலுக்கு நேர் எதிர்மாறன ஒரு நூலும் வெளிவந்துள்ளது. நடு நிலைமை என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிராக சொல்லாடப்பட்டுள்ளது. இதன் பெயரே இதனை வெளிப்படுத்துகின்றது. மார்க் ஸ்ரீபன் மெடோஸ் என்பவரால் எழுதப்பட்டுள்ள Tea Time with terrorists




என்ற நூல். மோட்டார் சைக்கிள் பயணம் மூலம் இலங்கையை அளந்து பார்த்துள்ளார் இந்த எழுத்தாளார். இங்கு இந்த நூலை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதாக நினைக்கின்றேன். பிறிதொரு கட்டுரையில் இந்நூலை விரிவாக பார்க்கலாம்.

The Debt படத்தை (ஆங்கில, யூத மொழி வடிவங்களை) காலம் செல்வத்திடமும், (416-731-1752), ஐயரின் நூலை VIP Video (416-450-1639) விலும் பெற்றுக் கொள்ளலாம்.


சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரண்ரோ

**10th ITaFF - 2011**

June 23, 2012 நடைபெறவுள்ளது

INDEPENDENT ART FILM SOCIETY

பத்தாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால் கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத்தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான பணப் பரிசுகள் வழங்கப்படும்.

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
'படைப்புக்கள் June 01, 2012க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
'படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
'படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
'படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள் நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
'படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
'தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
'படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8
Toronto, ON. Canada, M1B 5K3
மேலதிக தொடர்புகளுக்கு:: 1-416.450.6833 / 1-416.804.3443
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com



Niru BRAND®
FOOD PRODUCTS
நிரு பிரான்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
PINEAPPLE JAM
Pure Gingelly Oil
(Sesame Oil)
Huile De Sesame Extrite
De Graines De Toute
Premiere Qualite
Kitul Treacle
CHILLI SAUCE
CONDENSED
Sweetened
300ml.
SPICY COFFEE
175g.
COW GHEE
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# மகாஜனாவின் கணிதம், பொது அறிவுப்போட்டிகள்

**- ஞா. அருந்ததி -**

மகாஜனாக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடா நடத்தும் மாணவர்களுக்கான கணிதம் மற்றும் பொதுஅறிவுப் போட்டிகள் மார்ச் 04, 2012 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. கடந்த சில ஆண்டுகளாக இப்பரீட்சைகள் ரொறொன்ரோ, மொன்றியல், கொழும்பு மற்றும் மகாஜனாக்கல்லூரியிலும் ஒரே சமயத்தில் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் ரொறொன்ரோவில் இப்பரீட்சைகள் 2300 Pharmacy Avenue, Scarborough இல் இருக்கும் Sir John Macdonald CI இல் நடைபெறுகின்றன. மொன்றியலில் இப்பரீட்சைகள் 1611 St. Regis Blvd இல் இருக்கும் மொன்றியல் முருகன் கோவிலில் நடைபெறுகின்றன.

இப்பரீட்சைக்கு மகாஜனாவில் படித்த மாணவர்களின் பிள்ளைகள் மட்டுமல்லாமல் கனடாவிலுள்ள எல்லா தமிழ் பிள்ளைகளும் பங்குபற்றலாம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலம் மற்றும் பிரஞ் மொழிகளில் பரீட்சைகள் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இப்பரீட்சைகளுக்கு கனடாவாழ் எல்லா தமிழ் சிறார்களும் பங்குபற்றி பயன் அடைய வேண்டும் என்பதே மகா-ஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளையின் நோக்கமாகும்.

இக்கணித மற்றும் பொது அறிவுப் பரீட்சைகள் முதலாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு தனித்தனியாகவும் மற்றும் 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் சேர்ந்தும் நடைபெறுகின்றன. பரீட்சையில் வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் கனடா தழுவிய முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்களும் வழங்கப்படுகின்றன. இப்பரீட்சைகளுக்குரிய மாதிரி கேள்வி மறுமொழிகளை மகாஜனாக்கல்லூரியின் இணையதளமான Mahajanan.org இல் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் உள்ளது.

இம்முறை நடைபெற்ற பரீட்சைகளுக்கும் வழமை போல் பெற்றோர்களும் பிள்ளைகளும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். கனடாவில் கிட்டத்தட்ட 700 மாணவர்கள் இவ்வருடம் போட்டியில் கலந்து கொண்டனர். பரீட்சை முடிவுகள் ஏப்பிரல் 13, 2012 இல் மகாஜனாவின் இணையத்தளத்தில் வெளியாகும். இப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும் மற்றும் பதக்கங்களும் யூன் 23, 2012 சனிக்கிழமை மாலை 4:40 மணிக்கு 5183 Sheppard Avenue East, Scarborough இலுள்ள சீனக் கலாசார மண்டபத்தில் நடைபெறும் மகா-ஜனாக் கல்லூயின் கலைவிழாவில் வழங்கப்படும்.










# கல்யாண முருங்கையும் காய் முருங்கையும்




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். நேற்று எங்கள் வீட்டில் முருங்கைக் காய்கறி, அக்கறி என்மனத்தை அலைக்கழித்து விட்டது. மனக்கனம், மனச்சஞ்சலம் என்ற வியாதிகளையும் கிளப்பிவிட்டது. உடல் நோய்க்கு பத்தியம் வைக்க உதவும் முருங்கைக்காய் மனநோயை உண்டாக்கியது. ஏன்? நமது இழப்புக்களும் இறந்தவர்களின் நினைப்பும், பிறந்த மண்ணைப் பற்றிய எண்ணங்களும் முருங்கைக்காய் கறியால் ஒரு உணர்ச்சிக் சூறாவளியை உண்டாக்கி விட்டது.

இத்தோடு கடந்த மார்கழிமாதம் ‘விளம்பரம்’ இதழில் ‘கொலன்ட்’ நாட்டில் வாழும் தவா மயில்வாகனம் எழுதிய ‘எங்கள் வீட்டு முருங்கை மரம்’ என்ற கட்டுரையும் நினைவு மேடையில் தட்டி விட்ட அன்றைய ஞாபகங்களும் சேர்ந்து முருங்கை மகாத்மியங்கள் பற்றிச் சிந்திக்க வைத்தன. முருங்கைக்காய் கறியும், முருங்கை இலைச் சுண்டலும் வாய்க்குச் சுவையும் வயிற்றுக்கு நிறைவும் உடலுக்கு ஆரோக்கியமும் தருவது போல முருங்கையை ஒட்டிய நினைவுச் சுவை நெஞ்சுக்கு நிறைவையும் தருகிறது.

நண்பா!

முருங்கையில் இரண்டு வகை உண்டு. ஒன்று கல்யாண முருங்கை மற்றையது காய் முருங்கை கல்யாண முருங்கையை ஈழத்தில் முள் முருக்கு என்பர். அந்த மரத்திலும் கொப்புகளிலும் முள்இருப்பதால் இது காரணப்பெயராய் அமைந்திருக்கும். இந்த முள்முருங்கையை கல்யாண வீடுகளில் கன்னிக்கால் நடுவதற்கும், கல்யாணத்தன்று மணவறைக்கு முன்னால் அலகரித்து வைப்பதற்கும் பயன்படுத்துவர். முருங்கை மரத்தின் நேரிய கொப்புகளே இதற்குப் பயன்படுத்தப்படும். இதனுடைய கல்யாண மங்களச் சிறப்புக் கருதியே கல்யாண முருங்கை என்று பெயர் வைத்தனர். மலேசியா, சிங்கப்பூரில் கல்யாண முருங்கை என்றே கூறுவார்கள். இந்த முருங்கையின் இலை சித்த மருத்துவத்துறையில் மருந்துகளை தேனிலே குழைத்து உண்பதற்கு முள் முருக்கு இலையில் அவற்றைக்கொட்டி தேனை விட்டுக் குழைத்து நாக்கால் நக்கி விழுங்க வேண்டும் என்று சித்த வைத்தியர்கள் கூறுவார்கள். இது நோய் தீர்க்கும் முறைகளில் விசேடமானது என்பது அவர்கள் கண்டமுடிவு.

காய் முருங்கையின் பயன்படும் பலாபலன் களும் சுவையும் பலவாகும். முருங்கைக் காயில் கறியும் வைக்கலாம். சாம்பாற்றில் போட்டுச் சுவையும் கூட்டலாம். முருங்கைப் பிஞ்சில் பத்தியமும் வைக்கலாம். சித்த மருத்துவர்கள் சிபார்சு செய்யும் பத்தியபிஞ்சுகளில் முருங்கைப் பிஞ்சு முதல் இடத்தைப் பிடித்துக்கொள்ளும். இதற்கு அடுத்தபடியாகத் தான் கத்தரிப் பிஞ்சும், வெண்டிப்பிஞ்சும் இடம்பெறும். மல்லி, மிளகு, சீரகம், உள்ளி வைத்து அம்மியில்



அரைத்து சரக்குக்கறி என மண் சட்டியில் முருங்கைப் பிஞ்சும் போட்டு நமது தாய்மார்கள் ஈழத்தில் உருவாக்கிய பத்தியக்கறியின் மணம் இன்றும் மூக்கைத்துழைக்கும். நாக்கைத்துவட்டும். இந்தப் பத்தியக்குழம்பில் கொஞ்சத்தை தங்கள் சாப்பாட்டுக் கோப்பையிலும் விடும்படி கேட்கும் நோயற்ற நோயாளி களும் உண்டு. பத்தியக்கறியின் பயனை நோயாளிகள் இரண்டு நாளில் தெரிந்து கொள்வார்கள். ஆரோக்கிய அன்னை காட்டிய முருங்கைப்பிஞ்சு ஓர் உயிராயுதம். முருங்கைக்காயோடு உருளைக்கிழங்கை யும் சேர்த்து வைக்கும் கறியை முருங்கைக்கறி என்றுதான் சொல்லுவோமே தவிர கிழங்குக்கறி என்று சொல்ல மாட்டோம். கிழங்கின் சுவையும் அக்கறியில் சரிக்குச்சரி சுவறியிருந்தாலும் முருங்கைக்குத்தான் பெயர். முருங்கை இலைச்சுண்டல் தனிச் சுவையுடையது. இதனை இலைக்கறி என்றும் குறிப்பிடுவோம். உடல் உரத்துக்கும், உற்சாகத்திற்கும் ஊட்டம் கொடுப்பது. முருங்கை இலைக்கறியோடு மட்டும் கறுப்பரிசிச்சோற்றைக் குழைத்து உண்டு மகிழ்ந்த அனுபவம் உனக்கு உண்டு தானே? நினைத்துப்பார். நெஞ்சு நீச்சலடித்து ஊருக்குச் கொண்டு போய் வீட்டு முற்றத்தில் நிறுத்தி விடும். விசாவும் தேவையில்லை பாஸ் போட்டும் தேவையில்லை.

நண்பா!

முருங்கை இலையோடு மச்சக்கறி கலந்த சுவைபற்றி எனக்குத் தெரியாது. நான் சைவ உணவுக்காரன். உன்னுடைய அனுபவத்தை எழுது. பிறர் அனுபவமும் அறிவுக்கு விருந்து தானே. முருங்கைக் காயின் விசேட குணங்களை பற்றி இயக்குனர் பாக்கியராஜ் மூன்று முடிச்சு திரைப்படத்தில் சொல்லியது உண்மை யிலும் உண்மை என்கிறார் ஒரு சித்த வைத்தியர். பாக்கியராஜ் ஒரு கிராமத்து இயக்குனராதலால் அவருக்கு சித்த மருத்துவத் துறையிலும் ஞானம் இருந்திருக்கலாம். பாக்கியராஜ் நகைச் சுவையோடு மக்களுக்குத் தேவையான கருத்துக்களையும் கலந்து சொல்லுவார். ஒருகாலத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நகைச்சுவையோடு சிரிக்க வைத்து சிந்தனையை தூண்டியவர் தானே! நிற்க!.

முருங்கைக்கறியும், அதன் இலைச் சுண்டலும் தந்தைக்குப்பிடித்தது போல் தாய்க்குப் பிடித்தது போல், மகன், மகள், பேரப்பிள்ளைகளுக்கும் பிடித்த உணவாய் இருப்பதும் இயல்பே. பரம்பரைக் குணங்களோடு, பழக்கங்களோடு சுவை களும் சேர்ந்து கொள்ளும். முகச்சாடை, உடல்சாடைகள் உருவத்தில் தெரிவது போன்று விவேகம், சுவை, குணங்களும், இரத்தத்தோடு தொடர்ந்துவரும். அணுக் களோடு இவை கலந்திருக்கும்.

நண்பா! முருங்கைக்காயை அதன் உருவ உறுதிச் சிறப்புக்காக, நான் பாராட்டுவ துண்டு. தனது அடையாளத்தை எந்தக் கொதிநிலையிலும், குழம்புநிலையிலும், சாம்பாத்துக் கலப்பு நிலையிலும் கரைந்து கொள்ளாது, விட்டுக் கொடுக்காது. முன்பு விளம்பரத்தில் எழுதிய கடிதம் ஒன்றில் தமிழர்கள் பல்கலாச்சாரத்தோடு ஒத்துப் போக வேண்டும். சேர்ந்து வாழவேண்டும். ஆனால் சாம்பாத்துக்கள் கிடக்கும் முருங்கைக்காயைப் போல் அடையாளத்தை அழியவிடாது துரித்துக் கொண்டு மிதக்க வேண்டும் என்று எழுதியது ஞாபகமிருக்கிறதா? முருங்கைக் காய் தமிழர் கறிமட்டுமன்று தமிழருக்கான அடையாள அறிவிப்புமாகும்.

ஈழத்தில் எங்கள் கிராமத்துக்கு நகரத்திலிருந்து காய்கறிகள் வராத காலங்களில் சைவக்காரர்களுக்கு மிகுதி யும் உதவுவது உருளைக்கிழங்கு, துவரம் பருப்பு, மைசூர் பருப்பு முருங்கைக்காய் மட்டும்தான். வீட்டிலே காய்கறித்தோட்டம் வைத்திருப்பவர்கள் கத்தரி, வெண்டை, பயறு, பூசணி முதலியவற்றைப் பாவிப்பார்கள். சில பகுதிகளில் முருங்கை மரங்களே பெருவாரி யாய் வளர்ந்து ஊரில் உள்ள எல்லா மக்களுக்கும் காய், இலை என்று வழங்கிக் காமதேனுவாய் கை கொடுத்திருக்கிறது.

எங்களூர் அரசினர் வைத்தியசாலைக்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ள நிலப்பரப்பினை ‘முருக்கடி’ என்று சொல்லுவார்கள். இப்பரப்பில் கல்யாண முருங்கை என்ற முள்முருக்கும், காய் முருங்கை என்னும் கறிமுருக்கும் செழிப்பாகவும் நிறைந்தும் காணப்பட்ட வையே அப்பெயர்வரக் காரணமாகும். எல்லா வீடுகளிலும் முருக்கடி உண்டுதான். தனிமரம் தோப்பாகாதே. மங்கள காரியங்களுக்கு நேரான முருங்கைத் தடிகளே. உபயோகிப்பார்கள். இப்பகுதியில் நேரான முருங்கைத்தடிகள் அதிகமாக உள்ளதாலும் ஏனைய வட்டாரங்களில் உள்ளமக்கள் தங்கள் தேவைகளுக்கு இங்கு வந்து பெற்றுக் கொள்வார்கள். கறிமுருங்கையில் ‘உலர்ந்தா முருங்கை’ என்று ஒருவகை உண்டு. இதன் காயும் இலையும் மிகுந்த சுவையுடையன. முருக்கடி நிலப்பரப்பில் வாழும் மக்கள் நல்ல ஆரோக்கியம் உள்ளவர்களாகக் காணப்படுவர். இதற்கு இந்த நிலப்பரப்புக்கு பக்கத்திலே அலைபாயும் கடற்கரை உண்டு. இந்தக்கடல் காற்றும் முருங்கை உணவும் இப்பகுதி மக்களின் ஆரோக்கியத்திற்கு பெரிதும் உதவுகின்றன. இத்துடன் அரசினர் மருத்துவமனை அருகில் இருப்பதால் உடலில் ஆரோக்கியக் குறைவு தோன்றி மறுகணமே வைத்தியசாலைக்குப் போய் மருத்துவர்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 37ஆம் பக்கம்


YARL WINDOW BLINDS & DRAPER



VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORM WOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS

WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds





Since 1991
Tel: 416.806.5397
905.201.7733

Call: selvam

We have experience to make your home more beautiful

# இலக்கியவாதிகள்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

சொல்லிச் சொல்லி சலித்த அலுப்பு அவரது வார்த்தைகளில் நிரம்பியிருக்கிறது. வேம்பநாடு ஏரியின் தரையில் ஊர்ந்த நத்தைகள் அனைத்தும் மஞ்சள் நிறமும் பிரமாண்ட உருவமும் பெற்று படகு வீடுகளாக மிதப்பதுபோல சுற்றிலும் மிதக்கின்றன.

இந்த குமரகம் பயணத்துக்குத் தனியாகப் படகு பிடித்துச் செல்ல, முகம்பா என்னுமிடத்திலிருந்து கேரள அரசாங்கம் படகுகளை இயக்குகிறது. அவ்வழியே போகும்போது மறக்காமல் பத்திரமணல் என்னுமிடத்தைப் பற்றி எல்லோரும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆலப்புழா காயல் நீர்ப் பரப்பில் மிதக்கும் தாவரத் தீவு அது. 110 ஏக்கர், வீடுகள் எதுவுமில்லை. முழுக் காடு. ஒரு காலத்தில் தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது எனவும் இப்போது முகம்பா ஊராட்சிக்குச் சொந்தமானதாக மாறிவிட்டது என்றும் சொல்கிறார் படகோட்டி. தூரத்தில் நீரின் விளிம்போரம் அழகான காடும் அதனூடாக கொஞ்சம் கான்க்ரீட் காடுகளுமாக விரிகிறது குமரகம். சீறிப்பாயும் இயந்திரப் படகில் போட்டில் மிரண்டு அழும் குழந்தையை, அருகாமை போட்டின் சிறுமி, சிரிப்பூட்டிச் செல்கிறாள். காலம் முழுக்க நினைவில் நிற்கப்போகிற சந்தோஷத் தருணங்கள் இவை. வீடுகள், வாகனங்கள் எதுவும் அதிகமாக இல்லாத, அமைதி மட்டுமே நிரம்பியிருக்கும் பகுதி குமரகம்! உயர்தர ரிசார்ட்டுகள், ஓட்டல்கள் உண்டு. ஒரு நாளைக்குக் குறைந்தது 4,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாய்க்கும் அதிகமான வாடகைத் தொகையிலும் இங்கே ரிசார்ட்டுகள் கிடைக்கின்றன. பேக் வாட்டரின் நுனியில் மரங்களடர்ந்த சூழலில், புகழ்மிக்க தாஜ் ஓட்டல் அமைந்திருக்கிறது. கேரள அரசின் சுற்றுலாத் துறையின் கீழ் இயங்கும் ரிசார்ட்டுகளும் உண்டு. எல்லாவற்றிலும் வாடகைத் தொகை என்பது உணவுக்கும் சேர்த்துதான். சைவம், அசைவம் இரண்டுமே கிடைக்கின்றன. பொருள் தேடி ஓடும் இந்த நகர வாழ்வில், நடுத்தர வர்க்கத்தினரில் தொடங்கி பலருக்கும் உடல் உழைப்பு என்பது கிட்டத்தட்ட இல்லாதொழிந்து விட்டது. தசைகளால் ஆன இந்த தேகம், தன் முறுக்கேறும் இயல்பு தொலைத்துவிட்டால் அப்புறம் பொருள் தேடித்தான் என்ன பயன்..? உடம்பின் இண்டு, இடுக்கில் ஒளிந்திருக்கும் நுண்ணிய நரம்புகளின் வேர்பிடித்து நீவிவிட்டு, உடம்பை உயிரூட்டுகிறது குமரகத்து ஆயுர்வேதிக் மசாஜ். பண்டைய கேரளப் பாரம்பரியத்தின் மிச்சம் இந்த மசாஜ். பல்வேறு மூலிகைகளைச் சாறு பிழிந்து, இன்ன மாதிரியான உடம்புவாகு



கொண்டவர்களுக்கு இப்படியான மசாஜ் என்று கணக்கெடுத்து, ஒவ்வொரு தசையும் இதுவரை செய்ய மறந்த தொழிலை நினைவூட்டி... ஒரு முறை அதை அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும், ஏன் அதை உலகம், கொண்டாடுகிறது என்பது!

கண்களில் படிந்து போயிருக்கும் மாசுகளை, அழுக்கைத் தூய்மைப்படுத்தும் அரை மணி நேர எளிய மசாஜ் தொடங்கி, நாள் கணக்கில் மூலிகைக்குள் முங்கிக் கிடக்கும் 'வல்லிய' மசாஜ் வரைக்கும் பல் வெரைட்டி உண்டு. ஒரு நாள் முழுக்க பல்வேறு பேக்கேஜுக்கு 1,500 - 2,000 ரூபாய். இப்படியே நீண்டு, 14 நாளைக்கு 30,000 ரூபாய் என்பதுவரை உண்டு. ரிசார்ட்டுகள் சிலவற்றிலும் இந்த மசாஜ் வசதியை வைத்திருக்கின்றனர். பேக்வாட்டரின் கரையோரப் பகுதியில் இரண்டு மரங்களுக்கு இடையே கயிற்றில் ஊஞ்சல் கட்டி, உடம்பெங்கும் மூலிகைகளைத் தடவிக்கொண்டு அதில் படுத்தபடி மனதுக்குப் பிடித்த புத்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள் வெளிநாட்டவர்கள் பலபேர். உடம்புக்கு இதமான மசாஜ், வயிற்றுக்கு உவப்பான உணவு முடித்து இரவு படுக்கைக்கு போனால், அந்த ஏகாந்த காற்று எல்லாவித ரம்மியங்களையும் ஜன்னல் வழி கொண்டுவந்து சேர்க்கும். நீளும் இரவில், தனிமையின் இசை எங்கும் பெருகி வழியும். தூக்கமும் கண்களைத் தழுவும்.

காலையில் குமரகம் படகுத்துறையில் ஏராளமான படகுகள் நிற்பதைப் பார்க்கலாம். பிரமாண்ட படகு வீடுகள் முதல் துடுப்புப் போடும் கட்டுமரம் வரை எல்லாம் உண்டு. மோட்டார் போட்டுக்கு ஒரு மணி நேரத்துக்கு 1,000 - 1,200 ரூபாய் வாடகை. ஒரு படகு பிடித்துக் கிளம்பினால் அடுத்த சொர்க்கம் ஆரம்பம். இதுவும் பேக்வாட்டர்தான். வேம்பநாடு ஏரியிலிருந்து ஒரு பிரமாண்ட ஆறுபோல் தண்ணீர் பிரிந்து ஊருக்குள் வருகிறது. அதனூடாகப் பயணிக்கிறது படகு. அரைமணி நேரப் பயணத்துக்குள்ளாக மரங்களடர்ந்த ஒரு இடத்தினருகில் படகை நிறுத்தினால் குமரகம் பறவைகள் சரணாலயம். அப்படி ஒன்றும் வித்தியாசப் பறவைகளோ, அதிகப் பறவைகளோ இருக்கும் இடம் இல்லை. என்றாலும் அந்த அமைதியைக் கிழித்து குயிலொன்று கூவும் சத்தமும் மனிதர்களைப் பார்த்து சலித்த அயர்சி முகத்தில் தெரிய எவ்வித சலனமும் அற்று நம்மையே பார்க்கும் அணிலின் முகமும், நாம் அங்கு சென்றதற்கான காரணத்துக்கு நியாயம் செய்துவிடுகின்றன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மனம் கவர்ந்த இடமாக இருக்கிறது இந்தச் சரணாலயம்.

"இந்த பேக்வாட்டர் பகுதியை இந்தியாவின் வெனீஸ் என்று சொல்வது தப்பில்லை.." என்று நீங்களே சொல்வீர்கள். அதைக் கடந்து பயணித்தால் வழக்கமான பேக்வாட்டர் பகுதிகள்தான். நீரின் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது வெங்காயத் தாமரை, இடையிடையே பிரமாண்ட படகு வீடுகள் கட்டும் பணி நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். படகுகளின் பாய்ச்சலுக்கிடையே கரையோர வீடுகளின் சிறுவர்களும் இடையிடையே புகுந்து நீச்சல் அடித்து சுற்றுலாப் பயணிக-ளின் புகைப்பட க்ளிக்குகளில் சிக்குகின்றனர். படகுப் பயணம் முடித்து வந்தால், மதிய உணவு நேரம் வந்திருக்கும். அதை முடித்தால் அப்புறம்... கோட்டயம் கிளம்பலாம். அங்கு போக தரை மற்றும் நீர் மார்க்கமாக வழியுண்டு. நீர் மார்க்கமாகப் போனால் இரண்டரை மணி நேரம் ஆகும். அரசு படகுகள் இயங்குகின்றன. தனியார் படகுகளும் உண்டு.

குமரகம் டு கோட்டயம் பயணத்தில், பேக்வாட்டர் ஏரியா இன்னும் கூடுதல் அழகுகளைத் தேக்கி வைத்திருக்கிறது. இதழ் விரிந்த தாமரைகள் ஆங்காங்கே கையசைக்கின்றன. எங்கோ விழுந்த தேங்காய் ஒன்று கொள்வார் யாருமின்றி நீரில் மிதந்து வருகிறது. வீடு கட்டுவதற்காக சிமெண்டை படகில் ஏற்றி துடுப்புப் போட்டுச் செல்கிறார் பெரியவர் ஒருவர். தன் வீட்டு கால்நடைகளுக்கு புல் அறுத்து படகில் கொண்டு போகிறார் ஒரு வயதான மூதாட்டி. தண்ணீர் நிறைந்த இந்த வாழ்வு பார்க்க நமக்கு அழகு. ஆனால், சராசரி வாழ்வுக்கான உழைப்பை அவர்கள் இன்னும் கூடுதலாக கொடுக்க வேண்டியிருக்கிறது. வேம்பநாடு ஏரி ஒரு இடத்தில் நிறைவுற்று, அகன்ற கால்வாய் ஒன்று பிரிகிறது. அதன் கரைகள் இரண்டிலும் நெடுகக் கிராமங்கள். இந்த கால்வாயில் அரைக் கிலோமீட்டருக்கு ஒரு தரம் இரு கரைகளுக்கும் இடையே ஒரு நடைபாலம் தென்படுகிறது. படகு வரும் சமயங்களில் அந்தப் பாலம் இருபுறமும் தூக்கிக்கொள்கிறது. இதற்கென்று தனியாக யாரும் பணியாளர்கள் இல்லை. படகு வரும் சமயத்தில் கரையில் நிற்பவர்களே இந்தப் பாலத்தை திறந்து மூடும் வேலையையும் பார்த்து விடுகிறார்கள். இரண்டு மணி நேரப் பயணத்தின் முடிவில் கோட்டயம் வந்துவிடும். குமரகம் சுற்றுலா முடிந்து திரும்பும்போது, மிக விரும்பிய பொருள் ஒன்றை தெரிந்தே ஒரு இடத்தில் தவறவ-ிட்டுச் செல்வதைப்போல தவித்து நிற்கும் மனம்... காதல் இணையிடம் தொலைக்கும் மனதைப் போல. அதுதான் குமரகமின் வசீகரப் பேரழகு!

எப்படிச் செல்வது, எப்போது செல்வது? சென்னை - குமரகம் நேரடி ரயில் வசதி கிடையாது. கோட்டயம் போய் அங்கிருந்துதான் குமரகம் போயாக வேண்டும். திருவனந்தபுரம் ரயில் அனைத்தும் கோட்டயம் போகும். தமிழக தென் மாவட்டங்களில் இருந்து பேருந்து வசதிகள் நிறைய உண்டு. குமரகமில் டிசம்பர் முதல் ஏப்ரல் வரை நல்ல சீஸன் இருக்கும். அதிக மழை பெய்யும் ஜூன், ஜூலை மாதங்கள் தவிர்த்து மற்ற மாதங்களிலும் ஓரளவுக்கு சீஸன் உண்டு. 400 முதல் 30 ஆயிரம் வரையில், உயர்தர ரிசார்ட்டுகள் முதல் குறைந்த பட்ஜெட் தங்கும் விடுதிகள் வரை பலதரப்பட்ட லாட்ஜ்கள் உள்ளன. உணவுக்கு என தனியான ஓட்டல்கள் குறைவு. ரிசார்ட்டுகளுடன் இணைந்த நல்ல ஓட்டல்கள் இருக்கின்றன. சைவம், அசைவம் இரண்டும் உண்டு. 500 ரூபாயிலிருந்து 30,000 ரூபாய் வரைக்கும் பல்வேறு பேக்கேஜ்கள் மசாஜ் இருக்கின்றன.

# கல்யாண...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

களிடம் காட்டி உடன் நிவாரணம் பெறும் வாய்ப்பும் மற்றவர்களை விட இவர்களுக்கு இருந்தமையால் தேகநிலையும் திட காத்திரமுள்ளதாய் விளங்குவதாயிற்று.

நண்பா! முருங்கைக்காயை சோற்றோடோ அல்லது பிட்டு, இடியப்பத்தோடே பிசைந்து சாப்பிடும் போது உண்டாகும் இன்சுவை அனுபவம் அலாதியானது. இத்துடன் சாப்பிட்டு முடிய முருங்கைக்காய் காம்பு களை ஒன்றாக இணைத்து வாயில் போட்டு நன்றாக சப்பிஉறிஞ்சி உள்விழுங்கும் போது கிடைக்கும் சுவை மாத்தமிழன் சுவைக்கும் நேரானது. இப்பொழுது சப்பிச் சாப்பிட நேரமில்லாதவர்களும், சப்பிச்சாப்பிடுவது நாகரிகக்குறை என்று கருதுபவர்களும் முருங்கைக்காயை சப்பிச் சாப்பிடுவதை நிறுத்தி விட்டார்கள். தமிழர் உணவு உண்ணும் முறையில் கடித்தல், சப்பல், நக்கல், உறிஞ்சல் எனச் சங்ககாலம் தொடக்கம் ஒரு ஒழுங்கு இருந்தது. அறியாமை காரணமாகவும் இதன் அருமை பெருமை பற்றிச் சொல்லிக் கொடுக்க ஆள் இல்லாமையாலும் இந்த முறைமைகள் மறைந்து விட்டன.

நண்பா!
ஒரு வாழை இலை போட்டு நடந்த விருந்தின் போது, முதல் பந்தியை விரைவாக முடித்து இரண்டாம் பந்தி வைக்க உன் மாமா அவசரப்படுத்தியபோது, முருங்கைகாய் கூறுகளை அடுக்கி வாயில் வைத்துக் கொண்டு எழும்பி நீயும் நானும் அதனைச் சப்பிச் சப்பி கைகழுவும் இடம்வரை போனது எனக்கு நினைவிருக் கிறது. உனக்கு நினைவு படுத்துகிறேன்.

வேறு என்ன?
பிறபின்பு
அன்பு ஈழத்துச்சிவானந்தன்

நகைச்சுவைத் தொடர் 242

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்

ரூபன் அவசர அவசரமாக சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதி உடுத்தது பாதி உடுக்காதது பாதியாக வேலைக்கு வெளிக்கிட்டுக்கொண்டிருந்தான். நேரம் மாறியது. ஆனால் ரூபனோ ரூபியோ மணிக்கூட்டை நேரம் மாற்றி வைக்கவில்லை. இது பல வீடுகளில் நடக்கும் சம்பவம் தான். உலகரைப் பொறுத்தமட்டில் நேரம் மாற்றினாலென்ன மாற்றாவிட்டாலென்ன தனது வழமையான நேரத்திற்கு எழுந்துவிடுவார்.

ரிவி. பார்த்துக்கொண்டிருந்தார். நித்திரைத்தூக்கத்தில் காரோடி விபத்தில் சிக்கியவர்களும், நேரம் போய்விட்டதே என அவசரத்தில் காரில் முடிந்தளவு வேகத்தில் சிகப்பு பச்சையெனப்பார்க்காது காரோடி பொலிசில் ரிக்கற் வாங்கியவர்களும், டொக்டரிடம் மற்றும் பல நிகழ்ச்சிகளைத் தவறவிட்டவர்கள் ஒன்று இரண்டல்ல டொக்டர் தந்தாரென எல்லா மருந்துக்குளிசைகளையும் மாறி மாறி நேரக்கணக்குப் பார்க்காமல் போட்டு வேலைத் தலத்திலும் பஸ் நிலையங்களிலும் வாகனம் ஓட்டும்போதும் மயங்கியவர்கள் எத்தனைபேர்?




எல்லாவழிகளிலும் சட்டம் ஒவ்வொருவரையும் கண் வைத்திருக்கிறது. வருமான வரி செய்யும்போது தவறான தகவல்களைக்கொடுத்து வம்பில் மாட்டிக்கொள்ளாதீர்கள். 10 ,20 டொலர் கூடப்பெறலாம் எனும் நப்பாசையில் அப்பிடி இப்பிடி வருமானவரி செய்து மறுபரிசீலனையின் போது தண்டப்பணமும் சேர்த்துக்கட்டியவர்கள் பலர்.

ஆண்டியாயிருந்தாலென்ன அரசனாக இருந்தாலென்ன வீட்டுக்கோடியில் களவெடுத்தாலென்ன அரச பணம் (மக்கள் பணம்) கோடி கோடியாக கையாடினாலென்ன சிறை சிறை தான், தண்டனை தண்டனை தான்.




ஆயுட்காப்புறுதி தவறான தகவல்கள் இறுதி நேரத்தில் குடும்பத்தினருக்கு தேவையற்ற பிரச்சினைகளைக் கொடுக்கும்.

வசந்த கால கோலங்கள். பருவத்தே பயிர் செய்.
சட்டம் எங்களுக்கு தெரியுமோ தெரியாதோ..விடயம் தெரிந்த ஒரிருவரிடம் கலந்தாலோசிப்பதே சாலச்சிறந்தது.

நயன்தாரா திருமணம் முடித்துவிட்டாரா இல்லையா ?

கொலைவெறிப்பாட்டு கேட்டீர்களா? என ரெக்ஸ் ஈமெயில் மூலம் நண்பர்களிடம் கேட்கும் நாம் எமக்குத்தேவையான விடயங்களையும் தகவல்களையும் ஏன் கேட்கத்தவறுகிறோம்?

மார்ச் 2012

20 ஆழிக்குமரன் ஆனந்தன் (நவரத்தின சாமி) பாக்குநீரினையை நீந்திக்கடந்தார்.

20. ஈராக்கில் அமெரிக்க கூட்டுப்படை ஈராக்கின் விடுதலை என்ற பேரில் 40 நாடுகளின் ஆதரவுடன் ஆக்கிரமித்த நாள் (ரசாயன ஆயுதங்களைத் தேடத்தொடங்கிய நாள்) 13 டிசம்பர் 2003 இல் சதாம் குசைன் கைது செய்யப்பட்டார்.




22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவு தினம் (2005)

22. உலக நீர் நாள் (1.நோயற்ற உலகிற்கு சுத்தமான நீர் 2. எல்லை கடந்த நீர். 3. சுகாதாரம் போன்றனவற்றை கருத்திற்கொண்டு ஐ.நா சபை திட்டம்.)



23. கனடாவின் முதலாவது பத்திரிகை த-கலிபாக்ஸ் கசெற் வெளியானது.

23. யாழ். சித்தர் யோகர் சுவாமிகள் நினைவு தினம் (1964)

24. பிரபல திரை இசைப்பாடகர் சீர்காழி எஸ்.கோவிந்தராஜன் நினைவு தினம் (1988)




27. யாழ். நூல் தந்த சுவாமி விபுலானந்தர் நினைவுதினம்

28. சங்கீத கலாநிதி கலைமாமணி பாடகி டி.கே.பட்டம்மாள் பிறந்தநாள் 1919. (பாடகி நித்தியசிறீ மகாதேவனின் பேத்தி)

31. இந்தியப்படை (பல அழிவுகளை ஏற்படுத்தியபின்) முற்றாக இலங்கையை விட்டு வெளியேறிய நாள்.







# இப்படியும் நடக்கிறது!

காலம் மாறும். இதுவே உலகநியதி. படைப்பின் சாராம்சமும் அதுவே. 2000ஆம் ஆண்டுகளில் ‘Outsourcing’ என்ற சொல் மிகவும் பிரபலமாக இருந்தது. கனடிய, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் பல முன்னணி நிறுவனங்கள் தமது தொலைபேசி தொடர்பான அலுவலக வேலைகளிற்கு இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைப் பாவித்தன. இதனால் கனடியர்கள், அமெரிக்கர்கள் பலர் தமது தொழில்களை இழந்துள்ளார்கள். இன்று நிலைமை மாறத் தொடங்கியுள்ளது. சென்ற தொழில்கள் திரும்ப வரத்தொடங்கி உள்ளன. SEARS CANADA, BC INC, AMERICAN EXPRESS, PRIMES TELECOMMUNICATION போன்ற பல நிறுவனங்கள் சிறிது சிறிதாக தமது ‘Call Centre’ தொழில்களை கனடாவிற்கு கொண்டு வரத் தொடங்கியுள்ளன. இதற்கு கூறப்படும் காரணங்கள் பல. முக்கியமாக Customer Satisfaction. பொருட்களைப் பற்றிய கேள்விகளுக்கு உள்ளூர் தொழிலாளர்களின், பதில் சொல்லும் முறை சிறந்ததாகவும் தரமானதும் உள்ளது.

# இளம் மேதாவிகள்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

இங்கிலாந்து, அமெரிக்க பல்கலைக் கழங்களில் 12-13 வயதுப்பிள்ளைகள் பட்டம் பெற்று வருகின்றனர். இந்நிலை எமது பிள்ளைகளிடமும் இருக்கலாம். இப்பிள்ளை களை அவதானித்து ஊக்குவிக்க வேண்டும்.

தற்போது மீத்திறன் அல்லது நுண்மதியாளர் கள் துரிதப்படுத்தல் (Acceleration) மூலம் கவனிக்கப்படுகின்றார்கள். இவர்களுக்கு விசேட பாடத்திட்டங்கள் உள்ளன. இவர்களை சாதாரண ஏனைய மாணவர் களுடன் கற்பிக்க முடியாது. இவர்கள் மிகவும் வேகமான சிந்தனையாளர்கள், மிகுந்த ஆக்கத்திறன் உள்ளவர்கள். மிகவும் இளம் வயதில் மேதாவியாக மாறும் தன்மை இங்கு ஏற்பட வாய்ப்புண்டு.

மிகுந்த வசதிவாய்ப்புள்ள இந்நாட்டில் எமது அற்புதமான அறிவுச் செல்வங்களை பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்களே. எமது பெற்றோர்கள் இதனைக் கண்டு கொள்வார்களா? அல்லது பெற்றதுடன் விட்டுவிடுவார்களா?



# மௌனம் காப்பது நல்லது

1. பிறர் என்ன செய்கின்றனர் அல்லது செய்யவில்லை என்பதை மதிப்பிடுவதில் உனது நேரத்தைக் கழிக்காது உன் மன அழுக்கினைப் போக்கி தூய்மைப் படுத்தும் பணியில் ஈடுபடுத்துவது சிறந்தது.

2. வாழ்வில் உண்டாகும் துன்பங்களைக் கண்டு கலங்காதீர்கள். நம் துன்பங்களைப் போக்கி அனைத்தையும் சீராக்கும் பெரிய சக்தியாகிய ஆண்டவனிடம் நம்பிக்கை வையுங்கள். இறைவன் ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை.



3. மௌனம் காப்பது மிகவும் நல்லது. பேச்சுக் கொடுத்தால் பத்தில் ஒன்பதுமுறை நம் அறியாமையை வெளிப்படுத்துகிறோம். ஆனால் மௌனத்தில் தீங்கு சிறிதும் கிடையாது.

4. ஒருவன், தன்னைத்தான் ஆளக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம் துன்பங்களையும் வேதனைகளையும் போக்க முடியாது. தன்னை அறிந்த ஒருவனால் மட்டுமே பிறருக்கு வழிகாட்டமுடியும். ‘உன்னையே நீ அறிவாய்’ என்பது ஓர் அறிஞரின் கூற்று.

**- ஆர்.எல். சேவியர் -**

5. உன் பணியை மனப்பூர்வமாக இறைவனிடம் அர்ப்பணித்தால் தியானம் செய்வதால் கிடைக்கும் நலன்கள் அனைத்தையும் பெறமுடியும்.

6. பயத்தை விட்டொழியுங்கள். அச்சம் கேட்டை விளைவிக்கும். அச்சமற்றவனுக்கே வெற்றியை எட்டிப் பிடிக்கும் ஆற்றல் உண்டாகும். ‘அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உரிமையடா’ என்ற சினிமாப் பாடலையும் நினைவு கூருவது நல்லது.

# சாதனை படைக்கவுள்ள உலகின் மிக உயரமான கட்டிடம்



உருண்டு ஓடும் உலகில் சாதனைக்கு அளவே இல்லை. தினந்தோறும் ஏதாவது ஒரு சாதனை உலகின் எங்கோ ஒரு மூலையில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. அதேபோல் இப்பொழுது உலகின் மிகவும் உயரமான கட்டிடம் என்ற சாதனையை அசர்பைஜான் கோபுரம் முறியடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 828 மீற்றர் உயரம் கொண்ட பேர்ஜ் கலிபா என்ற கட்டிடமே ஏனைய கட்டிடங்களுக்கு போட்டியாக இருந்தது. ஆனால் தற்போது சவுதி அரேபியாவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் சுமார் 1,050 மீற்றர் உயரமான இந்த அசர்பைஜான் கட்டிடம் முறியடிக்கும்.

மேலும் இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2,000 ஹெக்டெர் நிலம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. 189 மாடி-களை கொண்ட இக்கட்டித்தை எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் கட்டிமுடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

REAL AUTO FINISH
Experience • Integrity • Quality
அனுபவம் • நாணயம் • தரம்
FREE ESTIMATES ❖ இலவச மதிப்பீடு
Call: Anton @ 416. 629. 7047
❖ Body Work
❖ Insurance Work
❖ Frame Straightening
❖ Complete Collision & Repairs
"உங்கள் வாகனங்களை திருத்த நாங்கள் வல்லுநர்கள்"
R.A.F
Business Hours: Mon to Fri; 8am - 6pm & Sat; 8am - 2pm
435 MIDWEST ROAD, UNIT # B3, SCARBOROUGH, ONTARIO, M1P 3A6
Email: auto@realautofinish.com
www.realautofinish.com

Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

Neilson / Mclevin
Bedrooms: 3+1 Toronto
Washrooms: 2 $349,900

Mclevin/Sewells
Bedrooms: 3+1 Toronto
Washrooms: 4 $400,000

Staines/ Steeles
Bedrooms: 3 Toronto
Washrooms: 3 $499,900

Staines / Steeles
Bedrooms: 4 Toronto
Washrooms: 3 $529,000

Finch / Staines
Bedrooms: 3+1 Toronto
Washrooms: 4 $549,900

Pickering Beach/Emperor
Bedrooms: 3 Ajax
Washrooms: 3 $372,800

Audley/ Taunton
Bedrooms: 3 Ajax
Washrooms: 3 $379,000

Church & Rossland
Bedrooms: 4 Ajax
Washrooms: 3 $379,900

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA
Realty Inc., Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S 0C2
Office: 416-321-6969 Fax: 416-321-6963
REALTOR MLS MULTIPLE LISTING SERVICE
Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Designed by: Qcopy.ca

# இந்தியத் திரைப்படத்தேசிய விருதுகள் அறிவிப்பு!

இந்திய திரைப்படத்துறைக்கு வழங்கப்படும் உயர்விருதான தேசிய விருதுகள் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் இயக்கி வெளியான சிறந்த திரைப்படங்களுக்கு மத்திய அரசின் சார்பில் இத்தேசிய விருது வழங்கப்படும். இந்நிலையில் 2011ம் ஆண்டிற்கான 59வது தேசிய திரைப்பட விருதுகள் புதுடெல்லியில்





அறிவிக்கப்பட்டன. அதில் தமிழில் சிறந்த பிராந்திய மொழி படத்துக்கான தேசிய விருது விமல் நடித்த ‘வாகை சூடவா’ என்ற படத்துக்கு கிடைத்துள்ளது. திரையுலகில் ‘தி டர்டி பிச்சர்ஸ்’ என்ற இந்தி படத்தில் நடித்ததற்காக நடிகை வித்யா பாலனுக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டது. மேலும் மறைந்த சில்க் சுமிதாவின் வாழ்க்கை வரலாற்றை மையப்படுத்தி இப்படம் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த நடிகருக்கான தேசிய விருது தியோல் என்னும் மராத்தி படத்தில் நடித்த. கிரிஷ் குல்கர்னிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த பொழுது போக்கு படத்துக்கான தேசிய விருது ‘அழகர்சாமியின் குதிரை’ என்ற தமிழ் படத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருது இப்படத்தில் நடித்த அப்புகுட்டிக்கு கிடைத்துள்ளது. சிறந்த படத்தொகுப்புக்கான தேசிய விருது ‘ஆரண்ய காண்டம்’ என்ற தமிழ் படத்தொகுப்பாளர் பிரவீனுக்கு கிடைத்துள்ளது. அறிமுக இயக்குனருக்கான இந்திரா விருது ஆரண்யகாண்டம் படத்தின் தியாகராஜா குமாரரா-ஜாவுக்குக் கிடைத்துள்ளது.

தமிழ் நடிகையாக இருந்து தற்போது இயக்குநர் அவதாரம் எடுத்துள்ள ரேவதியின் குறும்படம் 59-வது தேசிய விருதுக்கு தேர்வாகியுள்ளது. “ரெட் பில்டிங் வேர் தி சன்செட்ஸ்” என்று பெயரிடப்பட்டுள்ள அந்த குறும்படம், திரைப்படம் அல்லாத பிரிவின் கீழ் சிறந்த படத்திற்கான விருதிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

தமிழ் நடிகையாக இருந்து தற்போது இயக்குநர் அவதாரம் எடுத்துள்ள ரேவதியின் குறும்படம் 59-வது தேசிய விருதுக்கு தேர்வாகியுள்ளது. “ரெட் பில்டிங் வேர் தி சன்செட்ஸ்” என்று பெயரிடப்பட்டுள்ள அந்த குறும்படம், திரைப்படம் அல்லாத பிரிவின் கீழ் சிறந்த படத்திற்கான விருதிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இப்படம் குறித்து ரேவதி கூறுகையில், “இது ஒரு 17 நிமிடங்கள் ஓடும் குறும்படம். பெற்றோர் அவர்களது குழந்தைகளை எவ்வாறு வளர்க்கிறார்கள் என்பதை மையமாகக் கொண்ட இப்படம் தேசிய விருதினை வென்றுள்ளது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

நாங்கள் இப்படத்தை தயாரிக்கும் போது பெற்றோர் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற லட்சியத்துடன் தான் உருவாக்கினோம். எந்த விருதினையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இது எதிர்பாராத மகிழ்ச்சி என்றார்” அவருக்கே உரித்தான புன்னைகையுடன்.

நடிகை ரேவதி ஏற்கனவே “தேவர் மகனில்” நடித்ததற்காக சிறந்த துணை நடிகைக்கான தேசிய விருதினையும், ஆங்கில குறும்படத்திற்காக மற்றொரு தேசிய விருதினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.














